அறைவு 03 இயம் 52 July 04-10, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 24 + 4 விலை : 30.00

SPONSOR VISA
IELTS
@
VBC
Veal Business College
026 2227622 - 07702 03 201

HELLO MOBILE WORLD



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

### - அரசின் முகத்திரை கிழிகின்றது -

# ஐ.நா. விற்குக் கடிதம்




உள்ளகப் பொறிமுறையை உருவாக்குவது தொடர்பில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுடன் எந்தவொரு கலந்தாய்வையும் இலங்கை அரசாங்கம் செய்ய - வில்லை என்று சுட்டிக்காட்டி ஐ. நா மனித உரிமை ஆணை - யாளருக்கு வடக்குகிழக்கைச் சேர்ந்த பதினைந்து வெகுசன அமைப்புக்கள் சேர்ந்து கூட்டாக கடிதம் ஒன்றை இன்று அனுப்பி வைத்துள்ளன.

தமிழ் சிவில் சமூக அமையம், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம், யாழ்ப்பான பல்கலைக்கழக மாணவர்கள் சங்கம், வவுனியா பிரசைகள் குழு, மன்னார் பிரசைகள் குழு, காணாமல் போனோரின் உறவினர் சங்கம், கிழக்கு சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் கூட்டமைப்பு உட்பட வடக்கு கிழக்கை சேர்ந்த.....

21

## தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கா? அழிவிற்கா உங்கள் வாக்கு!

### -கஜேந்திரகுமார் பொன்னம்பலம்-



தமிழ் மக்கள் தமிழ்தேசியத்தின் உயர்ச்சிக்கா? அழிவுக்கா? வாக்களிக்கப் போகிறார்கள் என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும் என தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் இனப்பிரச்சனைக்கான தீர்வாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரு தேசங்கள் ஒரு நாடு என்னும் கொள்கை அடிப்படையில் தொடர்ந்தும் பயணிக்கும் எனத் தெரிவித்துள்ள அவர்


21

## நாடாளுமன்றம் முன்பாக ஆர்ப்பாட்டம்

மீள் குடியேற்றுவதாக வெற்று வார்த்தை -களால் ஏமாற்றப்பட்டுள்ள சம்பூர் மக்கள் இலங்கையின் நாடாளுமன்றின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டு-ள்ளனர்.

சம்பூரில் இருந்து இடம்பெயர்த்தப்பட்ட மக்கள் கடந்த பத்து வருடங்களாக இடைத்தங்கல் முகாம்களான கிளிவெட்டி, மணற் சேனை, பட்டித்திடல்...

21




## "முஸ்லிம்களுக்கு அடிபணியும் தமிழ்த் தலைமைகள்"



-தயாகமகே-

கிழக்கு மாகாண-த்தில் சபையிலுள்ள இரண்டு மாகாண அமைச்சர்களாலும் தமிழர்களுக்கு என்ன பயன் கிடைத்துள்ளது என ஐ.தே கவின் தேசிய அமைப்பா-ளரும் அம்பாறையைக் கிழக்கு மாகாண சபையில் பிரதிநிதித்துவப்படுத்திய உறுப்பினருமான தயாகமகே கேள்வி எழுப்பியுள்ளார்.

அம்பாறையில் தமிழ் மக்களுக்கு திருக்கோயில் விநாயகபுர மைதானத்தில் இடம்பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இக்கேள்வியை எழுப்பியுள்ளார்.

21


## மாகாணக் கல்வி அமைச்சர் தேசியக் கொடியை ஏற்ற மறுத்தாரா?



அண்மையில் நடைபெற்ற சஞ்சிகை வெளியீட்டு விழாவில் மாகாணக் கல்வி அமைச்சர் திரு.தண்டாயுதபாணி தேசிய கொடியை ஏற்றி வைக்க அழைக்கப்பட்ட போதும் அதனை தவிர்த்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நடைபெற்ற 'நித்திலம்' என்ற வருடாந்த சஞ்சிகை வெளியீட்டு விழாவிலேயே

21




கூகுள் சர்வதேச வரைபடச் சேவையில் திருகோண மலை மாவட்டத் தரவுகளை மேம்படுத்தும் நடவடிக்கை கடந்த வாரம் நடைபெற்றது.

அதற்கென விசேட கதுவியுடன் கூடிய வாகனங் கள் பயன்படுத்தப்பட்டன.

தமிழர்களின் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு

ஒரு நாடு இரு தேசம்

தாயகம், தேசியம் சுயநிர்ணயம்




Scanned by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## தமிழர் போராட்டமும் அதன் போக்கும்!

கடந்த வாரத்தில் தொடர்ந்து நான்கு நாட்களாக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் காணாமற்போனோரைக் கண்டறியும் சனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெற்ற மூதூர் பிரதேச செயலக முன்றல் மற்றும் திருகோணமலை மாவட்டச் செயலாளர் அலுவலக முன்றல் ஆகியவற்றில் தமது எதிர்ப்பைக் காட்டி பகிஸ்கரிப்பு போராட்டத்தையும் தொடர்ந்து நடாத்தியிருந்தனர்.

எனினும் ஆணைக்குழுவும் தமது அமர்வுகளை அந்நான்கு நாட்களாக தொடர்ந்த வண்ணமே இருந்தது. நல்லாட்சி என்ற கோதாவில் களம் இறங்கியுள்ள அரசாங்கமும் ஆணைக்குழுவின் அமர்வுகளை மக்கள் எதிர்ப்பதையிட்டுக் கிஞ்சித்தேனும் கவலைகொள்ளாது ஆணைக்குழுவைத் தொடர்ந்து அமர்வுகளைச் செய்ய அனுமதித்திருந்ததுடன் அந்நாட்களில் மக்கள் நடாத்திய போராட்டத்தைக் கவனத்தில் எடுக்கவில்லை என்பதே உண்மையாக இருந்தது.

ஆணைக்குழுவிற்கு எதிரான காணாமல் ஆக்கப்பட்டவர்களின் இந்தப் போராட்டமானது வெறுமனே சில காரணங்களுக்காக நடத்தப்படவில்லை. மிக முக்கியமாகக் குறித்த ஆணைக்குழுவும் ஏனைய சனாதிபதி ஆணைக்குழுக்களைப் போல மக்களை ஏமாற்றும் செயற்பாடுகளுள் ஒன்று என மக்கள் நம்பத் தொடங்கியிருப்பதே உறுதியாகிவரும் இப்போராட்டங்களுக்குக் காரணமாகும்.

அவ்வாறு மக்கள் நம்பத் தொடங்கியிருப்பதற்கு முக்கிய இரு காரணங்கள் உண்டு.

முதலாவதாக இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன் உருவாக்கப்பட்ட காணாமற் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழு இற்றைவரை காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரையேனும் கண்டு பிடிக்கவோ அல்லது அவர்கள் யாரால் காணாமல் ஆக்கப்பட்டனர் என்பதை உரியவர்களிடம் ஆதாரத்துடன் வழங்கவோ அல்லது அவ்வாறு காணாமல் போகச் செய்யக் காரணமானவர்களைக் கண்டறிந்து சட்டத்தின் முன்நிறுத்தி விசாரிக்கவோ இல்லை.

இரண்டாவதாக சனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை இன்று வரை வெளியிடப்படவில்லை. அந்த இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்டால்தான் காணாமற் போனோரை கண்டறியும் ஆணைக்குழு இன்று வரை என்ன செய்துள்ளது என்பது தெளிவாகும்.

இவ்வாறு பல்வேறு சந்தேகங்களை தன்னகத்தே கொண்டுள்ள சனாதிபதி ஆணைக்குழுவை எதிர்த்து நடத்தப்பட்ட மக்கள் போராட்டத்தின் முதல் நாளில் வடக்கு கிழக்கில் உள்ள ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்ட மக்களின் உறவுகள் திருகோணமலைக்கு வருகை தந்து இப்போராட்டத்தில் பங்கு பற்றியிருந்தமை சிறப்பானதாகும்.

எனினும் தமிழர்களின் அரசியல் தலைமையானது இப்போராட்டம் தொடர்பாக தொடர்ந்தும் தனது பாராமுகத்தையே காட்டி வருகிறது.

மக்கள் இவ்வாணைக்குழுவை புறக்கணிப்பதற்கு கூறும் பல காரணங்களை கருத்திலெடுத்து அவற்றின் உண்மை நிலையை சீர் தூக்கி பார்க்கும் நிலையில் தமிழ் அரசியல் தலைமை இல்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சொந்தங்கள் தாம் அரசினால் கைவிடப்பட்டுள்ளதாக உணரும் அதே வேளை தமது அரசியல் தலைமைகளினாலும் கைவிடப்பட்டுள்ளதாகவே உணரத் தலைப்பட்டுள்ளனர்.

ஆணைக்குழுவிற்கு எதிரான போராட்டமானது மக்களால் தாமாகவே முன்னெடுக்கப்பட்டு அச் செய்தி உலகிற்குச் செல்லும் போது உலகிற்கு உண்மைநிலை விளங்கத் தொடங்கிவிடும்.

ஆணைக்குழுவை எதிர்க்கும் போராட்டங்கள் தம்மைப் பாராமுகமாக விட்டுவிட்ட நல்லாட்சி அரசிற்கு எதிராகவும் தமிழ் அரசியல் தலைமைக்கு எதிராகவும் திரும்பும் வாய்ப்புக்கள் பலமாக எழுந்துள்ளன.

தமது போராட்டம் சரியான திசையில் நகர்வதைத் தெரிந்து கொள்ளும் மக்கள் தமது சக்தியின் மீது நம்பிக்கை கொண்டு விட்டால் அச் சக்தியைத் திரட்டி தம்மைப் பாராமுகமாகக் கைவிட்டவிட்ட அரசிற்கு எதிராகவும் அந்த அரசிற்கு முண்டு கொடுக்க முனையும் தமிழ் அரசியல் தலைமைக்கு எதிராகவும் திரும்பும் தூரம் வெகு தொலைவில் இல்லை.

சிந்திப்பார்களா!!!

## தூதுவர்கள் கிழக்கிற்கு வருகை

புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கைத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு இடையிலான சந்திப்பொன்று கடந்த 2ம் திகதி நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தின் மீள்குடியேற்றம், கைத்தொழில், விவசாயம், கல்வி, மீன்பிடி, வீதி அபிவிருத்தி, முதலீடுகள், தொழில்வாய்ப்புக்கள் மற்றும் உல்லாசத்துறை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இந்த கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் பங்கேற்ற தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளுக்கு அறிவிப்பதாக வாக்குறுதிய -ளித்துள்ளனர்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் எஸ். தண்டாயுதபாணி உள்ளிட்ட மாகாண சபையின் பல அதிகாரிகள் இதில் பங்கேற்றிருந்தனர்.

அதேவேளை தூதுவர்கள் சம்பூர் கட்டுப்பாட்டு நிலப்பரப்பிற்குச் சென்று பார்வையிட்டதுடன் மக்களின் குறைகள் தொடர்பாக உரையாடியுள்ளனர்.

## சித்திரவதைக்கு எதிரானதினம் நினைவு கூறப்பட்டது!!!

சித்திரவதைக்கு எதிரான சர்வதேசத் தினம் கடந்த 26ம் திகதி சர்வதேசமெங்கும் நினைவுகூறப்பட்டதையொட்டி திருகோணமலையிலும் 27ம்திகதி அத்தினம் நினைவு கூறப்பட்டது.

மனித உரிமைகள் விருத்திக்கும் பாதுகாப்பிற்குமான அமைப்பால் நகரசபை மண்டபத்தில் 27ம் திகதி காலை 10மணிக்கு நடைபெற்ற இந் நிவைவகூறலைக் குறித்த மையத்தின் தலைவர் வண. வீ. யோகேஸ்வரன் அடிகள் தலைமை தாங்கி நடாத்திவைத்தார்.

சித்திரவதைகளால் அவலப்பட்ட மக்கள் சிலர் தமது அனுபவங்களை அங்கு நேரடியாக வெளிப்படுத்தினர். அதேவேளை அவ்வனுபவங்களை வாழ்வரங்கு என்ற அரங்கச் செயற்பாட்டின் ஊடாகவும் தத்துரூபமாக மனித உரிமைகள் விருத்திக்கும் பாதுகாப்பிற்குமான அமைப்பின் இளையோரால் நிகழ்த்திக் காட்டப்பட்டன.

காணாமல் ஆக்கப்பட்டவரின் சார்பில் குணசீலி கவிதையொன்றை வாசித்தளித்திருந்தார்.

சித்திரவதைகள் தொடர்பான பல்வேறு விடயங்களை வெளிப்படுத்திய வண. யோகேஸ்வரன் அடிகள் "எங்களுக்காகவும் பேசுங்களேன்" என்ற தொனிப் பொருளிலேயே அந் நினைவுகூரல் நடைபெறுவதாகவும் தெரிவித்தார். சித்திரவதைக்-குட்பட்டவர்களுக்காகப் பேச வேண்டியவர்களாக நாம் எல்லோரும் இருப்பதாகவும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினர் திருமதி. தே. நிர்மலா அவர்களும் சித்திரவதையும் ஊடகமும் என்ற தலைப்பில் மலைமுரசின் ஆசிரியர் இரா.ஸ்ரீஞானேஸ்வரனும் உரையாற்றியிருந்தனர்.

## பாடசாலைக்கு நீர்வினியோகத்தைச் செய்யும் முயற்சியில் மலைமுரசு

நீண்டகாலமாக குடிநீருக்கு அவஸ்தைப்படும் கன்னியா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு குடிநீர் வசதியை ஏற்படுத்தும் முயற்சியில் தொழிலதிபர் திரு. புஸ்கரன் கடந்தவாரம் மலைமுரசின் ஆசிரியர். இரா.ஸ்ரீஞானேஸ்வரனுடன் குறித்த பாடசாலைக்குப் பயணித்திருந்தார்.

பலவருடங்களாக குடிநீரைப் பெற்றுக்காள்ள இடரினை அனுபவித்து வருவதாக அப்பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

கல்வித்திணைக்களம் உட்பட கல்வி அமைச்சிற்கும் இவ்விடயம் தெளிவாக எடுத்தியம்பப் பட்டதாகத் தெரிவித்த அதிபர் தற்போதுவரை தண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்றும் தெரிவித்தார்.

விடயத்தை உடனடியாகவே நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்ததுடன் நீர்வழங்கலுக்கு ஏற்படப்போகும் முழுச் செலவையும் தாமே பொறுப்பேற்பதாக திரு. புஸ்கரன் உறுதியளித்துள்ளார்.





சித்திரவதைக்கு எதிரான தினம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# மட்டக்களப்புச் செய்திகள்

## தமிழ்மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயல்படவுள்ளோம் - சி.சந்திரகாந்தன்

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களை தெரிவு செய்தல் தொடர்பாகவும் தேர்தலில் போட்டியிடும் விதம் தொடர்பாகவும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தேசிய அமைப்பாளர் பா.தவேந்திரராஜா தலைமையில் 5 பேர் கொண்ட விஷேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார். கட்சியின் தலைவர் சி.சந்திரகாந்தன் தலைமையில் வாழைச்சேனை வாசஸ்தலத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி விஷேட குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மிகத் தீர்க்கமாக தமிழ் மக்களை நில, நிர்வாக, பொருளாதார அபிவிருத்தி ரீதியாக பாதுகாப்பதற்கு பூரணத்துவமாக அர்ப்பணிப்புடன் செயற்படக் கூடிய வேட்பாளர்களை தெரிவு செய்யவுள்ளதுடன் தமிழரின் உரிமை மற்றும் அபிவிருத்தி என்பவற்றை சீராக பேணக்கூடிய அரசியல் தலைமைகளை தேர்தலில் களமிறக்கவும் தீர்மானித்துள்ளது என்றார்.

## உதயசிறிக்கு அரசாங்க வேலை

கடந்த பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி, சிகிரியா பளிங்குச் சுவரில் தனது பெயரை எழுதிய குற்றச்சாட்டின் பேரில் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் 27 வயதுடைய சின்னத்தம்பி உதயசிறி ஜனாதிபதியின் பொது மன்னிப்பையடுத்து விடுதலையானார்.


தனது மகளுக்கு அரசாங்க வேலையை பெற்றுத்தருமாறும் உதயசிறியின் தாய், முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருந்ததையடுத்து, மிகவிரைவில் வைத்தியசாலையில் அரசாங்க வேலையொன்றை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.



## சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பணிநீக்கம்

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து கைதியொருவர் கடந்த சனிக்கிழமை அதிகாலை தப்பியோடிய சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் நால்வர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். குறித்த சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள் நால்வரும் பதவி நீக்கம் செய்யப்பட்டதுடன் இச்சிறைச்சாலையின் பொறுப்பதிகாரியும் பொலன்னறுவை சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அத்துடன், தப்பியோடிய கைதியை கைது செய்யும் நடவடிக்கையை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## அதிபர் நியமனச் சிக்கலில் கூழ்கம்




மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள இப்பாடசாலைக்கு திடீரென புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்த பெற்றோரும் மாணவர்களும், ஏற்கெனவே இப்பாடசாலையில் கடமையாற்றிவந்த அதிபரே வேண்டும் எனக் கோரி வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இந் நிலையில், இப் பாடசாலைக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விஜயம் செய்த கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கும் பெற்றோருக்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதற்கமைய இப்பாடசாலையில் ஏற்கெனவே கடமையாற்றிவந்த அதிபர் அதே பாடசாலையில் தொடர்ந்து கடமையாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பாடசாலைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிபருக்கு பிறிதொரு பாடசாலையில் நியமனம் வழங்கப்பட்டது.

இதை அடுத்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோரால் இனிப்பு வழங்கி கடந்த வியாழக்கிழமை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

## குடிநீர் வசதி

மட்டக்களப்பு, காத்தான்குடியில் 25 குடும்பங்களுக்கு குடிநீர் வசதி நேற்று வெள்ளிக்கிழமை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீட்டுக்கும் 8,000 ரூபாய் செலவில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக பெண்களுக்கான வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சல்மா ஹம்சா தெரிவித்தார்.



## ஆட்டோ - ஆட்டோ மோதல்



களுவாஞ்சிக்குடி பட்டிருப்பு வீதியில் கடந்த வியாழக்கிழமை இரு எதிரெதிரே வந்து ஆட்டோக்கள் மோதியதால் மூவர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தமது கட்டுப்பாட்டை மீறியதாலேயே இவ்விபத்து நிகழ்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

## 14 வயது சிறுமி வன்புணர்வு



ஏறாவூர் பிரிவுக்குட்பட்ட ஐயன்கேணி கிராமத்தில் 14 வயது சிறுமியொருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயற்சித்த குற்றச்சாட்டில் 62 வயதான வயோதிபரொருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக ஏறாவூர் காவல்துறையினர் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை குறித்த சிறுமி விளையாடி விட்டு வீடு செல்லும் வழியில் சந்தேக நபரான இந்த வயோதிபர் அயலிலுள்ள பற்றைகளுக்குள் சிறுமியைக் கடத்திச் சென்று துஷ்பிரயோகம் செய்ய முயற்சி செய்துள்ளார். கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படும் சந்தேக நபரான வயோதிபருக்கு எட்டுப் பிள்ளைகள் உள்ளனர் என்று விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

## பொதுச்சந்தையை திறக்க திட்டம்

போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் என்.வில்வரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், 1957ஆம் ஆண்டிலிருந்து 1990ஆம் ஆண்டு வரை படுவான் கரைப் பிரதேசத்தில் மிகவும் பெயர் பெற்று விளங்கிய இப்பொதுச் சந்தை கட்டடத்தொகுதி 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் தூர்ந்து போய் பயன்படுத்த முடியாமல் காணப்பட்டு வருகின்றது. 2009ஆம் ஆண்டு நெக்டெப் திட்டத்தின் கீழ், 4.5 மில்லியன் ரூபாய் செலவில் புதிய கட்டட வசதியும் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது காணப்படும் சூழ்நிலையில் இப்பொதுச் சந்தையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்போவதாக போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் என்.வில்வரெத்தினம் தெரிவித்தார்.



## தூக்கத்தினால் இழந்த ரூ125,000

களுவாஞ்சிக்குடி பெரியகல்லாற்றுப் பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் வயோதிபப் பெண்ணொருவர் உறங்கிக்கொண்டிருந்தபோது, அவரது சுமார் 125,000 ரூபாய் பெறுமதியமான இரண்டரை பவுண் தங்கச்சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி காவல்துறையினர் தெரிவித்தனர்.

## உளவளத்துணை செயலமர்வு

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் உளவளத்துணை அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திருமதி.பிறேமா கௌரீசனின் ஏற்பாட்டில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு உளவளத் துணை தொடர்பான செயலமர்வு, ஒந்தாச்சிமடம் உளவளத்துணை நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. 40 ஆசிரியர்கள் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

பாடசாலை மட்டத்தில் காணப்படும் பிறள்வான பிள்ளைகளை இனங்கண்டு, அவர்களை சமூகத்தில் இணைத்தல் மற்றும் பிள்ளைகளை துஸ்பிரயோகங்களிலிருந்து தடுத்தல் ஆகிய பல விடயங்கள் இதன்போது எடுத்துரைக்கப்பட்டதாக மண்முனை தென் எருவில் பற்று சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகஸ்தர் கே.புவிதரன் தெரிவித்தார்.

## போக்குவரத்து அதிகார சபை திறந்து வைப்பு

தேசிய போக்குவரத்து அதிகாரசபையின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் கடந்த புதன்கிழமை காலை திறந்துவைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் சமந்த வி.அபேவிக்ரம தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் பிரதம அதிதியாகவும் சிறப்பு அதிதிகளாக கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், மாகாண சபை உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், மா.நடராஜா மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

இதுவரை காலமும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் தற்காலிக கட்டடத்தில் இயங்கிவந்த தேசிய போக்குவரத்து அதிகாரசபையின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம், கிழக்கு மாகாணசபையின் ஐந்து மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவுக்கு அனுமதி-

## பொதுத்தேர்தலில் சாதாரண வேட்பாளராகக் களத்தில்!!!



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் போட்டியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான இணக்கப்பாட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் கூட்டமைப்பின் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த அறிவித்துள்ளார்.

போட்டியிட அனுமதிக்குமாறு விடுக்கப்-பட்ட பல்வேறுபட்ட கோரிக்கைகளை கட்சியின் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்திருந்தார். ஆனால் நேற்று காலை இடம்பெற்ற கலந்துரையாடலின் பிரகாரம் இணக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் மகிந்த ராஜபக்சவிற்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை மையப்படுத்திய ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் போட்டியிட அனுமதிக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலகமோ ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியோ அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை

அதேவேளை மகிந்த ராஜபக்சவிற்கு போட்டியிட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதித்தமை தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சி இதுவரை கருத்துக்கள் எதனையும் வெளியிடவில்லை என கொழும்பு செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

# மலைமுரசு MALAIMURASU தேசிய செய்திகள்

## புதிய கட்சி உதயம் "ஜனநாயகப் போராளிகள்"

முன்னாள் விடுதலைப் புலிகளின் இயக்கப் போராளிகளின் பிரதிநிதிகளும் அவர்களது ஆதரவாளர்களும், நலன்விரும்பிகளும் நேற்று காலை யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடி பொதுத்தேர்தல் நெருங்கிவரும் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் தாம் ஆற்றக்கூடிய, ஆற்றவேண்டிய ஜனநாயகப் பங்குபணி குறித்து சுமார் மூன்று மணி நேரம் ஆராய்ந்தனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த சிரேஷ்ட போராளிகள் பலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு, பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்து தீர்மானங்களை எடுத்தனர்.

ஒரு சொட்டு தண்ணீர் கூட அருந்தாமல் அறப்போர் நிகழ்த்தி, தன்னையே ஆகுதியாக்கிய தியாகி திலீபன் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வீரச்சாவடைந்த நல்லூர் கோயில் வீதியில், நேற்று நண்பகல் ஒன்றுகூடி தியானம் அனுஷ்டித்த அவர்கள், அதற்கு முன்னதாகத் தாம் எடுத்துக்கொண்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கியப்பட்டுச் செயற்படுவது என்று அங்கு பிரதிக்ஞையும் செய்துகொண்டனர்.

## 10 வருட கடூழிய தண்டனை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சராக பதவி வகித்த காலத்தில் அவரை கொலை செய்வதற்கு முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவருக்கு 10 வருடங்கள் கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பொலன்னறுவை மேல்நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் இந்த வழக்கு, நேற்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதிபதி இவ்வாறு தீர்ப்பளித்தார்.

அத்துடன் 10 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளதுடன், தண்டபணத்தை செலுத்த தவறின் மேலதிகமாக ஒருவருடம் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## கடத்தப்பட்ட குழந்தையின் தாய் முன் பின் முரணாகத் தகவல்

கிளிநொச்சியில் கடந்த சில தினங்களுக்கு முன் காணாமற்போன மூன்று வயதுக் குழந்தையின் தாய் முன்னுக்குப் பின் முரணாக வாக்குமூலம் அளித்து வருவதாகவும், இது குறித்த விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளதாகவும் காவல் துறையினர் தெரிவித்தனர். குழந்தை பயணிப்பதாக தகவல் கிடைத்ததாக தாயார் தெரிவித்தார். குழந்தையை யாழ்ப்பாணத்தில் தெரிந்த ஒருவரிடம் ஒப்படைத்ததாக வாக்குமூலமளித்தார். அந்தத் தகவலின் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அது பொய் வாக்குமூலம் என்பது தெரியவந்தது. அதன் பின்னர் களுத்துறை பகுதிக்கு குழந்தை கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டடையடுத்து அதனடிப்படையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## தபால்கள் கொழும்பில் தேக்கம்

கொழும்பு மத்திய தபால் பரிமாற்றத்தில் பதிவுத் தபால்கள் தேங்கிக் கிடப்பதை தவிர்ப்பதற்காக விசேட திட்டமாக தபால் அலுவலகங்களில் சேர்கின்ற பதிவுத் தபால்களை அந்தந்த தபால் அலுவலகங்களுக்கே நேரடியாக அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தபால் மாஅதிபர் ரோஹண அபேரத்ன குறிப்பிடுகின்றார்.

## தனித்துப் போட்டி - ஆனந்த சங்கரி

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனித்து போட்டியிட தீர்மானித்துள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தனித்து போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி சிறிது காலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டது. ஆனந்த சங்கரி, விடுதலைப் புலிகளை விமர்சித்து பல அறிக்கைகளை வெளியிட்டதன் காரணமாக ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளால், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகியது.

இதனால், கடந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்தே போட்டியிட்டது. அதேவேளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இம்முறை பொதுத் தேர்தலில் தனித்து போட்டியிட தீர்மானித்துள்ளது.


## புனரமைக்கப்படுமா? ஆனையிரவு உப்பளம்

1938 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை இயங்கி வந்த ஆனையிறவு உப்பளம் யுத்தம் காரணமாக செயலிழந்தது. வருடாந்தம் ஒரு இலட்சம் மெற்றிக் தொன் உப்பை உற்பத்தி செய்யும் நோக்கில் கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்ட முயற்சி இதுவரை பலனளிக்கவில்லை.

வருடாந்தம் 60 ஆயிரம் தொடக்கம் 80 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பினை உற்பத்தி செய்த ஆனையிறவு உப்பளம் செயற்படுத்தப்படுமாயின் தொழில் வாய்ப்புக்கள் மாத்திரமல்லாது, உப்பினை ஏற்றுமதி செய்து நாட்டின் வருமானத்தையும் அதிகரிக்க முடியும்.

## களவாக நியமனங்கள் வழங்கலை நிறுத்தக் கோரிக்கை

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் கிழக்கு மாகாண சபையின் ஊடாக இரவோடு இரவாகவும், விடுமுறை தினங்களிலும் அரச நியமனங்கள் வழங்கப்பட்டு வருவதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. உள்ளூராட்சி திணைக்களங்களுக்கும் நியமனங்கள் வழங்கப்படுவதுடன் சுகாதார அமைச்சின் சிற்றூழியர்களுக்கு நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இவற்றை தடுத்து நிறுத்துமாறும் தேர்தல்கள் ஆணையாளருக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தனால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



## போதைப் பொருளுடன் பெண் கைது

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த கொழும்பு பெண் ஒருவர் கைதாகியுள்ளார். யாழ்ப்பாணத்தில் இருந்து பேருந்து மூலம் கொழும்புக்கு ஹெரோயின் போதைப் பொருட்களுடன் பயணித்த வேளையில் அவர் கைதானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரிடம் இருந்து சில கிராம் ஹெரோயின் போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.




## ஒருநாள் சேவை கட்டண அதிகரிப்பு

தேசிய அடையாள அட்டை ஒருநாளில் பெற்றுக்கொள்ளும் சேவைக்காக அறவிடப்படும் கட்டணம் இருமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இந்த சேவைக்காக அறவிடப்படும் கட்டணம் 500 ரூபாவிலிருந்து 1000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## தம்மைத் தாக்கியதாக குற்றச்சாட்டு

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 14 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் 17ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. நாட்டின் கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டில் கடந்த 2 ஆம் திகதி மன்னார் கடற்பரப்பில் இந்த மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்களின் மூன்று படகுகளும் கடற்படையிரால் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன.

இதனையடுத்து தமிழக மீனவர்கள் வவுனியா சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட வேளை இலங்கையைச் சேர்ந்த அடையாளம் தெரியாத குழுவொன்று தம் மீது தாக்குதல் நடத்தியதாக தமிழகத்தின் நாகபட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 100 மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## ரஷ்யா மீதான தடை நீட்டிப்பு

கிறீமியாவிலும், கிழக்கு உக்ரைனிலும் ரஷ்யா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் காரணமாக, அந்நாடு மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவ்வொன்றியத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். லக்ஸம்பேர்க்கில் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் சந்திப்பிலேயே இத்தடையை நீடிப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கிறீமியாவை ரஷ்யப் படைகள் பலவந்தமாகக் கைப்பற்றிய குற்றச்சாட்டிலும் உக்ரைனிலுள்ள பிரிவினைவாதப் போராளிகளுக்கு இராணுவ உதவிகளை வழங்கிய குற்றச்சாட்டிலும், கடந்தாண்டு இந்தத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அல் ஜசீரா ஊடகவியலாளர் விடுவிப்பு

ஜேர்மனியின் பேர்லின் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, அல் ஜசீரா ஊடக நிறுவனத்தின் சிரேஷ்ட ஊடகவியலாளர் அஹமட் மன்சூர் விடுவிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. எகிப்து அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். எகிப்தில் 2003ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவப் புரட்சியையடுத்து, புதிதாகப் பதவியேற்ற அரசாங்கம், ஊடகவியலாளர்கள் மீது அதிகபட்சமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

அதன்படி அவருக்கான பிடிவிறாந்தும் பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், அவர் விடுவிக்கப்பட்டதோடு, அவர் ஜேர்மனியை விட்டு வெளியேறவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வழக்கறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

## தஞ்சம் கோரி கடிதம்



அமெரிக்காவின் ரகசிய தகவல்களை வெளியிட்டது உள்ளிட்ட பல குற்றங்களால் அமெரிக்க அரசாங்கத்தால் பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள விக்கி லீக்ஸ் நிறுவனரான ஜுலியன் அசான்ஜே பிரான்ஸ் அரசாங்கத்திடம் தஞ்சம் கோரி கடிதம் எழுதியுள்ளார். ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளை அமெரிக்க உளவு நிறுவனம் ரகசியமாக கண்காணித்து வருவதுடன், ஐரோப்பிய தலைவர்களின் உரையாடல்களை அமெரிக்கா ஒட்டு கேட்டதாக விக்கி லீக்ஸ் மூலம் ஜுலியன் அசான்ஜே தகவல்களை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரு உயிர்களை காப்பாற்றிய இருவர்



குறித்த கட்டிடத்தில் கரும்புகையுடன் தீ பரவியதையடுத்து அதிலுள்ளவர்களை காப்பாற்றும் பொருட்டு இரு இளைஞர்கள் குறித்த கட்டடத்தின் ஜன்னல் அருகில் நின்றுகொண்டு உள்ளே மாட்டிக்கொண்ட இரு பெண்களையும் ஜன்னலின் வழியே குதிக்குமாறு தெரிவித்த இரு இளைஞர்களும் அந்த பெண்கள் இருவரையும் கைகளால் ஏந்தி அவர்களின் உயிரை காப்பாற்றினர். இதேவேளை குறித்த தீ விபத்தில் எவருக்கும் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ரமழான் வேளையில் யுத்த நிறுத்தம்

ரமழான் காலத்தில் யேமனில் போரை நிறுத்துமாறு, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் கோரிக்கை விடுத்துள்ளார். மனிதாபிமான அடிப்படையில் செயற்படுமாறு அவர் இதன்போது தெரிவித்துள்ளார். ஈரான் ஆதரவுபெற்ற போராளிகளுக்கும் அரசாங்க சார்புப் படைகளுக்குமிடையில் ஆரம்பித்த ஆயுதச் சண்டைகள், தற்போது பல்வேறு அமைப்புகளுக்கிடையிலான உள்நாட்டுப் போராக மாறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் நில முடக்கம்

இந்தியாவில் நடைபெற்ற வங்கிக் கடன் மோசடி தொடர்பாக, அமெரிக்காவில் உள்ள ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள ஆயிரத்து 280 ஏக்கர் நிலத்தை, அமலாக்கப் பிரிவு முடக்கியுள்ளது. ஜூம் டெவலப்பர்ஸ் என்ற நிறுவனம் மூலம், விஜய் சவுத்ரி என்பவர், பல்வேறு வங்கிகளிடம் இருந்து, 2 ஆயிரத்து 200 கோடி ரூபாய் கடன் பெற்றுள்ளார். ஐரோப்பாவில், ரியல் எஸ்டேட்டில் முதலீடு செய்வதற்காக பெறப்பட்ட கடனை, அவர் வேறு வழிகளில் திருப்பி விட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## தனியார் பாடசாலைகளுக்கு வெளிநாட்டு அரச உதவி



கனடாவிலுள்ள தனியார் இஸ்லாமிய பாடசாலைகளுக்கு சவுதி அரேபிய அரசாங்கம் நிதி உதவி வழங்குகின்றமை தெரியவந்துள்ளது. ஒட்டாவாவிலுள்ள சவுதி அரேபிய தூதரகத்திற்கும் ரியாத்திலுள்ள சவுதி அரசாங்கத்திற்கும் இடையில் பரிமாறப்பட்ட இராஜதந்திர ஆணவங்களில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள 500,000 சவுதி அரேபியா தூதரக ஆவணங்களில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தனியார் பாடசாலைகளுக்கு வெளிநாட்டு அரசாங்கங்கள் நிதி உதவி அளிப்பது சட்டரீதியாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது இதன்மூலம் சவுதி அரேபியா தமது நாட்டு எல்லையை தாண்டி இரகசியமாக எவ்வாறு செயற்படுகின்றது என்பதை இந்த நடவடிக்கை எடுத்துக் காட்டுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிரியாவிலும் விமானப்படைத் தாக்குதல் தொடரும்..

சிரியாவிலுள்ள ஐஎஸ் ஆயுததாரிகளின் இலக்குகள் மீது விமானத் தாக்குதல்களை நடத்த பிரித்தானியாவை அனுமதிப்பது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்டாயம் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஈராக்கிலுள்ள ஐஎஸ் கிளர்ச்சியாளர்கள் மீது கடந்த செப்டெம்பர் மாதம் முதல் பிரித்தானிய விமானப் படையினர் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் சிரியாவிலும் தாக்குதல்களை முன்னெடுப்பது குறித்து நாடாளுமன்றம் ஆராய வேண்டும் என பிரித்தானிய பாதுகாப்புச் செயலாளர் மிச்சேல் ஃபோலன் சுட்டிக்காட்டியுள்ளார். பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரன், மேற்குலக நாடுகளுக்கு ஐஎஸ் ஆயுததாரிகள் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாகவும் தமது நாட்டிலும் பயங்கரமான தாக்குதல்களை மேற்கொள்ள திட்டமிட்டிருப்பதாகவும் கூறியிருந்தார்.

## கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் பலி

ஜேர்மனியில் அதிகாலை நேரத்தில், சந்தேகத்திற்குரிய நபர் ஒருவர் வாகனத்தில் வந்து கொண்டிருப்பதாக காவல்துறையினருக்கு தகவல் கிடைத்தது. தகவலை தொடர்ந்து, காவல்துறையினர், காருக்குள்ளேயே அமர்ந்துகொண்டு சாலையை கண்காணித்துள்ளனர். அப்போது அசுர வேகத்தில் வந்த கார் ஒன்று, பொலிசாரின் வாகனத்தின் மீது பயங்கரமாக மோதி விபத்துக்குள்ளானது. கார் மோதிய வேகத்தில் தீப்பற்றி எரிந்ததால், காருக்குள் அமர்ந்திருந்த இரண்டு காவல்துறையினரும் வெளியே வர முடியாமல் நெருப்பில் எரிந்து பலியாயினர்.

## டுனிசியா கடற்கரைத் தாக்குதல் 30 பேர் வரை பலி



டுனிசியாவில் உள்ள சௌசி கடற்கரைக்கு கடந்த வெள்ளிக்கிழமை அன்று கடல் மார்க்கமாக படகில் வந்த ஐ.எஸ் தீவிரவாதி ஒருவன், அங்கிருந்த சுற்றுலா பயணிகளை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டுள்ளான். இந்த பயங்கர தாக்குதலில் பல்வேறு நாடுகளை சேர்ந்த 38 சுற்றுலா பயணிகள் பரிதாபமாக பலியாயினர்.

இவர்களில் 30 பேர் பிரித்தானியர்கள் ஆவர், சம்பவ இடத்திற்கு டுனிசியா பொலிசார் விரைந்து வந்திருந்தால், காயம் அடைந்த 17 பேரை உயிருடன் காப்பாற்றியிருக்கலாம் ஆனால் காயம் அடைந்து ஓடுவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தவர்களை அடையாளம் கண்டு சுட்டுக்கொன்றுள்ளான்.

கடற்கரை பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த பாதுகாவலர்கள் அவனை ஹொட்டலுக்கு வெளியே விரட்டி அருகில் இருந்த வீதி ஒன்றில் சுட்டுக்கொல்லும் வரை காவல்துறையினர் வரவில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## காவலாளியை தாக்கி கைதி தப்பியோட்டம்



லண்டனில் உள்ள சிறைச்சாலை ஒன்றிலிருந்து 22வயதான கைதியை சிறை காவலரான வாகனத்தில் ஏற்றி நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றுள்ளார். அப்போது, வழியில் சிறை காவலரை கைதி கொடூரமாக தாக்கியுள்ளார். இந்த சம்பவத்தில் கடுமையாக தாக்கப்பட்டு மயக்கமுற்ற காவலரை காவல்துறையினர் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்த போதும் சிறை காவலர் இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

காவலரை கொன்றதற்காக கொலை குற்றம் சுமத்தப்பட்டுள்ள அந்த கைதி கடந்த புதன் கிழமை நீதிமன்ற விசாரணைக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# வீணையடி நீ எனக்கு...

22



– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

**–காதலன் என்கிற உரிமையோடு**
**காதலியின்**
**கைபிடிக்கும் போதுதான்**
**உலகம் முழுவதும்**
**உரிமைக்காக**
**ஏன் உயிரையே கொடுக்கிறார்கள்**
**என்பது புரியும் உங்களுக்கு–**

**– தபூ சங்கர் –**

கிழக்குப் பல்கலைக்கழகம் வெறிச்சோடிக் கிடந்தது. பல்கலைக்கழக இறுதிப் பரீட்சைகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து மாணவர்கள் அனைவருக்கும் விடுமுறை விடப்பட்டிருந்தது. மாணவர்கள் அனைவரும் தமது வீடுகளுக்கு சென்றுவிட யாழ்ப்பாண பிரதேசத்திலிருந்து வந்திருந்த ஒருசில மாணவர்களும், மாணவிகளும் மட்டுமே விடுதியில் தங்கியிருந்தனர். அவர்களுக்கும் வீடு சென்றுவிட விருப்பம் இருந்தாலும் போக்குவரத்துப் பிரச்சனை காரணமாகவும் தமது ஊருக்குப் போனால் பல்கலைக்கழகம் ஆரம்பித்தவுடன் வரமுடியுமா என்ற சந்தேகத்திலும் பலர் தமது விடுமுறை காலங்களிலும் விடுதியிலே தங்கியிருப்பது வழமையாகிவிட்டது. நுண்கலைப்பீடத்தினால் ஒழுங்குசெய்யப்படவிருந்த நாடக விழாவில் முதலாம் ஆண்டு மாணவர்களின் ஒரு நாடகமும் மேடை ஏற இருந்ததால் நாடகப்பயிற்சிக்காக எனவும் ஒருசில மாணவர்களும், மாணவிகளும் விடுதியில் தங்கியிருக்க வேண்டியிருந்தது.

ரதனும், நிவேதாவும் அந்நாடகத்தில் பிரதான பாத்திரமேற்று நடிக்கவிருந்ததால் அவர்கள் இருவரும் கூட தங்கியிருக்க வேண்டி இருந்தது. அந்நாடகத்தை நுண்கலைத் துறையைச் சேர்ந்த ஒரு இளம் விரிவுரையாளரே நெறிப்படுத்த-விருந்தார். திருகோணமலையைச் சேர்ந்த பாலசுகுமார் என்ற அந்த விரிவுரையாளர் ரதனுக்கு ஏற்கனவே அறிமுகமானவராயிரு-ந்ததால் ரதனை தனது நாடக நெறிப்படுத்தலு க்கும் உதவச் சொல்லி கேட்டிருந்ததால் அவனால் தட்டிக்கழிக்க முடியவில்லை.

எப்படியாவது ஒரு வாரத்துக்குள் நாடகப் பயிற்சியை முடித்துக்கொள்ள வேண்டும். நாங்களும் வீட்டுக்கு போக வேண்டும் என்று நாடகத்தில் பங்கேற்கும் மாணவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் ஒரு கிழமைக்குள் முழு நேரமாக பயிற்சியை மேற்கொள்வது என முடிவெடுக்கப்பட்டது.

நிவேதாவின் ரூம் மேட்சான பவித்ராவும், சுகந்தியும் பரீட்சை முடிந்தவுடனேயே அவளிடம் விடைபெற்று ஊருக்கு சென்றிருந்தனர்.

அந்த பெண்கள் விடுதியில் நிவேதாவுடன் சேர்ந்து நான்கு மாணவிகள் மட்டுமே தங்கியிருந்தனர். அவர்களுடன் அவர்களது வார்டனான புவியியல் துறையைச் சேர்ந்த பெண் விரிவுரையாளரும் தங்கியிருந்தார். மாணவிகள் நான்கு பேரும் இருவர் இருவராக ரூம்களில் தங்கியிருந்தனர்.

அதே போன்றே ரதனின் ஹொஸ்டலிலும் அவனும் அவனுடன் சேர்த்து இன்னும் எழு மாணவர்களுமே தங்கியிருந்தனர்.

அவர்களில் நாடகத்துகுரியவர்கள் இருவர் தவிர ஏனைய ஐவரும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள். ஏழு மாணவர்களே இருந்தாலும் அந்த ஆண்கள் விடுதியில் கூத்தும் கும்மாளமுமாகவே இருந்தது. விடுமுறை தினம் ஆதலால் ஏழு பேரும் சேர்ந்து பாட்டுப் பாடி, பைலா போடுவதும், கரம் விளையாடுவதும், காட்ஸ் விளையாடுவதும் என அங்கு பொழுது போக்குகளுக்கு குறைவிருக்கவில்லை.

காலையில் 9.00 மணிக்கு ஆரம்பமாகும் நாடகப் பயிற்சி மதிய இடைவேளைக்காக 12 மணிக்கு நிறுத்தப்பட்டு மீண்டும் 1.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4:00 மணி வரை தொடர்ந்து நடைபெற்றது.

அந் நாடகத்தில் நடிக்கும் சில மாணவர்களும், மாணவிகளும் பயிற்சிக்கென டவுனில் தமது வீட்டில் இருந்தும் வந்து போயினர்.

இந்திய நாடகவியலாளருடைய அந்த நாடக பிரதியை நவீன நாடக உத்தியை கையாண்டு சுகுமார் மிக நுட்பமாக பயிற்சியை மேற்கொண்டார்

இடையிடையே சில பாடல்களும் சேர்க்கப்பட்டு நாடகத்திற்கு காத்திரமான ஒரு சீரியஸ் தனத்தை கொடுத்தது. அந்த நாடகக்கதையும் ஒரு வித்தியாசமானதாகவே இருந்தது. சமூக ச்சனையுடன் கூடிய அரசியல் சித்தாந்தத்தை அது முன்வைத்தாலும் அந்த நாடகத்தின் கருப்பொருளை இதுதான் என விளக்குவது கஷ்டமாக இருந்தது.

பார்வையாளர்களின் சிந்தனை வீச்சுக்கு, ஏற்ப அவர்களது எண்ண வெளிப்பாட்டின் தன்மைகேற்ப அந்நாடகத்தின் கருத்துருவாக்கத்தினைக் கொள்ள முடியும்.

அந்நாடக பிரதி அனைவருக்கும் பிடித்திருந்ததால் அனைத்து மாணவ மாணவிகளும் நாடகத்துடன் மிகவும் ஒன்றித்து நடித்தனர். எப்படியாவது அந்தநாடக விழாவில் தமது நாடகத்துக்கு முதல் பரிசு பெற்று விட வேண்டும் என்ற துடிப்பு அனைவரிடமும் இருந்தது.

நாடக விழாவுக்கென ஏனைய பீடங்களைச் சேர்ந்த மாணவர்களும் நாடகங்களை தயார்ப்படுத்தியிருந்தனர். அதில் வணிக முகாமைத்துவபீட மாணவர்கள் தமது நாடக பயிற்ச்சியை மட்டக்களப்பு நகரில் ஒரு மாணவனின் வீட்டிலேயே மேற்கொண்டிருந்தனர். ஏற்கனவே விஞ்ஞான பீட மாணவர்கள் தமது நாடக பயிற்ச்சியை முடித்திருந்ததால். அவர்களில் ஒரு மாணவர்களும் விடுதியில் நிற்கவில்லை. விவசாயபீட மாணவர்கள் போட்டியில் பங்கேற்கவில்லை

நாடகப் பயிற்ச்சியை மேற்கொண்ட அந்த ஒரு வார காலமும் நிவேதாவுக்கும், ரதனுக்கும் வெகு இனிமையான நாட்களாய் அமைந்தது. அவர்களது முதலாம் ஆண்டு பரீட்சை முடிந்து விடுமுறை காலமாய் இருந்ததால் எதையும் படிக்க வேண்டும் என்ற சுமை இருக்கவில்லை .

எனவே நிவேதாவுக்கும், ரதனுக்கும் அவர்களுடைய முழு சிந்தனையும் தமது காதல் தொடர்பாகவே இருந்தது. அந்த சில நாட்களும் அவர்கள் மேலும் மேலும் தம்மைப் பற்றி அறிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருந்தது. நாடகப் பயிற்சிக்குப் பின்னர் அவர்கள் இருவரும் தனிமையில் சந்தித்து கதைப்பதற்கான நேரம் அதிகம் கிடைத்தது.

நிவேதா ஏற்கனவே தனது மாமாவுக்கு கடிதம் எழுதி போட்டிருந்ததன் காரணமாகவும், தான் வரும்போது ரதனுடன் ஊருக்கு வரமுடியும் என்று எழுதியிருந்ததால் நிவேதாவை அழைத்துச் செல்வதற்கென அவளது மாமா வரவில்லை. நாடகப் பயிற்சி நாளின் கடைசி நாள் என்ற படியால் அன்று

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

பகல் பொழுதுடன் பயிற்சிகள்அனைத்தும் முடிவடைந்தன.

நாளை திருகோணமலை போவதற்காக ரதன் தனது நண்பனிடம் சொல்லி டவுனில் திருமலை செல்லும் கோப் ரவல்ஸ் பஸ்சில் இரண்டு டிக்கட்டுகளை பதிவு செய்து கொண்டான். அவனது நண்பன் அன்பழகன் இரண்டு ஆசனங்களை பதிவு செய்து வந்து பதிவுச் சீட்டுகளை ரதனிடம் கொடுத்தான்.

"தாங்க்ஸ் அன்பு."

"ரதன் நாளைக்கு ரிங்கோ போறிங்களா...? நிவேதாவும் உன்னுடன் தானே வாறாளா..?"

"ஆமா...நானும் நிவேதாவும் தான் போறம்... ஒரு மாத விடுமுறையில் ஏற்கனவே ஒருவாரம் இங்கே போய்ட்டு அன்பு.. இன்னும் மூன்று வாரம்தானே இருக்கு. அதுவும் சுகுமார் சேர் விடுமுறைக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் எங்கள வரச் சொல்லியிருக்கார். இன்னும் கொஞ்சம் பிராக்டீஸ் பண்ண வேண்டுமாம்."

"அது சரி உங்களுக்கு ஊரில் இருப்பதை விட இங்கு இருப்பது சுதந்திரம் கூடத்தானே...?" அன்பழகன் சிரித்தபடியே சொன்னான்.

"அன்பு நான் வாறன்... நாளைக்கு ஊருக்கு போவதற்கான பெக்கிங் எல்லாம் செய்ய வேண்டும்..." ரதன் விடை பெறவும் அவ் விடத்திற்கு நிவேதா வரவும் சரியாக இருந்தது.

"ரதன் ஹொஸ்டலுக்கு போக முதல் கெண்டீனுக்கு போய் லஞ்ச் எடுத்திட்டு போவம் என்ன...? நான் உங்களுக்கும் சேர்த்து ஓடர் கொடுத்து விட்டேன்."

"நிவேதா நான் நாளைக்கு போறதுக்கு பஸ் புக்கிங் செய்துட்டன். எமக்கு பதினான்கு, பதினைந்து இலக்க சீட் கிடைச்சிருக்கு".

ரதனும் நிவேதாவும் கேண்டீனுக்குள் நுழைந்து சாப்பாட்டு மேசைக்கு முன்பிருந்த கதிரைகளை இழுத்துப்போட்டு அருகருகே அமர்ந்து கொண்டனர்.

தனது கையில் இருந்த [illegible] மேசையில் வைத்து விட்டு நிவேதா எழுந்து சென்று கேண்டீன் கேசியர் பொடியனிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் ஓடர் பண்ணிய கார்டைக் கொடுத்து இரண்டு சோற்றுப் பார்சல்களை எடுத்து வந்தாள். இருவரும் கைகளை அலம்பிவிட்டு தமக்குரிய பார்சலை விரித்து சாப்பிடத் தொடங்கினர். அந்த நேரத்தில் அந்த கேண்டீன் ஒதுக்குப் புறத்தில் அவர்களைத் தவிர வேறொருவரும் இருக்கவில்லை. கேண்டீனுக்கு தேநீர் அருந்துவதற்கென வந்த ஒன்றிரண்டு விரிவுரையாளர்களும் கேண்டீனின் முன்புறத்தில் இருந்தே தேநீர் அருந்திக்கொண்டிருந்தனர். கேண்டீன் வானொலியில் இடைக்கால சினிமா பாடல் ஒன்று மெல்லிதாக ஒளிபரப்பாகிக்கொண்டிருந்தது.

"ரதன் நாளைக்கு எந்த பஸ்சில் புக் பண்ணியிருக்கீங்க...?"

"கோப் ரவல்ஸ்சில புக் பண்ணியிருக்கன்... காலை எட்டு மணியளவில் நாம் கம்பஸ் வாசலுக்கு வந்தம் என்றா சரி."

"ரதன் ரயில் ஓடினா எவ்வளவு நல்லது. பயணமும் சுகமாக இருக்கும்...? இடையிடையே சோதனை முகாம் என்று இறங்கி நடக்கவும் தேவையில்லை. ஆனால் பஸ் பயணம்.. நாளைக்கு எத்தனை தடை முகாம்களில் இறங்கி நடக்கப்போகிறமோ தெரியாது ...?"

"ஓமோம் .. இப்ப எத்தனை சோதனை சாவடிகள் புதிதாக அதிகரித்திருக்கோ தெரியல்ல ..?"

"ரதன் ஒரு வாய் சாப்பிடுறீங்களா ...?" நிவேதா தனது பார்சலில் இருந்து தான் பிசைந்திருந்த சோற்றுக் கவளத்தை ரதனுக்கு ஊட்டி விட்டாள். ரதன் சாப்பிட்டபடியே கேட்டான்.

"நிவே இரண்டு பேருக்கும் ஒரே இடத்தில்தானே சாப்பாடு ஓடர் பண்ணினீங்க....?"

"ஏன் அப்படி கேட்கிறீங்க ...?"

"இல்ல நீங்க பிசைந்து தந்த சோறு எனது பார்சலை விடவும் ருசியாக இருக்கு ... அதுதான் கேட்டனான் ..."

நிவேதா மெல்லிதாக சிரித்துக் கொண்டாள். "உங்களுக்கு எப்பவும் நக்கல் தான் .."

"இல்ல நிவேதா உன் கை பட்டதும் சோற்று பார்சல் கூட எவ்வளவு ருசியாக இருக்கு ..?"

"அப்படின்னா நீங்க இத சாப்பிடுங்க...நான் உங்கட பார்சல சாப்பிடுறன்..." நிவேதா சிரித்தபடியே தனது பார்சலை ரதனுக்கு முன்னே தள்ளி வைத்து ரதனுடைய பார்சலை தன பக்கம் இழுத்துக்கொண்டாள்.

"நிவே என்ன குடிப்பம் ... ஏதும் ரிங்ஸ் எடுக்கவா.....?"

"எனக்கு ஒரு பெண்டா எடுங்க ..." ரதன் எழுந்து கேஷியர் பொடியனிடம் சென்று இரண்டு பெண்டாவுக்கு ஓடர் செய்து விட்டு வந்தான் .

"ரதன் இப்ப நாம ஹொஸ்டலுக்கு போறம் .. ஈவினிங் ப்ரீதானே.. கோவிலுக்கு போய்ட்டு வருவமா ...?"

"...எந்த கோயிலுக்கு போவம்....?"

"வந்தாறுமூலை கிருஷ்ணன் கோயிலுக்கு போவம் என்ன..."

"ஓம்.... நாம வெளி கோயில்களுக்குப் போவம் நாளாயிட்டு... ஹொஸ்டலுக்கு பக்கத்திலேயே கோயில் இருப்பதால் எங்கேயும் போறதில்ல... இன்றைக்கு போவம்...."

இருவரும் சாப்பிட்டு விட்டு எழுந்து கை அலம்பிவிட்டு வந்தனர். ரதன் கேசியர் பொடியனிடம் சென்று சோடாவுக்குரிய பணத்தை கொடுத்துவிட்டு வந்தான். "நிவே போவமா..." இருவரும் ஹோஸ்டலை நோக்கி நடக்கத் தொடங்கினர்.



மேலும்......

# கவி முரசு

## பேசு - என் பெண்ணே

-மாயன்-

நீ பேசாத...இரவொன்றில் நிலவு
எறித்துக் கிடக்கிறது...
சுவையில்லை - நிலவில்
குளிர்மையின்றிக் - குன்றில்
எறித்துக் கிடக்கிறது...
நீ பேசாத அவ்விரவின் நிலவு...

காதல்
பூத்துக் கிடந்த போதென்
எண்ணமெங்கும் - இசை
பாடிய நிலவா? அது...
நீரில் தெறிக்க - இரத்தினச் சொரியலாய்
என் கால் வரை தேடிவந்த அந்நிலவே
இன்று...
சுவையின்றிக் கிடக்கிறது...
எம் குன்றின் மீது

அதரம் திறக்கத்
தெறிக்கும் வார்த்தைகள் - பொங்கிப்
பிரவாகமாய்ப் பேசிப்... பேசிப்...
பேசு பொருள் மறந்து...
பெண்ணே...
உன் மோகனச்
சிரிப்பழகில் - விறைத்துப்
போய்விடும் என்
விழிகள்...
இன்று நீ
பேசா இரவில் - நிலவு
பூத்துக் கிடந்தும் - இமை
மூடிய விழிகளிற்
படர்கிறதே கருமை...
பேசு என் பெண்ணே...

உன் சரணடைதல் பற்றிப் பேசு...

நத்திக் கடல் தாண்டி — நீ
நடந்த அக்கணத்தைப் - பேசு

தயவு செய்து
பேசு... என் பெண்ணே

ஆடையின்றிப் பிணமாய்
அரையில் ஒரு சூடு - இடது
மார்பில் மறு சூடாய் - கைகள்
பிணித்திருக்கும் கச்சை கூறுதடி — உன்
ஆவி கரைந்த கதை...

சேற்றில் முக்கியுன் - மீது
முயங்கியோரெல்லாம் - பின்
ஆற்றைக் கடக்கவும் - வெண்
ஆடை போர்த்தவும் கண்டோம்
காணொலியாய்...

நாட்களின் முடிவில்
அம்மணமாய் - என்
பெண்ணே நீ
முகஞ்சிதைந்து மரணமுற்றதைப் - பற்றிப்
பேசு...

இந்த
பாழாய்ப் போன நிலவு
மட்டும் என்ன... நினைப்போல்ப்
பேசா மடந்தையாய் - கிடக்குதிங்கு

உன் உடலைப்
புசித்த ஒலிகள் - இன்னும்
ஓங்கி வளர்ந்த எங்கள்
மயானக் காட்டில்...
ஊளையிடுகின்றன...

உன் பேசா மொழியும்
புகழுடலும் - புதைந்த மண்ணில் எம்
மறவர் புதைந்தனர் — எனினும்
எம்மனம் விட்டகலா
ஒளியாகி ஒளிரும் - உங்கள் வாழ்வும்
வீழ்வும்...

எம்மிடமும்
எஞ்சிக் கிடக்கிறது...
எறித்த நிலவுகளும்
ஒலியில்லா — மௌனங்களும்
என்று மட்டும் எண்ணல் வேண்டாம்

கனல் நெஞ்சும்
குறி நோக்கி நகரும் வலுவுள்ள பாதங்களும்....

ஊமைகள் பேசும் நாளில் உலகில்
ஓர் தேசம் உடைந்து போகலாம்...
யார் கண்டார்.

## குறைந்திடா!

தாமரைத்தீவான் (ஈச்சந்தீவு)

வெள்ளத்தால் அழிந்திடா.
வெந்தணல் எரித்திடா!
கொள்ளார் எந்த வெந்தரும்.
கொடுப்பின் ஏதும் குறைந்திடா!

கள்ளருக்கும் அரிதுதான்.
காவல்கூட எளிது தான்!
உள்ளத்துள்ள கல்வியை
உலகில் தேட வேண்டுமோ?

கரையிலாத கல்வியைக்
கற்று விட்டமாயின் நாம்
உரைத்திடலாம் - எழுதலாம்.
உளம் மகிழ்ந்து பாடலாம்!

அமுதமான தமிழிலும்
அழகுக் கல்வி பயிலலாம்!
எமது தேவை அறிவெனில்.
எவரும் எம்மைப் போற்றுவார்!

- - - - - - - -

## சிரத்தை எடுப்பாரா?

... கௌரிதாசன் ...
ஆலங்கேணி கிழக்கு

வாத்திமார் மூவர் தன்னால்
வளம் பெற்ற பள்ளியது!
கீர்த்தியுடன் விளங்குகின்ற
'கிண்ணியா' வலய மதில்.
ஊர்ப்புகழை உயர்த்தி விட்ட
உன்னதமாம் பள்ளி தனில்
ஆர் அதிபர்? என்று இப்போ
'அறப்போர்' நடக்கிறது!

"அருளாளர்". கோ மலையர்.
'ஆலையூரான்" அதிபரெனப் -
பெருமையுடன் பண்டைய நாள்
பேணி வளர்தத் பள்ளி.
திருமலை மாவட்டத்தில்
திறமைக்கோர் தனித்துவத்தை
அடையாளப் படுத்தி வைத்து
அமைதியுடன் வளர்த்த பள்ளி!

பல்கலைக் கழகமதைப்
பலர் காண வைத்த பள்ளி!
வல்ல பல கவிஞர்களை
வடிவமைத்து தந்த பள்ளி!
நல்ல பல ஓவியர்கள்.
நடிப்பாற்றல் மிக்கவரை
கல்வியிலே மாண்பு பெற்ற
கலாநிதியைக் கண்ட பள்ளி!

இரு பாலார் பயிலுகின்ற
இனிதான பள்ளியதன்
'நிருவாகம்' பேணுகின்ற
'நிலையான அதிபர்' தனை-
வரவேற்க முடியாமல்
வருந்துகின்றார் மாணவர்கள்!
சிரத்தையினை எடுப்பாரோ.
சீர் கல்வி திணைக்களத்தார்!



## மக்களுக்கே மாற்றம்




இந்த சிறு விளக்கின்
சிறு கீற்று வெளிச்சம்
பெருபுலர்வுக்கான
விடிவுக்கு ஆரம்பமாகட்டும்

இந்தத் துளியின் பெருக்கம்
ஒரு நாள் நதியாக
பெருக்கெடுத்தோடும் என்ற
நம்பிக்கை எனக்குண்டு

இந்தச் சிறுகைளின் சத்தம்
பெரு ஒலியாவதற்கு
காலத்தை யாரும் குறிக்க முடியாது
காலத்தை வெல்வதாகவும் இருக்கலாம்
இந்தக் கைகளின் இணைப்பு
இருவரின் இணைப்பாக
இன்று சேர்வதாகட்டும் - நாளை
சேராத கரங்கள் இல்லாது போகலாம்

இந்தச் சிறு பொறி ஒருநாள்
காட்டுத்தீயாக மாறுவதை
காற்று ஒருபோதும் மறுக்காது
மாற்றத்தைத்தான் மலரவைக்கும்

எப்போதும் சுழல்க் காற்று
ஒரு பக்கத்துக்கு உரியதல்ல
எப்பக்கமும் அதன் வீச்சு வரும்
அப்போது பலத்தின் நிலைதெரியும்
எல்லாவற்றுக்கும் மாற்றம்
இல்லாது போவதில்லை
இல்லாமல் போகாது இருப்பது
மாற்றம் என்ற வார்த்தையே

(தம்பி. தில்லைமுகிலன்)

- - - - - - - -

## யாரோ !!

சேனையூரான்

கட்டுப் பாட்டை மீறாதது, தூய
காதல்
தொட்டு பட்டு கெட்டுபோக கைக்கும்
காமம்,

பட்டுத் தெளிந்த பின்வரும்
ஞானம்
குட்டு வெளிப்பட்டால் தெரியும்
அவமானம்:

ஒட்டுண்ணியாயிருப்போர்
ஆரம்:
ஒட்டு விட்டு பிரிந்துவிட்டால்
பரிதாபம்:

குட்டக் குட்டக் குனிவது
இயலாமை:
குனிந்த தலை நிமிர்ந்தால்
மேலாண்மை:

நாட்டில் தேவையிங்கு
தேசியம்:
வீட்டுக்குத் தேவை - ஓர்
மாற்றாட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் பார்வை

# வடக்கு கிழக்கு இணைக்கப்படாத தீர்வுக்கு – இணங்கியுள்ளனரா தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர்

## லண்டனில் பேசப்பட்டது என்ன?

புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகளை தங்கள் வசப்படுத்தி தமிழர்களின் அரசியல் முக்கியத்துவத்தை சர்வதேச மட்டத்தில் இருந்து குறைப்பது அல்லது இலங்கைத் தேசியம் என்ற வரையறைக்குள் அவர்களை வரவைப்பது என்ற முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஈடுபட்டிருந்தார் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று அதன் தொடர்ச்சியாக லண்டனில் உள்ள புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் மைத்திரிபால சிறிசேன அரசாங்கமும் பேச்சு நடத்தியது என சில வாரங்களுக்கு முன்னர் செய்தி வெளியாகியிருந்தது.

வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர பேச்சு நடத்தியிருந்தார். தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் அந்த சந்திப்பில் கலந்துகொண்டார்.

ஆனால் இவர்கள் என்ன விடயங்கள் குறித்து பேசினார்கள் என்று தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. ஆனாலும் மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சுமந்திரன் ஆகியோருடன் புரிந்துணர்வுடன் செயற்படுவதால் மஹிந்த ராஜபக்சவை விட புலம்பெயர் அமைப்புகளுடன் சற்றுக் கூடுதலான உறவை மேம்படுத்த முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. அந்த அடிப்படையில் மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் சில முயற்சிகளை எடுத்திருக்கின்றது போல் தெரிகின்றது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இரண்டு முதலமைச்சர்களுக்கும் பொதுவாக கொழும்பை மையப்படுத்திய மத்திய அரசில் அமைச்சர் ஒருவர் பதவிவகிப்பார் என்றும் அவரிடமே காணி, பொலிஸ் அதிகாரங்கள் இருக்கும் எனவும் மைத்திரி அரசாங்கம் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளது. இது தொடர்பாகவே லண்டனில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர புலம்பெயர் அமைப்புக்களுடன் பேச்சு நடத்தியிருந்ததாகவும் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்த அடிப்படையிலேயே எதிர்வரும் டிசம்பர் மாதம் புலம்பெயர் தமிழர் விழா ஒன்றை கொழும்பில் நடத்தவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

### தமிழரே அமைச்சர்

மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிரும் 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு வழங்குவதில் சர்ச்சைகள் ஏற்பட்டிருந்தன. ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு இணங்கியுள்ளது என்றும், எனினும் கொழும்பை மையப்படுத்திய மத்திய அரசின் தமிழர் ஒருவரை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக நியமித்து, அவரிடம் அந்த அதிகாரங்களை வழங்குவதற்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் இந்த யோசனை தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சுமந்திரன் ஆகியோருடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இருவரும் எற்கனவே உரையாடியுள்ளனர் என்றும் அந்த இணக்கத்தின் அடிப்படையில் புலம்பெயர் நாடுகளிலுள்ள சில அமைப்புகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் பேச்சு நடத்தினர் எனவும் கூறப்படுகின்றது.

புலம்பெயர் அமைப்புகளும் இதற்கு இணக்கம் தெரிவித்ததாக கூறப்படுகின்றது. ஆனாலும் இந்த விடயங்கள் தொடர்பாக அரசாங்கமோ அல்லது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமையோ இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

### 13ஆவது திருத்தச் சட்டமூலம்

இந்த புதிய யோசனையின்படி 13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு, இந்த ஆண்டின் இறுதியில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சரமவீர புலம்பெயர் அமைப்புகளிடம் உறுதியளித்துள்ளார் என்றும் ஒரு தகவல்.

புதிய நாடாளுமன்றம் செப்டம்பர் மாதம் பதவியேற்றதும் இந்த யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டு, 13ஆவது திருத்தத்தில் மாற்றங்கள் செய்யப்படும் என்று லண்டன் பேச்சுக்களின்போது கூறப்பட்டுள்ளது.

**வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படாமல் 13வது திருத்தச் சட்டத்தின் கீழான மாகாண சபைகள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணல் என்பது எவ்வாறு சாத்தியமாகும்! இது த.தே.கூ வினருக்கு விளங்கவில்லையா? அல்லது விளங்கியும் விளங்காதது போல் கூட்டு சேர்கின்றனரா???**

குறிப்பாக வடக்கு மற்றும கிழக்கு மாகாண முதலமைச்சர்களின் அதிகாரங்களுக்கு மேலாக மத்திய அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கக்கூடிய தமிழர் ஒருவருக்கு அதிகளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டு, காணி, பொலிஸ் மற்றும் நிதி விடயங்களைக் கையாளும் அதிகாரங்கள் அந்த அமைச்சருக்கு வழங்கப்படவுள்ளன.

இரண்டு மாகாண முதலமைச்சர்களும் அந்த அமைச்சருடன் பேசி தமது மாகாணங்களுக்கு உரிய அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் யோசனையின் உள்ளடக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர, புலம்பெயர் அமைப்புகளுக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

### இணைப்பது என்ற கோரிக்கை ரத்து

புதிய நாடாளுமன்றம் கூடும் போது வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு அதிகாரங்களை வழங்க 13 ஆவது திருத்தச்சட்டத்தில் மேற்படி திருத்தங்கள் செய்யப்பட்டு யோசனை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. ஆனால் இந்த யோசனையில் வடக்கு கிழக்கு மாகாணம் இணைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் எதுவும் இருப்பதாக தெரியவில்லை.

எவ்வாறாயினும் தமக்கு சாதகமான புலம்பெயர் அமைப்புகளில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சில பிரதிநிதிகளை மாத்திரமே சந்தித்து பேசினார்கள் என்றும் அனைத்து நாடுகளிலும் உள்ள புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகளையும் இவர்கள் சந்தித்து பேசவில்லை எனவும் முழுமையான உடன்பாடுகள் அங்கே எட்டப்படவில்லை எனவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

அத்துடன் தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் ஏனைய தலைவர்கள் மற்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இந்த விடயங்கள் பேசப்பட்டதா அல்லது அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டதா என்பது குறித்து எதுவும் கூறப்படவில்லை.

13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழான மாகாண சபைகள் முறை என்பது இனப்பிரச்சினைக்கு தீர்வு அல்ல என்பது தமிழ்தரப்பில் உள்ள பலரும் கூறிவருகின்றனர். இந்த நிலையில் அந்த சட்டத்தில் திருத்தங்களை செய்து அதுவும் வடக்கு கிழக்கு மாகாணம் இணைக்கப்படாத நிலையில் முன்வைக்கப்படும் அரசியல் தீர்வு எந்த வகையில் சாத்தியமாகும் என்ற கேள்விகளும் உள்ளன.

அதேவேளை இந்த விடயங்களைத் தான் லண்டனில் பேசினோம் என்று சுமந்திரன் இதுவரை வெளிப்படையாக கூறவில்லை. அமைச்சர் மங்கள சமரவீரவும் எதுவும் தெரிவிக்கவில்லை. சந்திப்பில் கலந்துகொண்ட சில பிரதிநிதிகள் மூலமாகவே மேற்படி தகவல்கள் கசிந்தன.

எவ்வாறாயினும் மேற்படி யோசனைகளை தீர்வாக முன்வைக்கும் போது தமிழ்த்தரப்பில் இருந்து பாரிய அளவில் பிரச்சினை வெடிக்கலாம் என அனுமானிக்கப்படுகின்றது. அத்துடன் வடக்கும் கிழக்கும் இணைவதே தமிழருக்கான பலம். இருப்பினும் இணைக்கப்படாது என அரசாங்கம் உறுதியாக தெரிவித்துள்ளது. அத்துடன் சிங்கள தரப்பில் இருந்தும் எதிர்ப்புகள் விமர்சனங்கள் கிளம்பும் போது உண்மைகள் வெளிவரலாம் அரசியல் தீர்வு என்பது நடைமுறை அரசியல் யாப்புகளை திருத்துவதன் மூலம் சாத்தியப்படப்போவதில்லை. மாறாக குழப்பங்களையே ஏற்படுத்தும்

– –அ.நிக்ஸன்– –

- www.ponguthamil.com -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறோம்: ஒரு தமிழனின் ஆதங்கம்

**காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக** விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பாக பல விமர்சனங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. அந்த வகையில், ஜனாதிபதி ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பில் ஆதங்கத்துடன் நபரொருவர் வெளியிடப்பட்ட தகவல்கள் பின்வருமாறு,

**விண்ணப்பக் கடிதங்கள்:**

காணாமல் போனோரின் உறவினர்களிடம் இருந்து கிடைக்கப் பெறும் கடிதங்கள் பிரதேச மாவட்ட ரீதியாக கோப்பில் வைக்கப்படுகின்றன. எல்லா கடிதங்களுக்கும் ஒரு சுட்டுஎண் கொடுக்கப்படும். உண்மையில் இதுவரை ஒன்பதாயிரம் அளவிலான விண்ணப்ப கடிதங்களே கிடைக்கப் பெற்றுள்ளன. ஆனால் 19000 அளவில் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக ஆணைக்குழு தெரிவிக்கிறது.

இது எவ்வாறெனில் ஒரே விண்ணப்பத்துக்கு இரு முறை அல்லது மும்முறை சுட்டுஎண்கள் கொடுக்கப்படுவதே ஆகும்.

**கணனிப் பதிவு:**

ஆணைக்குழுவுக்கு வரும் கடிதங்கள் அனைத்தும் தமிழ் மொழியிலேயே எழுதப்பட்டிருக்கும். அவை ஆங்கில மொழி மாற்றம் செய்யப்பட்டு கணனியில் பதிவு செய்யப்படும். ஓரிரு தமிழரை தவிர பணி புரியும் எல்லோரும் சிங்கள இனத்தவர். தமிழ் அறியாதவர்கள்.

அவர்கள் தமக்கு புரிந்த வகையில் பதிவு செய்வார்கள். அக்கடிதங்களில் எவ்வாறு அந்த சூழலில் காணாமல் போனார்கள் போன்ற தகவல்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட மாட்டாது. பெயர், விலாசம் போன்ற பொதுவான தகவல்களே பதிவு செய்யப்படும்.

காணாமல் போனவர் முன்னாள் போராளி எனில், அது முக்கியமான விண்ணப்பமாக கருதப்படாது. எனினும் மொழி அறியாதவர்களினால் மொழி பெயர்க்கப்படுவதால் அவை பதிவு செய்யப்படும்.

காணாமல் போனவர் இராணுவத்தால் அல்லது கடல் படையினரால் கடத்தப் பட்டிருந்தால் அத்தகவல் வேறு விதமாகவே பதியப்படும். ஏனெனில் முன்னாள் ஜனாதிபதிக்கு சாதகமாகவே காரியங்கள் முன்னெடுக்கப் படுகின்றன.

**ஆணையாளர்கள்:**

ஆணைக்குழு 3 உறுப்பினர்களை கொண்டது. ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதியின் நெருங்கிய உறவினர். மற்றைய இருவரில் ஒருவர் தமிழ் பெண்மணி. அம்மையாருக்கு தமிழை விட சிங்களம் பேசுவதிலேயே விருப்பம் அதிகம். அவரும் மொழிபெயர்க்கப்பட்ட கடிதங்களையே வாசிப்பார். மற்றவர் ஒரு சிங்கள பெண். இம்மூவரும் ஒரு நாளும் ஒரு விண்ணப்பத்தை கூட ஒழுங்காக பார்த்ததில்லை. அவர்கள் அலுவலகத்துக்கு வருவதே வாரம் இரு முறை தான்.

இவர்கள் மூவரும் எப்போதும் பத்திரிகை பார்ப்பதிலும் தங்கள் சௌகரியங்களை பார்ப்பதிலும் சம்பளத்தை எடுப்பதிலுமே குறியாக இருப்பார்கள்.

ஆணைக்குழுவின் தலைவர் மிகவும் வயதான ஒரு இதய நோயாளி. சமீபத்தில் இதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர். அவர் சில மணி நேரம் வந்து அமர்ந்து விட்டு போவதைத்தவிர வேறு எதையும் செய்வதில்லை.

சில நேரங்களில் பத்திரிகை பேட்டிகளுக்கு முகம் கொடுப்பார். அப்போது எம் சக ஊழியர் ஒருவரே அவருக்கு தேவையான விடயங்களை எடுத்துரைக்க வேண்டும்.

**செயலாளர்:**

இவரும் ஒரு சிங்களவர். அதனால் எல்லா கடிதமும் மொழி பெயர்க்கப்பட்ட பின்னரே செயலாளரால் வாசிக்க முடியும். அவர் கிடைத்துள்ள பதவியினால் தனக்கு கிடைக்கும் சௌகரியங்களுக்கு மட்டுமே வாழ்பவர்.

**பொது சன அமர்வு:**

பொது சன அமர்வுகள் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பிரதேசங்களிலும் நடாத்தப்படும். அப்போது ஒன்று அல்லது இரண்டு கிராம சேவை பிரிவுக்குட்பட்ட பிரிவுகள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படும்.

4 நாட்களுக்குள் விசாரணை செய்ய முடிந்த அளவிலேயே இவை தெரிவு செய்யப்பட்டு விண்ணப்பதாரருக்கு அழைப்பு அனுப்பப்படும். ஆனால் பொதுசன அமர்வு நாட்களில் ஏற்கனவே விண்ணப்பித்த மற்றைய விண்ணப்பதாரர்-களும் விளக்கமின்றி வருவார்கள்.

அவர்களுக்கான விசாரணை பிறிதொரு நாளிலேயே நடக்கும். ஏனெனில் அவர்கள் இக்குறிப்பிட்ட அமர்வுக்கு விசாரணைக்காக அழைக்கப்படாதோர். ஆயினும் அவ்வாறானவர்களுக்கு ஒரு புதிய சுட்டு எண் கொடுக்கப்படும். அவர் ஒரு புதிய விண்ணப்பதாரராக பதியப்படுவார்.

அவ்வாறே விண்ணப்பங்களின் தொகை 19000 ஆகியுள்ளது. மக்கள் தம்மை விரும்புகிறார்கள் எனக் காட்டிக்கொள்ளும் ஒரு வித செயற்பாடே இது.

பொதுசன அமர்வுகளில் ஆணையாளர்கள் தூங்குகிறார்கள் என்று ஒரு பெண்மணி கூறியிருந்தார். அது உண்மையே ஆகும். அவர்கள் மூவரும் வெகு சொகுசாக விமானத்தில் வந்து இறங்கி அங்கு இருக்கக் கூடிய அதி வசதியான விடுதிகளில் தங்குவார்கள். அவர்களுக்கான உணவு மிக விசேடமாக தயாரிக்கப்படும்.

அவர்களை பொறுத்தவரை காணாமல் போனவரின் ஊரையும் பெயரையும் எப்போது காணாமல் போனார் என்பதை மட்டும் அறிந்தால் போதுமானது. இத்தகவல்கள் ஏற்கனவே விண்ணப்பத்தில் இருப்பன. திரும்ப திரும்ப கேட்டு சரி பார்ப்பார்கள். அத்தோடு அவர்கள் விசாரணை முடிந்துவிடும். இவற்றை மொழி பெயர்த்து சொல்வதற்கும் ஒருவர் தேவை.

அத்தோடு அவர்கள் விடுதலை புலிகளை சேர்ந்த போராளிகளின் குடும்பங்களில் இருந்து வரும் கடிதங்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஒரு போதும் காணாமல் போன எவரையாவது தேடி கண்டு பிடிக்கும் நோக்கம் கிடையாதவர்கள்.

பொதுசன அமர்வு பற்றி நீங்கள் அங்கு வரும். உதயன் மற்றும் வலம்புரி பத்திரிகையாளர்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும். மனித உரிமை செயற்பாட்டாளர்களும் அங்கே வருகை தருவார்கள். இந்த ஆணைக்குழு இன்னும் கணனி பதிவிலேயே இருக்கிறது. அதைத் தாண்டி வேறு நடவடிக்கைகள் நடைபெறவில்லை.

தமிழர்களாகிய நாம் ஏமாற்றப்பட்டு கொண்டிருக்கிறோம் என்பதற்கு இது ஒரு சான்று.

**திருகோணமலையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம்**




# மஹிந்தவின் தேர்தல் அறிவிப்பும்: இனவாத பிரசாரமும்

நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் களமிறங்கும் முடிவினை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அறிவித்துள்ளார். கடந்த புதன்கிழமை மாத்தறை மெதமுலனவில் உள்ள அவரது இல்லத்தில் மக்களைச் சந்தித்த அவர் இந்த முடிவினை தெரிவித்திருக்கின்றார். என்னையும் இந்த நாட்டையும் நேசிக்கும் மக்களின் அழைப்பை என்னால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிராகரிக்க முடியாது. நிராகரிக்கும் உரிமையும் எனக்கில்லை. ஆகவே இந்த நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறங்கி போட்டியிட தீர்மானித்து விட்டேன் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்திருக்கின்றார்.

தேர்தலில் களமிறங்கவுள்ளதாக அவர் அறிவித்துள்ள போதிலும் எந்தக் கட்சியில், எந்தச் சின்னத்தில் களமிறங்கவுள்ளார் ஏன்பது தொடர்பில் அவர் தெளிவான அறிவிப்பு எதனையும் வெளியிடவில்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சியின் சார்பில் பிரதமர் வேட்பாளராக போட்டியிட அனுமதிக்க வேண்டுமென்று அவரது ஆதரவு அணியினர் கோரி வருகின்றனர்.



இருப்பினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்குமிடையில் காணப்படும் முரண்பாடுகளை களைவதற்காக சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் 6 பேர் கொண்ட குழுவொன்றும் அமைக்கப்பட்டது. இந்தக் குழுவும் இருவருடனும் பேச்சுக்களை நடத்தியிருந்தது. பிரதமர் வேட்பாளராக மஹிந்த ராஜபக்சவை நியமிக்க வேண்டும் என்றும் இந்தக் குழு ஜனாதிபதிக்கு பரிந்துரையும் செய்திருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை பிரதமர் வேட்பாளராக நியமிப்பதற்கு உண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்பவில்லை என்றே தெரிகிறது. ஆனாலும் மஹிந்தவுக்கு ஆதரவான முன்னாள் எம்.பி.க்கள் அவருடன் அணி சேர்வதை தடுக்கும் வகையில் சில கருத்துக்களை அவர் தெரிவித்து வருவதாகவே தெரிகின்றது.

இந்த நிலையில் மஹிந்தவை வேட்பாளராக நிறுத்தக்கூடாது என்ற நிலைப்பாட்டில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, சம்பிக ரணவக்க ஆகியோர் இருப்பதாக தெரிகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த மக்களை ராஜபக்சவுக்கு போட்டியிடுவதற்கான வாய்ப்பு வழங்கப்படாவிடின் தாம் அனைவரும் அவருடன் ஒன்றிணைந்து போட்டியிடுவோம் என்று அவர்கள் கூறி இருக்கின்றனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மஹிந்தவை உள்ளீர்க்க வேண்டுமென்று ஓரணியும் உள்ளீர்க்கவே கூடாது என்று மற்றொரு அணியும் செயற்பட்டு வருகின்றன. இதனால் கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் இரண்டாகப் பிரிந்து போட்டியிடும் நிலைமையே ஏற்பட்டிருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி நாட்டை ஆட்சி செய்த இந்த 6 மாதங்களில் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதுடன் பொருளாதாரமும் பாரிய சவால்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. 3 தசாப்தகாலம் தொடர்ந்த யுத்தத்தை நாம் முடிவுக்கு கொண்டுவந்தோம்.

ஆனால் இந்த அரசாங்கத்தில் யுத்தத்தில் கொல்லப்பட்ட புலிகளுக்கு நட்டஈடு செலுத்த வேண்டுமென்று அமைச்சரவைக்கு பத்திரமொன்றை முன்வைக்குமளவுக்கு வெட்கம் கெட்டவர்கள் உள்ளார்கள் என்பதை சொல்லியாகவேண்டும். நல்லவேளை இந்த அமைச்சரவைப் பத்திரம் நிறைவேற்றப் படவில்லை. அப்படி நிறைவேற்றப்பட்டிருந்தால் பயங்கரவாதி களுக்கு- நட்டஈடு வழங்கும் உலகின் முதல் நாடு என்ற சாதனை நமக்கு கிடைத்திருக்கும். புலிகள் இயக்கத்தைப் பாதுகாக்கவே இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவித்திருக்கின்றார்.

அத்துடன் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் செயற்பாடுகளூடாக புலிகள் மீண்டும் தலைதூக்கி நாட்டுக்கு அச்சுறுத்தலாவார்கள் என்றும் பிரசாரங்களை மேற்கொண்டனர். ஆனால் இந்த இனவாதப் பிரசாரங்களை முறியடித்து பெரும்பான்மையான மக்கள் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவையே ஆதரித்து இருந்தனர்.

உண்மையிலேயே முன்னாள் போராளிகள் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது பெரும் அல்லல்பட்டு வருகின்றனர். இவர்களுக்கு கடனுத-விகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போது அதனை இனவாதக் கண்ணோட்டத்துடன் இவர்கள் விமர்சிப்பது கவலைக்குரிய விடயமேயாகும்.

முன்னைய அரசாங்க காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. தற்போது அந்த நிலையில் ஓரளவு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக சிங்கள மக்கள் மத்தியில் மீண்டும் இனவாதத்தை தூண்டுவதற்கு எவரும் முயற்சிக்கக்கூடாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் அவரது அணியினரும் தேர்தலில் களமிறங்கி மக்களின் ஆணையைப் பெறட்டும். அது அவர்களது ஜனநாயக உரிமையாகும். அதற்காக இனவாதத்தைக் கிளப்பி மீண்டும் நாட்டை குட்டிச்சுவராக்க நினைப்பதை சற்று நிறுத்திக் கொண்டால் சரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வரலாற்றுப் பொக்கிஷங்கள்

இவ்வாசகங்களிலிருந்து வரலாற்று ரீதியான முக்கிய விடையங்கள் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் அதனை ஒரு ஆலயத்திற்கான நன்கொடைச் சாசனமாகக் கருதமுடியும்.

திரு.சோமாஸ்கந்த குருக்கள் உதவியுடன் திரு.நா.தம்பிராசா அவர்களின் முயற்சியினால் பேராசிரியர் செ.குணசிங்கம் அவர்களால் வாசிக்கப்பட்டு வீரகேசரி மூலம் 1972 ஆம் ஆண்டில் வெளிப்படுத்தப்பட்ட இக்கல்வெட்டின் நான்காவது பக்கத்தை வாசிப்பதற்கான முயற்ச்சி 2004ஆம் ஆண்டில் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டபோதும் பயனளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




இக்கல்வெட்டுடன் ஒரு பிற்கால நன்கொடைச் சாசனமும் இங்குள்ளது. 1878 ஆம் ஆண்டுக்குரிய அக்கல்வெட்டு வருமாறு.

**உ காளி அம்மனுக்கு**
**அயி செம்புலிங்கம்**
**செய்து கொடுத்தது**
**1878**
**தை மீ**
**ஆசாரி**

இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் காணப்படும் புராதான பௌத்த விகாரைகள் மற்றும் பௌத்த சின்னங்கள் என்பனவற்றிற்கு சிங்கள பௌத்த முலாம் பூசப்படும் இன்றைய சாழல் வருங்காலங்களில் இலங்கையில் தமிழர்களின் வரலாறு தொடர்பாக ஆராய்கையில் "தமிழ் பௌத்தம்" தொடர்பான ஆதாரங்களும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்பதனை வலியுறுத்தி நிற்கின்றது.




முற்றும்..

**வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்**

---

திருமலை வி.என்.சந்திரகாந்தி

# இரகசியங்கள்

சிறுவயதிலேயே என்னைச் சித்தியிடம் பொறுப்புக் கொடுத்து விட்டு அரபு நாடொன்றுக்கு தொழில் புரிய சென்று விட்ட எனது பெற்றோரை நினைத்து இரண்டு சொட்டு கண்ணீர் வடிக்கின்றேன்.

நான் பூப்பெய்திய பின்னராவது அவர்களது கவனம் என்மீது திசை திரும்பியிருந்தால்... இந்த நிலை எனக்கு நேர்ந்திருக்காது.

'அம்மாவின் அன்பிற்காக எனது பிஞ்சு மனம் ஏங்கி வெதும்பிய போது... அப்பாவின் பாசத்திற்காக நான் பரிதவித்த போது...' புதியதொரு அத்தியாயம் உதயமானது.

ராஜனும் சரோஜா அக்காவும் புதுமண தம்பதிகளாக எமது பக்கத்து வீட்டிற்கு குடி வந்தது இன்று போல் உள்ளது. சரோஜா அக்கா எப்படி எனது மனதில் இடம் பிடித்தாரோ, அப்படியே ராஜன் எனது சித்தியின் மனதை கவர்ந்து விட்டதும்... அக்கா மகப் பேற்றுக்கு ஆயத்தமாகி கொண்டிருந்த நாட்களில், அந்த அன்னியோன்யம் நெருக்கமாகி விட்டதும் எனக்கு புரியவே செய்தது.

அந்த நெருக்கம் அதிகரிக்க அதிகரிக்க, சித்திக்கும் சித்தப்பாவுக்கும் இடையே சச்சரவுகள் வலுத்தன. வாக்கு வாதங்கள் வளர்ந்தன. நிலமை பாதகமாக திரும்பிய போது... சித்தப்பா வீட்டை விட்டு வெளியேறினார். அதுவே அடுத்ததொரு அத்தியாயத்திற்கு காரணமாக மாறியது.

ராஜனின் ஆதிக்கம் வீட்டில் வலுத்தது.

தான் நினைத்த போதெல்லாம் வந்தான்.

அவனது வருகைகள் அநாகரீகமாகவும். அத்து மீரளாகவும் மாறின. தேநீருக்காக... ஆகாரத்திற்காக... மனைவியிடம் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய தேவைகளுக்காக வெளிப்படையாகவே சித்தியை நிர்ப்பந்தித்தான். இரவு நெடுநேரம் எங்கள் வீட்டில் தங்கினான்.

ராஜனுக்கும் சரோஜா அக்காவுக்குமான உறவில் விரிசல் ஏற்பட்டது. நீண்ட இரவுகளில் ஒரு சோடிக்கண்கள் எமது ஜன்னல் கண்ணாடியூடாக வேவு பார்ப்பதனை நான் உணர்ந்தேன். சித்தியும் உணர்ந்திருக்க வேண்டும். அந்த பார்வையின் கண் காணிப்பிலிருந்து தப்புவதற்காக, அவள் ராஜாவுக்காக சில சிறு சிறு தேவைகளை என் மூலம் நிறைவேற்றினாள்.

அது பிரச்சனையின் அடுத்த அத்தியாயத்தை திறந்து வைத்தது!

தனது தேவைகளுக்காக ராஜன் என்னை நிர்ப்பந்திக்க தொடங்கினான்.

'வதனா... உனது கையால் உணவு பரிமாறப் படாவிட்டால் எனக்கு பசிக்கவே மாட்டேன் என்கிறது...?

'சரோஜாவுக்கு முன்பதாக நான் உன்னை சந்திக்காதது எனது துர் அதிஷ்டம்... நீ இல்லா விட்டால் நான் இறந்து விடுவேன்...?

இப்படியான வார்த்தைகளால் அவன் என்னைக் கட்டிப் போட்டான். சித்தியை அவன் புறக்கணிப்பதை அவள் உணர்ந்த பொழுது அவள் அவன் மீது சீறி விழுந்தாள்.

'அடே ராஜன் சரோஜாவைக் கூப்பிடட்டுமா? என்று அவள் அவனை எச்சரிக்க முனைந்த போது... அவன் ஊரைக் கூப்பிடப் போவதாக மிரட்டினான்.' என்றாலும் சித்தி என்னை அவனது கரங்களில் வீழ்ந்து விடாத படி கட்டுப்பாடுகளை இறுக்கியதுடன், காரியத்திலும் இறங்கினாள்.

சித்தியின் தூண்டுதலால் குமரன் என்றொரு இளைஞன் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வரத் தொடங்கினான்.

குமரனின் கள்ளங்கபடமற்ற மனப்பாங்கு எனது மனதில் நேசத்தை வளர்த்தது. ராஜனின் மனதில் அது போட்டியையும் பொறாமையையும் வளர்த்தது. அவன் மேலான என் அன்பை தான் இழந்து விடுவேனோ என்ற பயம் அவனை ஆட்கொள்ளவும்...



சந்தர்ப்பங்கள் நிர்ப்பந்தங்கள் காரணமாக இன்று பிறிதொரு கிராமத்தில் அவனது நண்பன் ஒருவனின் வீட்டு அறையில் கசக்கிப் போடப்பட்ட மலராக நான் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றேன். இதோ வந்து விட்டேன் என்று வெளியே போன ராஜன் வெகுநேரமாகத் திரும்பாத ஏக்கம் என்னை பதை பதைக்க வைக்கின்றது. இரவு நடந்து விட்ட சம்பவங்கள் எனது அறிவீனத்தின் உச்ச கட்டம் என்பதை நான் சிறிது சிறிதாக உணருகின்றேன்.

# குட்டிக் கதை

'இந்தச் சமுதாயத்திலிருந்து நான் தூக்கி எறியப்பட்டு விட்டேன். நான் வீழ்ந்து விட்ட இடம் சாக்கடை என்பதில் சந்தேகம் இல்லை.'

திரைச் சேலையை நீக்கி ராஜனது நண்பனின் மனைவி உள்ளே வருகின்றாள். கட்டிலில் கண்ணீருக்கு மத்தியில் கலங்கியிருந்த என்னை ஆதரவுடன் தடவி கொடுக்கிறாள். 'குமரன் என்பது யார்? என்று என்னைக் கேட்கின்றாள். நான் விபரம் கூறுகிறேன்.

'எல்லாம் முடிந்து விட்டது. குமரன் இனி இவளை விவாகம் செய்யட்டும்.' என்று ராஜன் சூழுரைத்து சென்றதாக அவள் கூறவும் நான் அதிர்ச்சியடைகிறேன்.

தள்ளியபடி நான் புறப்படுகிறேன்... 'நச்சுத்திராவகம்... அலரிவிதை... ஆழ்கடல்... இராவணன் வெட்டு... எனது மனம் எடைபோடுகிறது....'

என்னில் பாசம் வைத்திருக்கும் எனது நண்பியை ஒரு தடவை தரிசிப்பதற்காக அவளது வீட்டுப் படி மிதிக்கிறேன். கதி கலங்கி நின்ற என்னை அவள் துளாவி எடுக்கிறாள்... சித்தியிடம் எதுவும் கூறுவேண்டாம் என மன்றாடுகிறேன். ஆனால் எனது நண்பியும் அவளது கணவரும் துரிதமாக செயல்படுவது எனக்கு தெரிகிறது. சில மணிநேரங்களில் சித்தியும் குமரனும் என்னிடம் ஓடோடி வந்து சேர்கின்றார்கள்.

தற்கொலையின் எல்லைக்கு வந்து விட்ட நான் எவருக்காகவும் எதையும் மறைக்க வேண்டிய தேவையில்லை. கதறியழுதபடி எனக்கு நேர்ந்த துயரங்கள் அனைத்தையும் ஒப்புவிக்கின்றேன். கள்ளங்கபடமற்ற குமரனின் முகத்தில் கோபக்கனல் பறப்பதைக் காண்கின்றேன். நிலத்தில் வீழ்ந்திருந்த என்னை இரு தோள்களிலும் பற்றி மேலே தூக்குகிறான். 'அம்பு அடிபட்ட பறவை போல' நான் அவனது கரங்களில் சரணடைகின்றேன். என்னை உச்சி முகர்ந்து உறுதியளிக்கின்றான்.

'எது நடந்தாலும் நீ என் மனைவி.' எங்கிருந்தோ என சித்தப்பா பதற்றத்துடன் ஓடி வருகிறார்...

'சரோஜா தற்கொலை செய்து விட்டாள்.! நான் அதிர்ச்சி அடைகின்றேன்.

குற்ற உணர்வு என்னை ஆட்கொள்கிறது.. குமரன் போல பல மனிதர்கள் பல தடவைகள் இறைவன் ஸ்தானத்திற்கு உயர்த்தி காட்டியிருக்கிறார்கள்....

ஆனால்... சரோஜாவின் விடயத்தில் தெய்வம் மனித ஸ்தானத்திற்கு இறங்கி விட்டதா? அன்றேல் மற்றொரு அத்தியாயத்தின் ஆரம்பத்திற்காக இந்த அத்தியாயம் நிறைவு பெறுகிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 60

# "ஏதேச்சையாக பிறர்க்குத் தீங்கிழைத்தல்"

(வி. என். சந்திரகாந்தி)





எமது வாழ்க்கையினூடாக நாம் பல அனுபவங்களைப் பெற்று எம்மை மேம்படுத்திக்கொண்டாலும் எமது சுபாவம் காரணமாக நாம் பிறர்க்கு பல தீங்குகளை நாளாந்தம் செய்து கொண்டே இருக்கின்றோம். சுபாவம் என்பது எமது பிறப்போடு இணைந்தது. ஏறத்தாழ பழக்கதோஷம் என்று கூறலாம். எமது புத்தி நடுவாண்மையுடன் நியாயத்தை கூறவல்லது. ஆனால் மனம் அப்படியல்ல. அது அறிவுக்கன்றி உணர்ச்சிகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பது. அது போலவே சுபாவம் இரத்தத்துடன் சேர்ந்தது. புதிதாக மணமுடித்த தம்பதியர் மத்தியில் முரண்பாடு ஏற்படுவதற்கு காரணம் அவர்களது சுபாவம் வேறுபட்டிருப்பதே.

எமக்கு நல்ல முதிர்ச்சி இருக்கும். சரி எது? பிழை எது? என்ற ஞானம் இருக்கும். ஆனால் நாம் ஏதேச்சையாக பிறர்க்கு தீங்கிழைப்பதை எமது சுபாவமாக கொண்டிருப்போம். இக்கட்டுரையின் நோக்கம் அப்படியான சிறு சிறு தவறுகளை வாசகர்களுக்கு சுட்டிக்காட்டுவதே.

எமது சிறு தவறுகளில் முன்னணியில் நிற்பது எமக்கு மட்டுமே தெரிந்த மற்றவர்களது இரகசியத்தை கசிய விடுவதால் எம்மில் நம்பிக்கை வைத்தவர்களுக்கு அது பெரும் தீங்காக அமைந்துவிடும்.

அடுத்தது 'புறங்கூறல்' ஆகும். புறங்கூறுபவர்கள் மேல் தனக்கு இருக்கும் கோபத்தின் உச்சக்கட்டமாக திருவள்ளுவர், 'புறங்கூறி பொய்த்து வாழ்தலைக் காட்டிலும் சாவது அறம் கூறும் ஆக்கம் தரும்' என்று சாடுகின்றார். எமது உறவினர்களும் நண்பர்களும் எம்முடன் அளவளாவிக் கொண்டிருக்கின்றார்கள். எமது மனமோ அவர்களுடைய கருத்துக்களுக்கு உடன்பாடாக இல்லை. அவர்களுடைய முகத்துக்கு நேரே கருத்துரைப்பதுதான் உண்மையில் பிரச்சனைகளுக்கு தீர்வாகும். ஆனால் அப்படிச் செய்யாது அவர்கள் விடைபெற்று சென்றபின் அவர்களை தூற்றுவது என்ன முறை? இந்த தவறை நாம் ஒவ்வொருவரும் உடன் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

அடுத்து 'மற்றவர்களுக்கு வரவிருக்கும் நன்மையை அசூயை காரணமாக தடுத்தல்.' 'எனக்கு மூக்கு போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனம் பிழையாக இருக்கவேண்டும்' என்றொரு பழமொழி வழக்கிலுண்டு. எமது உறவுகளுக்கு ஒரு இலட்சம் கிடைத்து விட்டால் எமது மனம் கொதிக்கின்றது. ஆயிரக் கணக்கானவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்கிறது. பக்கத்து வீட்டுக்காரனின் பிள்ளைக்கு அனுமதி கிடைப்பதை மனம் பொறுத்துக் கொள்ளாது. 'பார்த்து எழுதித்தான் பாஸ் பண்ணியிருப்பான்' என்றொரு பழிச்சொல்லும் கூட.

எமது மற்றொரு தவறு ,அவசியமான நேரத்தில் உதவி செய்ய தவறல்' ஆகும். நாம் மற்றவர்களுடன் உறவும் நட்பும் பாராட்டி நேசமாக இருப்போம். ஆனால் அவர்களுக்கு ஒரு உதவி தேவைப்படும் இடத்தில் மெதுவாக சறுக்கிவிடுவோம். அதற்கு காரணம் நாம் இதுவரையில் எமது சுயநலம் காரணமாகவே அவர்களுடன் உறவு பாராட்டினோம். அவர்கள் மீது எமக்கு உண்மையான அன்பு இல்லை. இப்போ அவர்கள் கேட்கும் உதவியை செய்தால் எம்மை விட மேம்பட்டுவிடுவார்கள் என்கின்ற குறுகிய மனப்பான்மை.! எமது எதிர்வீட்டுக்காரனுக்கு இரண்டு பெண் பிள்ளைகள். 'இவர் எப்படி அப் பெண்களை கரை சேர்க்கின்றார் என்று பார்ப்போம்' என எண்ணி மனம் குதுகலிக்கின்றது. தீடீரென ஒரு பிள்ளைக்கு விவாகம் முற்றாகிறது. யாராவது சிறிய பண உதவி செய்தால் அப்பிள்ளை கரைசோந்துவிடும். அப்பிள்ளை கரைசேர்வதை எமது மனம் பொறுக்காது'. எனவே முட்டுக்கட்டை போடுகின்றோம். 'பணத்தை யாரிடமாவது மாறலாம்தான். ஆனால் பொறுப்புக்கொடுக்க வேண்டும். உயர் வட்டி கொடுக்கவேண்டும் என்று நிபந்தனைகள் போடுகின்றோம். சற்று சிந்தியுங்கள். நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை இது தானா? 'உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் கழைவதாம் நட்பு' என்ற குறளை நாம் அறியோமா?

எமது அடுத்த பெருந்தவறு 'பக்கச்சார்பாக நடத்தல்' எமது அறிவும் அனுபவமும் எமக்கு பல பாடங்களை கற்றுத்தந்துள்ளன. எமக்கு நீதி நியாயம் நன்கு புரியும். சமூக மட்டத்தில் ஏழை - பணக்காரன், கல்வி கற்றவன் - கல்லாதவன், எமது ஊர்க்காரன் - பிறஊர்க்காரன், உறவினன் - உறவினனல்லாதவன் என்று பல பாகுபாடுகளுக்கு மத்தியில் நாம் வாழுகின்றோம். ஆனால் நீதி நியாயம் என்று வரும் போது நாம் எந்த ஒரு பாகுபாட்டுக்கும் இடமளிக்காமல் பக்கச் சார்பின்றி கருத்துரைக்கவேண்டும். உதாரணத்துக்கு ஒரு பின்தங்கிய கிராமத்தின் 'ஊர்ப் பஞ்சாயத்தின்' தீர்ப்பை பார்ப்போம் ஒரு பணக்கார வீட்டுப்பையன் பதினாறு வயதே நிரம்பிய ஏழைச்சிறுமியை கடத்திச்சென்று கெடுத்துவிட்டான். விவாகம் செய்யவும் மறுத்துவிட்டான். அந் நிலையில் பெண்ணின் பெற்றோர் பஞ்சாயத்தில் முறைப்பாடு செய்கின்றார்கள். பஞ்சாயத்து, நிலைமைகளை தீர விசாரித்து தீர்ப்பளிக்கின்றது. 'பணக்கார வீட்டுப் பையனை சகலரும் அறிவர். ஏழைப்பெண்ணும் அறிந்தே வைத்திருப்பாள். அப்பையனின் குடும்பத்தினரின் நற்பெயருக்கு குந்தகம் விளைவிப்பதென்பது பெரும் தவறு. எனவே அப்பெண்ணையும் குடும்பத்தினரையும் இப் பஞ்சாயத்து இக் கிராமத்திலிருந்து தள்ளி வைக்கின்றது.' பக்கச் சார்பாக நடக்கும் ஒவ்வொருவரும் இந்த தீர்ப்பை முன்னிறுத்தி திருந்த வேண்டும்.


சமூகத்தில் அவர் அவர் தமது கடமைகளை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றார்கள். ஒரு பெற்றோராக, சகோதாராக, பிள்ளைகளாக, நண்பனாக நம் எல்லோருக்கும் கடமைகள் வகுக்கப்பட்டுள்ளன. பிரதானமாக பெற்றோர் என்ற ரீதியல் நாம் பிள்ளைகளை நல்லவர்களாகவும் இச் சமுதாயத்துக்கு பயன்படக்கூடியவர்-களாகவும் வளர்க்க வேண்டும். அதே போன்று பிள்ளைகளும் நல்லொழுக்க முடையவர்களாக நடந்து கொள்வதன் மூலம் பெற்றோரை கௌரவிப்பதுடன் சமூகத்திற்கும் பணியாற்ற வேண்டும். கணவன் மனைவியை காக்க வேண்டும். அவளுக்கு மறுவளமாக மனைவி கணவன் மேல் அன்பு பூண்டு பணிவிடைகள் செய்ய வேண்டும். இன்னும் சொல்லப்போனால் சகோதர பாசம் என்பது அனைத்து உறவுகளை காட்டிலும் உயர்ந்தது.

அடுத்து 'கோள் சொல்லுதல்' பெரும் தவறாக கணிக்கப்படவேண்டியதாகும். அதனால் பெரும் சாம்ராஜ்ஜியங்களே சரிந்துள்ளன. ஒரு அனுபவ பகிர்வு மூலம் இதனை நோக்குவோம்.

நான் அரச சேவையில் இருந்ததால் நாட்டிலேயே தங்கிவிட்டேன். எனது தம்பி தங்கை இருவரும் வெளிநாடு சென்று நல்ல நிலையில் இருக்கின்றார்கள். தங்கை சிறிது பின்நின்றாலும். மச்சான் அவளை தூண்டி எமக்கு உதவி செய்ய வைப்பார். எனது மைத்துனி மறுவளம். எனது தங்கையின் மகளுக்கு ஒரு வருடங்களுக்கு முன்னர் விவாக பேச்சு முற்றுப்பெற்றது. நானும் சமூக வழக்கப்படி தம்பியுடன் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டேன். மைத்துனியும் உரையாடல்களுக்கு செவிமடுத்தாள். அவா எனது தங்கை பற்றி பலபுறணிகளை கூறியிருந்தும் நான் தங்கைக்கு கோள் சொல்லவில்லை. காரணம் இருவரதும் ஒற்றுமையை குலைக்க கூடாது எனபதே! ஆனால் மைதுனி நடந்து கொண்ட விதமோ மாறானது. என்னையும் தங்கையையும் பிரிப்பதற்கு நன்கு தூபம் போட்டுள்ளாள் என்பது மட்டும் புரிந்தது. எனது தங்கை தொலைபேசி எடுத்தால். அழுகிறாள். என்னை குற்றம் சாட்டி ஒரு கடிதத்தையும் வரைந்துள்ளாள். அதில் அவளது அண்ணி வஞ்சகமில்லாமல்தான் சொன்னவா. அவாவில் பிழை இல்லை என்று வக்காளத்தும் வாங்கியுள்ளாள். என்ன சொன்னா என்பதை நானோ அறியேன்! நான் தூக்கி வளர்த்த தங்கை என்மேல் கோபிக்கும் அளவிற்கு மைத்துனி போட்ட தூபம் வேலை செய்திருக்கின்றது.!

# காலச்சக்கரத்தின் தடயங்கள்

சஞ்சயன் செல்வமாணிக்கம்




2010 மார்கழி மாத ஆரம்பத்தில் ஒரு மாலைநேரம், எதையும் சமைத்துண்ணும் நிலையில் நான் இருக்கவில்லை. மெதுவாய் ஜன்னலால் எட்டிப்பார்த்தேன். இருவர் தமக்குள் ஏதோ பேசியபடியே கடந்து போயினர். அவர்கள் பேசும் போது அவர்கள் வாயிலிருந்து குளிரின் காரணமாக ஆவி பறந்து கொண்டிருந்தது. எனவே வெளியில் சற்றுக் குளிர் என்று அனுமானித்துக்கொண்டேன். 10 நிமிட நடையில் ஒரு தமிழ் உணவகம் இருக்கிறது. அங்கு போய் ஏதேனும் வாங்கிக் கொள்வோம் என நினைத்தபடியே குளிருக்கேற்ற உடைகளுடன் புறப்பட்டேன்.

நான் ஒரு புல்வெளியை கடந்தே செல்லவேண்டும் என்பதனால் அதை நோக்கி நடக்கலானேன். புல்வெளியினை சப்பாத்துக் கால்கள் மிதித்தபோது மனது "நிலம்" இறுகிவிட்டது என்று அறிவித்தது. இது பற்றி சிந்தித்தபடியே நடந்து கொண்டிருந்தேன். திடீர் என்று மனதுக்குள் இன்னும் ஒரு மாதத்தில் நான் நோர்வே வந்து இருபத்தியைந்து வருடங்களாகப்போகின்றன என்பதனை உணர்ந்தேன்.

எனது வாழ்வின் பெரும் பகுதி எனக்குச் சொந்தமில்லாத ஓர் நாட்டில் கழிந்திருக்கிறது என்று கூறவிரும்பினாலும், அப்படிக் கூறமுடியாதிருக்கிறது. காரணம் நான் இந்த நாட்டை எனது நாடாகவே நினைப்பது என்பதாயிருக்கவேண்டும்.

இருபத்தியைந்து வருடங்கள் என்பது நீண்ட காலம். இருபத்தியைந்து வருடங்கள் என்னை செதுக்கி விட்டிருக்கிறது. செதுக்கப்பட்ட நான், சில இடங்களில் மட்டும், எனக்கு அழகாகவே தெரிகிறேன். சில இடங்கள், எனக்கே என் மீது எரிச்சலை ஏற்படுத்துகின்றன. பல இடங்களில் மனதுடன் சமரசம் செய்து கொள்ளவேண்டியிருக்கிறது.

மற்றவர்களுக்கு நான் "அழகாய்" தென்படுகிறேனா என்று கவலைப்படுவதில் எதுவித அர்த்தமும் இருப்பதாய் தெரியவில்லை, எனக்கு. எனது வாழ்வை வாழ்வது நான் மட்டுமே, மற்றவர்கள் அல்லவே. எனவே மற்றவர்களுக்கு நான் ஏன் அழகாய் இருக்கவேண்டும். எனக்கு நான் அழகாய் இருப்பதே முக்கியம் போல் இருக்கிறது.

50 வயதினை நான் நெருங்கிக்கொண்டிருக்கிறேன். ஆனால் எப்போதும் போல "குதூகல வயதில்" இருப்பது போன்றே உணருகிறேன், இதை தான் எனது தாயார் "இனியாவது வளர்ந்தவர்கள் போல் நட" என்று அடிக்கடி குறிப்பிட்டுக்கொண்டே இருக்கிறாரோ என்னவோ? நான் வளர்ந்த குழந்தையாய் இருக்கவே விரும்புறேன். அதுவே மகிழ்ச்சியையும் தருகிறது.

கௌரவம், அந்தஸ்துக்கள், படோபகாரங்கள், வீண் ஆடம்பரங்கள் இவை எல்லாம் எவ்வளவு முட்டாள் தனமானவை என்பதை அறிந்து நிமிரும் போது வாழ்க்கை, நிம்மதியான தூக்கத்தின் பெறுமதி மேற்கூறியவையின் முன்னால் தூசுக்குச் சமானம் என்பதை உணர்த்திப் போகிறது.

இந்த இருபத்தியைந்து வருட காலத்தில் ஆரம்ப ஆண்டுகளைத் தவிர்த்து இன்று வரை இரட்டைக்கலாச்சார வாழ்க்கை முறைமையுடனேயே வாழ்ந்துவருகிறேன். அதன் பலன்களை அனுபவித்துமிருக்கிறேன். அவலங்களை உடலெங்கும் உணர்ந்துமிருக்கிறேன்.

நோர்வேஜிய தமிழனாய் இருப்பது, நோர்வேயிலேயே சிக்கலாய் இருக்கிறது. ஏனைய தமிழர்களுடனேயே கலாச்சார மோதல்கள் வந்த போகின்றன. இங்கே இப்படியான நிலை என்றால், இலங்கைக்கு செல்லும் போதெல்லாம் தற்போது ஒரு அன்னியனாகவே உணருகிறேன். எனது கருத்துக்களும், பிரச்சனைகளை அணுகும் முறையும் எனது தாயாரினால் ஏற்கமுடியாதிருக்கிறது. எமக்கிடையில் முன்பிருந்த கருத்தொற்றுமை தற்போதில்லை. முன்பெல்லாம் திருநீறு இன்றி நான் வெளியில் செல்வதில்லை. ஆனால் தற்போது இறுதியாக எப்போது திருநீறு அணிந்தேன் என்பதே ஞாபகமில்லாதிருக்கிறது. புனிதமான காதல், அதன் பின்னான வாழ்வு என்பன பற்றி வாழ்ந்தறிந்ததால் அவை பற்றிய யதார்த்தமான புரிதலையடைந்திருக்கிறேன்.

காலப்போக்கில் மேற்கத்திய சிந்தனாமுறை, செயல்முறைகள் என்னுள் பலமாகவே ஊடுருவியிருப்பதை அவதானிக்க முடிகிறது. முன்பு, எனது சிந்தனைமொழி தனித் தமிழில் இருந்து, தற்போது தமிழ் கலந்த இந்நாட்டு மொழியாய் மாறியிருப்பதை உணர்கிறேன்.

நான் "ஒரு சுத்தத் தமிழன்" என்னும் அடையாளத்தை இழந்துவரும் ஒரு மனிதன், எனக் காட்டுகிறது என்னும் சிலரின் வாதத்தில் ஏற்பில்லை, எனக்கு. மாற்றங்களை ஏற்றுக்கொண்டு அவற்றுடன் பதார்த்தமாய் வாழ்வதும், கால, சமுதாய மாற்றங்களுக்கு ஏற்ப எம்மை மாற்றியபடியே வாழும் ஒரு நோர்வேஜியத்தமிழனாயே என்னை அடையாளம் காண விரும்புகிறேன்.

இவன் ஒரு புலன் பெயர்ந்த தமிழன் என்று யாரும் திட்டலாம். அது உங்கள் கருத்து. மேற் கூறியது எனது கருத்து.

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு



## திரை விமர்சனம்

### இயக்குனர்கள் முருகன் மற்றும் ஆனந்தின்
### சந்தானம், ஆஷ்னா, அகிலா நடிக்கும்
## "இனிமே இப்படித்தான்"

1980களில் சிவக்குமார், பாக்கியராஜ், மோகன் போன்ற காதல் மன்னர்கள் எடுத்து அதிலும் வெற்றியடைந்த கதைக்களம் தான். வெறும் வாயிலே வடை சுடுற மாதிரி இருக்கும் ஒரு பையன் சந்தானம். "பார்த்த ஒரு லுக்"கிலயே அத்தனை அழகையும் தேடி ஓடி ஆத்துல ஒரு கால் சேத்துல ஒரு கால் வைக்கிறார் சந்தானம். பிறகு என்ன நடந்தது என்பது தான் கதை.

படத்தை பற்றிய அலசல் ஒரு பெண்ணை காதலித்து இன்னொரு பெண்ணை நிச்சயம் செய்து விழிபிதுங்கும் கதையின் நாயகனாக வரும் சந்தானம் பட்டைய கிளப்புகிறார். முகத் தோற்றம், உடல் தோற்றம், சிகையலங்காரம், உடை, நடனம், சண்டை காட்சி என ஹீரோ விற்கான அனைத்தையும் மெருகேற்றியிருக்கார். காதலை propose பண்ணும் காட்சியிலும் சரி, காதலியை துரத்தி துரத்தி காதலிக்கும் காட்சியிலும் சரி நம்ம ஊர் பசங்களுக்கு புது Trend ஏற்படுத்தி கொட்டுக்கிறார், interval முன் வரும் காட்சியிலும் Restaurants காட்சியிலும் அரங்கமே சிரிப்பொலியில் அதிருகிறது.

மொத்ததில் சந்தானம் ஹீரோவாக "BACK WITH A BANG". படத்தில் வரும் இரு ஹீரோயின்களுக்கும் பொருத்தமான கதாபாத்திரங்கள். சந்தானத்தை பார்க்கும் முதல் காட்சியிலேயே அறைவது முதல் சந்தானத்தை மிரட்டுவது வரை கலக்கியுள்ளனர். பாடல் காட்சிகளில் கவர்ச்சியை அள்ளி தெளித்திருக்கிறார்.

தம்பி ராமையா, சந்தானத்தோடு தாய் மாமாவாக வந்து இவர் செய்யும் காரியங்களும், கொடுக்கும் யோசனைகளும் "அதிரி புதிரி". முழு நீள நகைச்சுவை கதையை எடுத்து அதை சரியாக கையாண்ட படத்தின் இயக்குனர்கள் முருகன் ஆனந்த் இருவருக்கும் பாராட்டுக்கள். பாடல்கள் எல்லாம் ஏற்கனவே பட்டி தொட்டியெல்லாம் ஹிட்டான நிலையில் பின்னணியிலும் பின்னியிருக்கிறார் இசையமைப்பாளர் சந்தோஷ் தயாநிதி. தனக்கு என்ன வருமோ அதை அழகாக வெளிக்காட்டி இருக்கிறார் சந்தானம். காதலில் பொண்ணுங்கள மட்டும் குத்தம் சொல்லி கலாய்ப்பதை குறைத்து இருக்கலாம். படத்தில் யார் எந்த வேலை செய்கிறார்கள் என்று கடைசி வரை சொல்லவே இல்லையே?.


மொத்தத்தில் சந்தானம் முழு நீள ஹீரோவாகி இனிமே நாங்களும் ஹீரோ தான் என்று இப்படத்தின் மூலம் நிரூபித்துவிட்டார்.



## பெண்ணாகப் போகும் சிவகார்த்திகேயன்

சிவகார்த்திகேயன் என்றாலே காமெடி மட்டும் தான் செய்வார், சிரமப்பட்டு தான் நடிக்கமாட்டார் என ஒரு பேச்சு உள்ளது. இந்த கருத்தை முறியடிக்கும் விதத்தில் தன் அடுத்த படத்தில் பெண் கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளாராம். மேலும், இதற்காக தான் ஐ படத்தின் மேக்கப் கலைஞரை அழைத்து வந்தார்களாம்.

சத்ய பிரபாஸின் இயக்கத்தில் வெளியான "யாகாவாராயினும் நாகாக்க" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......




## ரஜினி + ஷங்கர் + ஆர்னால்ட்

ரஜினி, ஷங்கர் இணையும் மெகா படத்தில் ஹொலிவுட் மெகா ஸ்டார் ஆர்னோல்ட் நடிக்கவுள்ளதாக புதிய தகவல் கசிந்துள்ளது. ஷங்கர் இயக்கிய ஐ படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழாவுக்கு ஆர்னோல்ட் சென்னை வந்திருந்தபோது தமிழில் தனக்கும் ஒரு வாய்ப்புத் தருமாறு ஷங்கரிடம் ஆர்னோல்ட் கேட்டிருந்தார். இதையடுத்து ரஜினிக்கு இணையான பாத்திரத்தில் ஆர்னோல்ட் நடிக்கப் போகிறாராம். ஆர்னோல்டும் இந்தியாவில் தனக்காக உள்ள ரசிகர் கூட்டத்தை மனதில் வைத்து நடிக்கச் சம்மதித்திருப்பதாகத் தகவல்.

## நான் அழகில்லை
### – சமந்தா

முன்னணி நாயகியாகத் திகழும் நடிகை சமந்தா, நான் ஒன்றும் அழகான பெண்ணில்லை. இன்று உங்கள் கண்களுக்கு நான் அழகாகத் தெரிகிறேன் என்றால் அதற்குப் பின்னால் பல பேரின் உழைப்பு இருக்கின்றது. மேலும் இந்த வாழ்க்கை நான் ஆசைப்பட்டு பெற்றது. அதனால் எனது உள்ளத்தில் ஏற்படும் மகிழ்ச்சி இன்னும் அழகாகக் காட்டுகிறது. என்று வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

## புலிக்கு 1 நியாயம் எங்களுக்கு 1 நியாயமா



புலிப் படத்தின் டீசர் வருவதற்குள் லீக் ஆகி, ஒருவர் கைதானார். அதேபோல் ப்ரேமம் படத்தின் திருட்டு விசிடி மிகவும் பரவலாகவே விற்று வருகின்றார்-களாம். இதனால் கோபமடைந்த படத்தின் தயாரிப்பாளர் 'புலி டீசர் லீக் ஆனதற்கு உடனே ஒரு முடிவெடுத்தார்கள். ஆனால், எங்கள் படமே திருட்டு விசிடியில் வெளிவருகின்றது, இதை யாரும் கண்டுக்கொள்ள வில்லையா? என கோபமாக கூறியுள்ளார்.

## இயக்குனராகும் "தல"



அஜித்தே ஒரு படத்தை இயக்க-விருக்கிறார் என்று சொல்லப்-படுகிறது. அவர் இயக்கப்போவது குறும்படமாம். ஓரிரு நாட்களில் அதன் படப்பிடிப்பை முடித்துவிடத் திட்டமிட்டிருக்-கிறார்களாம். அந்தப்படத்தில் அஜீத் நடிக்கப்போவ-தில்லையாம்.

அதில் நடிக்கவிருப்பவர் தேசியவிருது பெற்ற அப்புக்குட்டியாம். ஒரே அறைக்குள் நடக்கவிருப்பது போன்ற கதையைக் கொண்ட அந்தப்படத்தைப் படமாக்க ஒரு செட்டும் உருவாக்கப்பட்டிருக்கிறதாம். அடுத்து முழுநீளப்படமொன்றை இயக்குவதற்கான முன்னோட்டம்தான் இந்தப்படம் என்றும் சொல்லப்படுகிறது.

## மானம் காத்த தமன்னா

மெகா பட்ஜெட் படமான பாகுபலியில் குத்தாட்டப் பாட்டுக்கு நோரா பதேஹி கேமரா முன்பு ஆடிக் கொண்டிருக்கையில் அவரது மேலாடை கழன்றுவிழ அவர் அதிர்ச்சி அடைந்தார். இதை பார்த்த தமன்னா ஓடிப் போய் அவரது மானத்தை காத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டும் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## UV Ray ரோபோ

ஊதாக் கதிர்களின் மூலம் பிறப்பிக்கப்படும் ஒளியின் ஊடாக தரைகள் போன்றவற்றினை சுத்தம் செய்யக்கூடிய சிறிய ரோபோ ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. சமையல் அறைக்கு மிகவும் பொருத்தமானதாகக் காணப்படும் இதனை THAT! எனும் நிறுவனம் வடிவமைத்துள்ளது.

ஒரு இறுவட்டின் அளவே உடைய இந்த ரோபோவானது உணவுகளைத் தயாரிக்கும் போது தரையில் சிந்திய இரசாயனப் பொருட்களையும் இலகுவாக சுத்தம் செய்துவிடும் ஆற்றல் உடையது.

## அழகு சாதனங்களுடன் செல்பி

தற்போது உள்ள தலைமுறையினரிடம் செல்.்.பி என்ற பழக்கம் பரவலாக காணப்படுகிறது. மொபைல் போன்களில் பின் பக்க கமெராவில் புகைப்படம் எடுப்பதை விட, முன் பக்க கமெராவில் எடுக்கப்படும் தங்கள் உருவம் சற்று அழகாக இருப்பதாக அவர்கள் நினைக்கின்றனர்.

இதை பயன்படுத்திக் கொண்ட அப்ளிக்கேஷன் வடிமைப்பாளர்கள் பல செல்.்.பி ஆப்களை உருவாக்கியுள்ளனர். அவற்றில் சிலவற்றை பற்றி பார்க்கலாம்.

1) Glitché

இதனை Vladimir Schreyder உருவாக்கியுள்ளார். பலவித அம்சங்களுடன் இது அசத்தலாக வேலை செய்யும். இதனை iPhone-ல் மட்டுமே பயன்படுத்த முடியும்.

2) Frontback

இதன் மூலம் நம்மையும், நாம் பார்ப்பதையும் படம் எடுக்க முடியும். 3,00,000-க்கும் அதிகமான பதிவிறங்களுடன் ஹிட் அடித்துக் கொண்டிருக்கிறது. இருவழிகளை படம் பிடிப்பதால் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

3) MomentCam

சீனாவின் படைப்பான இது Google Play-ல் கிடைக்கிறது. உங்களுடைய படங்களை கார்ட்டுன்களாக கொடுத்து உங்களை வியக்க வைக்கும். ஆப்களின் வரிசையில் உச்சத்திலும் இருக்கிறது.

4) EyeEm

இது சமீபத்தில் தான் வெளிவந்துள்ளது. ஆனாலும் அதற்குள் சந்தையில் நல்ல வரவேற்பை பெற்றிருக்கிறது. துல்லியமான படங்களை எடுக்க உங்களுக்கு உதவும். இதனை ஆண்டிராய்டு போனில் பயன்படுத்த முடியும்.

5) Candy Camera

இந்த அப்ளிக்கேஷனுக்கு Google Play Storeý அதிக மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் செல்.்.பி எடுப்பவர்களுக்கு இது நல்ல ஒரு அனுபவத்தை கொடுக்கும். beautification, blemish removal, make-up போன்ற பல அம்சங்கள் இதில் கொடுக்கப்பட்டுள்ளது.




## 60 fps வேக வீடியோ

முன்னணி வீடியோ பகிரும் தளமாக திகழும் யூடியூப் ஆனது 60fps வேகம் கொண்டதும், 4K Ultra HD வீடியோக்களை பகிரும் அப்ளிகேஷனை இவ்வருட ஆரம்பத்தில் அறிமுகம் செய்திருந்தது. இவ்வாறான நிலையில் சில மாதங்களின் பின்னர் தற்போது அப்பிளின் iOS மற்றும் கூகுள் Android இயங்குதளங்களில் செயற்படும் சாதனங்களுக்கான யூடியூப் அப்பிளிக்கேஷன் ஊடாக 60fps வேகத்தில் வீடியோக்களை பார்வையிடும் வசதியினை அறிமுகம் செய்துள்ளது.

## மைல் கல்லை எட்டிய DROP BOX

ஒன்லைன் சேமிப்பு வசதியினை வழங்கிவரும் பிரபல்யமான நிறுவனங்களுள் ஒன்றான Dropbox ஆனது தற்போது 400 மில்லியன் பயனர்களை எட்டியுள்ளது. கடந்த வருடம் மே மாதத்தில் 300 மில்லியன் பயனர்களைக் கொண்டிருந்த Dropbox ஒரு வருடம் எனும் குறுகிய காலத்தினுள் மேலும் 100 மில்லியன் பயனர்களை பெற்று சாதனை படைத்துள்ளது. சில தினங்களுக்கு முன்னர் அன்ரோயிட் சாதனங்களுக்கான புதிய Dropbox அப்பிளிக்கேஷன் அறிமுகம் செய்யப்பட்டிருக்கும் இவ்வேளையில் சாதனை படைத்துள்ளது.

அமெரிக்காவை தளமாகக் கொண்டு தனது சேவையை வழங்கிவரும் Dropbox ஆனது 2008 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.



## வெடித்தது iphone -6

கடந்த காலங்களில் ஸ்மார்ட் கைப்பேசிகளின் வெடிப்பு சம்பவம் அதிகமாக காணப்பட்டிருந்த போதிலும் அண்மைக் காலங்களில் குறைவடைந்திருந்தன. இதேவேளை அண்மைய வெடிப்புச் சம்பவமாக இந்தியாவின் குர்கான் பகுதியிலுள்ள கிஷான் யாதவ் என்பவருடைய iPhone 6 வெடித்துள்ளமை பதிவாகியுள்ளது. எனினும் இதன்போது அவருக்கு எவ்விதமான காயங்களும் ஏற்பட்டிருக்கவில்லை.

OTHER

## தண்டவாளத்தில் இயங்கும் கார்

ரயில் தண்டவாளத்தில் பயணிக்கக்கூடிய வகையிலான காரினை சொகுசு கார்களைத் தயாரிக்கும் Mercedes நிறுவனம் வடிவமைத்துள்ளது. நான்கு பேர் பயணிக்கக்கூடிய சிறிய ரயில் போன்று இருக்கும் இக்காருக்கு Smart Forrail எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதில் தலா 80 கிலோகிராம் எடைகொண்ட நான்கு சில்லுகள் காணப்படுவதுடன் இவற்றில் ரயர் மற்றும் டியூப் இல்லாதவாறு முற்றிலும் இரும்பினால் உருவாக்கப்பட்டுள்ளன.




## நீரிழிவு நோயாளர்களுக்கான இலகு கருவி

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறித்த கால இடைவெளியில் இன்சுலின் ஊசி போடப்படுவது அவசியமாகும். எனினும் அவசர தேவைகள் மற்றும் ஊசிகள் கிடைக்காதவிடத்து உடனடியாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் Smart Patch எனும் புதிய இன்சுலின் பட்டி ஒன்று அமெரிக்க ஆராச்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

4 சென்ரி மீற்றர்கள் நீளமான இந்த பட்டியில் மிகவும் நுண்ணிய ஊசிகள் காணப்படுவதுடன் இவற்றினூடாகவே இன்சுலின் செலுத்தப்படுகின்றது. மேலும் இவற்றில் குருதியில் உள்ள குளுக்கோசின் மட்டத்தை அறிந்துகொள்வதற்கு விசேட சென்சாரும் பொருத்தப்பட்டுள்ளது.

இச் சென்சார் குருதியிலுள்ள குளுக்கோசின் மட்டம் மிகவும் உயர்வாக காணப்படுகின்றது என தெரிவித்தால் இன்சுலின் ஆனது தானாகவே வெளியேறு குருதியில் கலக்கும் வகையில் Smart Patch வடிவமைக்கப்பட்டுள்ளது.



## அனுப்பிய மெயிலை திரும்பப் பெற

மின்னஞ்சல் என்பது மனித வாழ்வில் இன்றியமையாததாக மாறிவிட்டது. கூகுள் நிறுவனத்தின் ஜிமெயிலானது காலத்திற்கு காலம் பயனர்களின் தேவைகள் கருதி பல புதிய வசதிகளை வழங்கி வருகின்றது.

இந்நிலையில் தற்போது தவறுதலான நபருக்கு அனுப்பிய மின்னஞ்சலை மீளப்பெற்றுக்கொள்ளும் வசதியை அறிமுகம் செய்துள்ளது.

இவ்வாறானதொரு வசதியினை வழங்குவதற்கு கடந்த காலத்திலிருந்தே பரிசீலித்து வந்த கூகுள் நிறுவனம் Undo Send எனும் குறித்த வசதியினை பயனர்களுக்காக வழங்கியுள்ளதாக கடந்த திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

## தனிமனித பாவனை ஜெட்

மூன்று தசாப்த கால கடினமான உழைப்பின் காரணமாக உருவாக்கப்பட்ட Jetpack எனும் சாதனம் தனி மனிதர்களின் அல்லது பொது மக்களின் பாவனைக்காக அடுத்த வருடம் விற்பனை செய்யப்படவுள்ளது.

இதனை நியூசிலாந்து நிறுவனமான Martin Jetpack வடிவமைத்துள்ளது. இச்சாதனத்தின் உதவியுடன் 3,000 அடிகள் உயரம் வரை பறக்க முடியும். மேலும் மணிக்கு 46 மைல் வேகத்தில் இது பறக்கக்கூடியது.



## எடிட் & போஸ்ட்

பேஸ்புக் சமூகவலைத்தளத்தினை மொபைல் சாதனங்களில் இலகுவாக பயன்படுத்துவதற்காக விசேட அப்பிளிக்கேஷன்கள் உருவாக்கப்பட்டு வருகின்றது.

இனி ஒன்லைனில் இருந்தவாறே புகைப்படங்களை விரும்பியவாறு எடிட் செய்து நேரடியாக தரவேற்றம் செய்யக்கூடிய வசதி தரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நடப்பு

# தீய வழியில் உழைத்த பணம் என்றுமே நிலைக்காது...

- பாலையூற்றான் -

இன்று எம் மாணவர்கள் போட்டி ஊடாக கல்வியில் தம் ஈடுபாட்டை காண்பிக்கின்றனர். இந்தப் போட்டி 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு கா.பொ.த (சாதாரண தரம்) கா.பொ.த (உயர்தரம்) என்றெல்லாம் முகம் கொடுத்து பல்கலைக்கழகம் வரை நீள்கிறது. சில மாணவர்கள் சிறு பராயத்தில் கெட்டிக்காரர்களாக விளங்குவார்கள். சிலர் ஆண்டு எட்டுக்குப் பின் ஒரு அடியைக் கூட முன்னெடுத்து வைக்க முடியாமல் பாடசாலை வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுவார்கள். சிலர் ஆரம்பத்தில் மந்த கதியாக இருந்து ஆண்டு எட்டுக்குப்பின் அவர்கள் கல்வி தொடர்பில் காட்டும் ஆர்வம் மிக உக்கிரமாக இருக்கும்.

உலகை மேன்மையடையச் செய்த விஞ்ஞானிகள், கண்டுபிடிப்பாளர்கள், உலகத் தலைவர்கள் மற்றும் மேதாவிகள் போன்றோரை எடுத்துக் கொண்டால் அவர்களின் பின்புலங்கள் கல்வித் துறையிலோ, பொருளாதார துறையிலோ பிரகாசமாக இருந்ததில்லை.

முரண்பாட்டு காலங்களில் கூட வடக்கு மாகாண பாடசாலை சிறார்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளில் அதிக புள்ளிகளை பெற்று வியக்கச் செய்திருக்கின்றனர். பெரும்பாலான பெற்றோர் தங்களின் சுய கௌரவத்திற்காக மாணவர்களை இன்று ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பல பிரத்தியேக வகுப்புகளுக்கு அனுப்பி உரிய ஓய்வு, விளையாட்டு



என்பவற்றிற்கு தடையாக இருந்து வருகிறார்கள்.

பிள்ளைகள் கல்வி விடயத்தில் மிக மும்முரமாக ஆர்வம் காட்டி வருகிறார்கள் என்பதற்கு நம் நாட்டு மாணவியொருவர் ஊடகங்களுக்கு அளித்த விசேட பேட்டி பலரினது கவனத்தை ஈர்த்துள்ளது. 'இந்தியாவில் பரீட்சைக்காக தேர்தலை அங்குள்ள அரசு ஒத்தி வைத்திருந்தது. ஆனால் எமது நாட்டில் தேர்தலுக்காக உயர்தர பரீட்சையை இந்த ஆண்டில் எமது அரசு ஒத்தி வைத்துள்ளது. கல்வியை விட தேர்தலுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அரசை பொறுத்த வரையில் நியாயமாக இருக்கலாம். அனால் வளரும் சமுதாய மாணவர்களுக்கு தேர்தலை விட கல்வி தான் முக்கியம்' என குறித்த மாணவி கவலையடன் தனது கருத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

அவனது முழுப் பெயர் மணிக்கசுந்தரம். அவனை அப்குதியில் 'மாணிக்கம்' என செல்லமாக அழைப்பார்கள். அக்குடும்பத்தில் அவனுக்குப் பிறகு பிறந்த இரட்டைக் குழந்தைகள் குறை மாதத்திலே இறைவனடி போய் சேர்ந்து விட்டனர். அதற்குப் பின் மாணிக்கத்திற்கு சகோதர பாக்கியம் அறவே இல்லாமல் போய் விட்டது. அதனால் அவன் அளவற்ற அன்புக்கு அங்கு ஆளானான்.

அவனது தகப்பனார் தான் படிக்கா விட்டாலும் தனது மகன் படித்து அரசாங்கத்தில் உயர் பதவியை வகிக்க வேண்டுமென ஆவல் கொண்டிருந்தார். எப்படியும் அவனை நல்ல நிலையில் கொண்டு செல்ல வேண்டுமென்பதற்காக சிறந்த ஆசிரியர்களை தமது வீட்டிற்கு வரவழைத்து அவனுக்கு பாடம் சொல்லி கொடுக்க வேண்டிய பல வசதிகளை ஏற்படுத்தியிருந்தார். ஆனால் கல்வி தொடர்பில் நன்கு கிரகிக்க கூடிய ஆற்றல் அவனுக்கு இருக்கவில்லை. படிப்பு சம்மந்தமாக அவனுக்கு தகப்பனார் பல உபதேசங்களை செய்தாலும் அவனது தலையில் கல்விக்கு அறவே இடம் இருக்கவில்லை. கொழும்புக்கு அவனை படிக்க அனுப்பி வைக்கலாமென அங்கு பலர் ஆலோசனை வழங்கினாலும் குடும்பத்தில் ஒரே ஒரு பிள்ளை என்பதால் அவனது தாயாரின் சம்மதம் பெறுவதில் பல சிக்கல்கள் தோன்றின.

ஆண்டு ஒன்பதற்கு பின் அவன் பாடசாலைக்கு ஓர் அடியேனும் எடுத்து வைக்க விரும்பவில்லை. மேலும் பெற்றோர் அவனை வற்புறுத்தவும் விரும்பவில்லை. 'நடக்க வேண்டியவை நடக்கட்டும்' என்று அவன் போக்கிலே அவனை விட்டு வைத்திருந்தனர். அவன் தனது தந்தையின் தொழிலகத்தின் பொறுப்புக்களை கவனிக்க ஆரம்பித்தான். 'மாணிக்கம் வேல்டிங் ஷொப்' உரிமையாளரே அவனது தகப்பனார்.

காலங்கள் கடந்தன. பெற்றோர் காலமாகினர். மாணிக்கம் அந்த வெல்டிங் ஷொப்பிற்கு உரிமையாளராகினான். காலத்திற்கு ஏற்றவாறு குறித்த நிறுவனத்தை நவீனமயப்படுத்தி முன்னர் இருந்ததை விட மிக பிரபல்ய நிறுவனமாக மாற்றியமைத்து அப்குதியில் பெரும் வர்த்தகரானான் அவன்.

சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட ஊழியர்கள் அவனது நிறுவனத்தில் சேவையாற்றினார்கள். பணம் அதிகரிக்க அதிகரிக்க அவனுக்கு பல வழிகளாலும் புகழும், கீர்ததியும், செல்வாக்கும் மேலோங்கிச் சென்றன. அவன் அவ்வளவு தூரம் படிக்கா விட்டாலும் அந்த நிறுவனத்தை மிக குறுகிய காலத்தினுள் மிக உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்ததையிட்டு பலராலும் பாராட்டுகளுக்கு உள்ளானான்.

எந்த பெற்றோரானாலும் தங்கள் பிள்ளையின் கல்வியில் அக்கறை காட்டுவதன் நோக்கம் எதிர்காலத்தில் கௌரவமான தொழில் அதுவும் அரசாங்க நிறுவனமாக இருக்க வேண்டும். சமூகத்தில் நல்ல அந்தஸ்துகளுடன் தங்கள் பிள்ளை வாழவேண்டுமென்பதே. ஆனால் மாணிக்கத்தை பொறுத்த வரையில் அவனது தொழில் அரசாங்க தொழிலாக இல்லா விட்டாலும் ஒரு நிறுவனத்தின் உரிமையாளன் என்பதில் அவனுக்கு பெருமை தானே. இன்று அவன் கைநிறைய சம்பாதிக்கின்றான். அதைவிட அவனுக்கு வேறு என்ன வேண்டும்?

மாணிக்கம் தனது ஆசையை மேலும் மட்டுப்படுத்த விரும்பவில்லை. மேலும் மேலும் பணம் சம்பாதிக்கும் குறுக்கு வழிகளை தேடினான். பல அரசியல் வாதிகளின் உதவி அவனுக்கு கிடைத்தது, கடல் பயணம் மூலம் சட்டவிரோதமாக ஆட்களை அனுப்பும் துறையில் இறங்கினான். ஆரம்பத்தில் அத்தொழில் அவனுக்கு அதிகளவு பணத்தை அள்ளிக் கொடுத்தது. ஆசை யாரைத் தான் விட்டு வைத்தது? அந்நாட்டை விட வேறு ஐரோப்பிய நாடுகளுக்கு சட்டவிரோதமாக ஆட்களை அனுப்புவதில் அவன் பிரபல்யமானதால் 'மாணிக்கம் வெல்டிங் ஷொப்' இழுத்து மூடப்பட்டது.

காற்று என்றும் ஒரு பக்கம் வீசாது. சிறிது காலத்தின் பின் அவனுக்கு கெட்ட காலம் ஆரம்பித்தது. அவனால் சட்ட விரோதமாக அனுப்பப்பட்ட கும்பலை சமுத்திர காவல் படை மடக்கிப் பிடித்து சிவில் காவல் துறையினரிடம் பொறுப்பளித்தனர். அங்கு பிடிபட்ட அனைவரும் அடுத்த நாள் நீதிமன்றம் கொண்டு செல்லப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலுக்கு பின் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அதனால் சுமார் 75 பேருக்கு தலா பத்து இலட்சம் ரூபா வீதம் மாணிக்கம் பணம் கொடுக்க நேரிட்டது. சிறுக சிறுக சேர்த்த பணம் தன்னை விட்டு போகும் என்று மாணிக்கம் கனவில் கூட நினைக்கவில்லை. தற்பொழுது மாணிக்கத்திற்கும் அவனது குடும்பத்திற்கும் இருக்க கூட வீடு இல்லை. குறுக்கு வழியில் உழைத்த அத்தனை ஆதனங்களும் சொத்துக்களும் அவனது கைவிட்டுப் போனது. ஊரில் அவனுக்கு இருந்த புகழ், கீர்த்தி, அந்தஸ்து அத்தனையும் பணத்துடன் சேர்ந்து பறந்து போயின.

அவனது மூத்த மகன் ஊரில் தலைகாட்ட முடியாது கொழும்புக்குச் சென்று தனியார் நிறுவனம் ஒன்றில் சிறு தொழில் புரிகிறான். அவன் அனுப்பும் பணத்தால் தான் மாணிக்கத்தின் குடும்பச் சக்கரம் சுழல்கிறது. சொந்தமாக பாரிய நிறுவனம் ஒன்றை நடத்திய மாணிக்கம் இன்று அயல் ஊரில் உள்ள வெல்டிங் ஷொப் ஒன்றில் சாதாரண வெல்டராக வேலை செய்து வருகின்றான். அதுவும் நாட்கூலிக்கு

# ஆசை யாரைத்தான் விட்டு வைத்தது??

## - - உண்மை! உண்மையைத் தவிர வேறேதுமில்லை - -

ஓர் பாட்டி தன் பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் ஓர் முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டிருந்தாள். அவளுடைய பெயரில் ஓர் நிலத்துண்டு இருந்தது. இருப்பினும் அதை அவளது மகன் வேறு ஒருவருக்கு விற்றிருந்தான்.

பாட்டியோ தன் கடைசி மூச்சை அந்த முதியோர் இல்லத்திலேயே விட்டிருந்தாள். தனது கடைசி ஆசையாக தனது உடலை ஒருதடவை தனது காணியில் வைத்துவிட்டு அடக்கம் செய்யுமாறு கூறியிருந்தாள். இருப்பினும் அக்காணி தற்போது வேறொருவர் வசம் இருப்பதினாலும் அங்கு வீடு கட்டும் பணி நடந்து கொண்டிருப்பதனாலும் அவளினது கடைசி ஆசையை நிறைற்ற முடியாது போயிருந்தது.

இவ்வாறு நடைபெற்றமை எதையும் அறியாத அக்குடும்பம் தமது வீட்டில் குடி புகுந்தது. குடி புகுந்து இரண்டாம் நாள். அக்குடும்பத்தின் மூத்த பெண் பிள்ளைக்கு சரியாக நண்பகல் 11.30 இலிருந்து 2.30 மணிவரை அகோரமாக காய்ச்சல் அடிக்கத் தொடங்கியது. பாடசாலை செல்லும் நாட்களிலும் கூட அக்குறிப்பிட்ட நேரத்தில் இயலாமல் போய் வீடு வந்துவிடுவாள். தொடர்ந்து மருந்து எடுத்தும் சரி வரவில்லை.

ஒரு வாரமாக தொடர்ந்த இப்பிரச்சினையால் அவளின் தாயார் குழம்பிப் போனார். கோவிலுக்குக் கூட்டிச் சென்று நூலிட்டும் சரிவரவில்லை.

என்ன செய்வதென்று அறியாதிருந்த ஒரு நாள் திடீரென வலது பக்க கையும் காலும் இழுத்தது போல் ஆகியது. அவளால் சற்றேனும் அசைக்க முடியாது போனது. மருந்தின் மூலம் எதுவும் செய்ய முடியாது போனது.

(என்னைப் போல் நீங்களும் இது சும்மா பொய், அவளுக்கு ஏதோ வருத்தம் இருந்துள்ளது என எண்ணலாம் ஆனால்...)

பின்னர் குறிப்பு பார்த்த இடத்திலேயே அக்காணி யா[illegible] தற்போது உயிருடன் இருக்கின்றாரா எனவும் அறிந்து வரும்படி கூறப்பட்டது.

அதன்பின்னரே நடந்தேறிய அனைத்தும் அக்குடும்பத்தினருக்கு தெரிய வந்தது. பின்னர் ஓர் பேயோட்டி (மந்திரவாதி) யை அழைத்து வந்து வீட்டில் பெரிய அளவில் பூசை ஏற்பாடு செய்யப்பட்டது.

அந்த மந்திரவாதி வந்து சென்ற அந்த சில நொடிகளுக்குப் பின்னர் மூத்த பிள்ளையின் அட்டகாசம் அதிகரித்தது. பெற்றோரும் அவளது தங்கையும் மிகவும் பொறுமையுடனும் கனத்துடனும் அந்த நாளுக்காக காத்திருந்தனர்.

அந்த நாளும் வந்தது. மூத்த பிள்ளையினூடாக பாட்டி மந்திரவாதியுடன் கதைத்தாள். தனது கடைசி ஆசை நிராசையானதை கூறினாள். பின்னர் உனக்கு என்ன வேண்டும் என கேட்டு சாப்பாடு, குடி வகைகள், மற்றும் பல [illegible] காட்டப்பட்ட வேளையில் அது ஒவ்வொன்றையும் தள்ளி விட்டது. பின்னர் தனக்கு காணி தான் வேணும் இவர்களை இங்கிருந்து போகச் சொல் என்றது. பின்னர் அம்மந்திரவாதி நீயாக போகா விட்டால் அடித்து துன்புறுத்தி போத்தலினுள் அடைத்து சமுத்திரத்தினுள் எறிந்து விடுவேன். என கூறி அடிக்கத் தொடங்கியதும் பெருத்த குரலில் கத்தியவாறு அவ் ஆத்மா மேல் நோக்கிச் சென்றது.

அசதியில் களைத்துப் போனவள் நடந்த எதையும் அறியாதவளாய் காலையில் எழுந்து நடந்து வந்து அம்மா எனக்கு ஒரே உடம்பு நோவாக இருக்கிறது எனக் கூறியவாறு தாயின் மடியில் படுத்துக் கொண்டாள்.

- தன்யா -

அடுத்த வாரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இஸ்லாம் கூறும் குற்றப் பரிகாரங்கள்

"யாராவது ஒருவர் பெயர் குறிப்பிடப்படாத நேர்ச்சை செய்தால் அவருக்குரிய பரிகாரம் சத்தியத்தை முறித்தவருக்குரிய பரிகாரமாகும். அல்லது நேர்ச்சை செய்து அதை நிறைவேற்ற முடியாவிட்டால் அவருக்குரிய பரிகாரம் சத்தியத்தை முறித்தவருக்குரிய பரிகாரமாகும். அல்லது அல்லாஹ்வுக்கு மாறு செய்யும் வி'யத்தை நேர்ச்சை செய்தால் அவருக்குரிய பரிகாரம் சத்தியத்தை முறித்தவருக்குரிய பரிகாரமாகும். யார் தன் சக்திக்குட்பட்ட நேர்ச்சை செய்கின்றாரோ அவர் அதை நிறைவேற்றட்டும்". என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஹதீஸ் நூல் - முஸ்லிம்)



3. கொலை செய்தவனுக்குரிய பரிகாரம்

கொலை இரண்டு வகைப்படும்.

(1) வேண்டுமென்று செய்யும் கொலை (2) தெரியாமல் நிகழும் கொலை

1. வேண்டுமென்று செய்யும் கொலை

வேண்டுமென்று கொலை நடந்திருந்தால் கொலை செய்தவனை கொல்ல வேண்டும். கொலை செய்யப்பட்டவர்களின் உரிமையாளர்கள் கொலை செய்தவனை மன்னித்து நஷ்ட ஈட்டுத் தொகையை வேண்டினால் அதை அவன் வழங்க வேண்டும்.


அ. கிஸாஸ் (கொலைக்கு கொலை)

ஆ. அல்லது கொலை செய்யப்பட்டவரின் பொறுப்புதாரிகள் கிஸாஸை மன்னித்து கொலைக்கான நஷ்ட ஈட்டுத் தொகையை கேட்டால் அதை அவர் வழங்க வேண்டும்.

தொடரும் .. .. – ஆசிரியர் : ஆரிஃப் –

## கத்தோலிக்கம் ஒரு மேலோட்டம்

கடந்தவாற தொடர்ச்சி .. ..



திருச்சபை ஏழு திருச்சாதனங்களை (Sacraments) வழங்குகிறது. ஞானஸ்நானம், பச்சாதாபம், புது நன்மை, உறுதி பூசுதல், திருமணம், குருத்துவம் மற்றும் நோயில் பூசுதல். இவை ஏழில் ஆறு திருச்சாதனங்களை ஒரு கத்தோலிக்கர் பெறலாம். திருமணமானவர் குருத்துவத்தை தேர்ந்தெடுக்க முடியாது. இந்த விதிக்கு மிகவும் குறைந்த விலக்குகளே உள்ளன.

"ஞானஸ்நானம்", முதல் பெற்றோர்களான ஆதாம் ஏவாளின் பாவத்தின் சுவடை நம்மிலிருந்து நீக்குகிறது. இதை "ஜென்ம பாவம்" (Origional Sin) என்கிறோம். "பச்சாதாபம்" பாவ மன்னிப்பு பெறும் வழி. தன் பாவங்களை குருவிடம் முறையிட்டு பரிகாரம் செய்து மன்னிப்பு பெறுவது.

"புதுநன்மை" திருவிருந்தில் பங்கு கொள்ளும் தகுதி அளிக்கிறது. இதன் பிறகே ஒருவர் தொடர்ந்து திருவிருந்தில் பங்கேற்க முடியும். "உறுதிபூசுதல்" பரிசுத்த ஆவியில் கத்தோலிக்கரை உறுதிப்படுத்துவது. பிறகு "திருமணம்" "குருத்துவம்" ஏதேனும் ஒன்றில்தான் பங்குகொள்ள முடியும். நோய்வாய்பட்டு மரண படுக்கையில் இருப்பவர்களுக்கு "நோயில் பூசுதல்" எனும் அருட்சாதனம் வழங்கப்படுகிறது.

பண்டிகைகள் என்றால் அதிகம் பிரபலம் "கிறிஸ்துமஸ்" மற்றும் "ஈஸ்ட்டர்". இயேசுவின் பிறப்பைக் கொண்டாடுவது கிறிஸ்துமஸ் அவரின் உயிர்ப்பை கொண்டாடுவது ஈஸ்ட்டர். ஈஸ்டருக்கு முந்தைய ஞாயிறு "குருத்து ஞாயிறு". இயேசு சிலுவை மரணத்திற்கு முன்பு எருசலேம் நோக்கி பயணிக்கிறார். மக்கள் அவரை வாழ்த்தி வரவேற்கிரார்கள். ஒலிவ மரக்கிளைகளை கையில் எடுத்து கழுதைமேல் பவனிவரும் போதகரை வணங்குகிறார்கள். இதே மக்கள் சில நாட்களில் "இவனை சிலுவையில் அரையுங்கள்" என எதிர் சாட்சி சொல்வார்கள். இதை நினைவு கூறுவது குருத்து ஞாயிறு (Palm Sunday). ஆலிவ் கிளைகளுக்குப் பதில் தென்னை ஓலை பயன்படுத்தப்படுகிறது.

சாம்பல் புதன் அல்லது விபூதி புதன் என்றும் அழைக்கப்படும் நாள் கத்தோலிக்கர்களுக்கு மிக முக்கியமான நாள். இந்த நாள் துவங்கி நாற்பது நாட்கள் "தவக்காலம்" (Lent) என அழைக்கப்படுகிரது.

தொடரும் .. ..

www.tamiloviam.com

## அதிகம் இருக்கப் பணிரூ

தொடர்ச்சியாக ஒரே இடத்தில் அதிக நேரம் உட்கார்ந்திருப்பவர்களுக்கு உடல் பருமன் அதிகரித்தல், தொப்பை ஏற்படுதல் போன்ற பல்வேறு நோய்கள் ஏற்படுவதாக கடந்த காலங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இவ்வாறிருக்கையில் தற்போது தொடர்ச்சியாக ஒரே இடத்தில் உட்கார்ந்திருப்பவர்களுக்கு மனநிலையில் பாதிப்பு ஏற்படுவதாக மற்றுமொரு ஆய்வின் முடிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. கணனியில் நீண்ட நேரம் வேலை செய்பவர்கள், வீடியோ ஹேம் விளையாடுபவர்கள் மற்றும் நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்ப்பவர்களுக்கு இப் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் உலக அளவில் 27 மில்லியன் மக்கள் இவ்வாறு மனநிலைப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவுஸ்திரேலியாவில் வயது வந்தவர்களில் 14 சதவீதமானவர்களுக்கும், 16 தொடக்கம் 24 வயதிற்கு உட்பட்டவர்களில் 15 சதவீதமானவர்களுக்கும் இப்பாதிப்பு உள்ளதாக பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



## பிறந்த எண் பலன்கள் 1

1, 10, 19, 28 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் ஒன்றாம் எண் ஆதிக்கத்திற்குரியவர்கள். இவர்கள் சூரியன் எப்படி உலகிற்கு ஆதாரமாக விளங்கி ஒளி தருகின்றதோ, அது போல பலருக்கும் நன்மை செய்து வாழ்வார்கள். தைரியமும், வீரமும், அஞ்சா நெஞ்சமும் கொண்டவர்கள், அன்பும், பண்பும், மரியாதையும், தெய்வ பக்தியும் தரும குணமும் அதிகம் இருக்கும். வீரம் நிறைந்து அமைதியுடன் தோற்றம் அளிப்பார்கள். தன்னம்பிக்கை அதிகம் இருக்கும் நியாயத்தை மிகவும் தைரியமாக எடுத்துக் கூறுவர். தீர்மானமான கருத்துக்களை கொண்டவராகவும் நல்ல உழைப்பாளியாகவும் இருப்பர். முன்கோபம் அதிகம் இருந்தாலும் அது நியாயத்திற்காகவே இருக்கும். பெரிய தவறுகளை எளிதில் மன்னிக்கும் சுபாவம் கொண்ட இவர்கள் சிறிய தவறுகளை பெரிதாக்கி விடுவார்கள்.

## இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி இருக்கும். பணிகள் திட்டமிட்டபடி நிறைவேறும். நண்பர், உறவினரின் உதவி கிடைக்கும்.

**ரிஷபம்** : சுயதிறமை மேம்படும். புதியவர்களின் நட்பு கிடைக்கும். பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு பின்பற்றவும்.

**மிதுனம்** : சோம்பலைத் தவிர்ப்பதால், பணிகள் நிறைவேறும், வீண்பேச்சு பேசுவோரிட ம் விலகவும். பணவரவு அதிகம் பெற, புதிய வாய்ப்பு வரும்.

**கடகம்** : பேச்சு, செயலில் வசீகரம் உருவாகும். பணநிலையில் ஓரளவு சுணக்கம் இருக்கும். உடன் பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள்.

**சிம்மம்** : அன்பு எண்ணம் அதிகரிக்கும். திறமையுடன் பணிபுரிந்து, நன்மை பெறுவீர்கள். நற்பெயரும், புகழும் கிடைக்கும்.

**கன்னி** : செயல்களில் ஆதாயம் அதிகரிக்கும். இளமைக்கால நிகழ்வு, மனதிற்கு உற்சாகம் தரும். உறவினர்களின் உதவி கிட்டும்.

**துலாம்** : செயல்களில் நிதானத்தை பின்பற்றுவதால், சிரமம் விலகும். பழகுவோரை அறிந்து பேச வேண்டும். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்** : தாமதமான செயல்களில் முன்னேற்றம் ஏற்படும். குடும்பத் தேவையை நிறைவேற்ற, தாராள பணவசதி துணை நிற்கும். கௌரவம் கிடைக்கும்.

**தனுசு** : நல்ல சிந்தனைகள் மனதில் உருவாகி, செயல் வடிவம் பெறும். நேர்மையாக நடந்தும் அடைந்த கஷ்டங்களுக்கு, தீர்வு கிடைக்கும். பயணங்கள் இனிய அனுபவம் தரும்.

**மகரம்** : பொறுமையுடன் செயல்பட்டு, எதிர்ப்புகளை வெல்வீர்கள். உடன் பிறந்தவர்களுக்கு, மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. புதிய வாகனம், வீடு வாங்க யோகம் உள்ளது.

**கும்பம்** : பிறர் விடயத்தில் தலையிடாமல் இருந்தால், சிரமம் அணுகாமல் தவிர்க்கலாம். செலவு அதிகரிக்கும். உடன்பிறந்தவர்கள் கருத்து வேறுபாடு கொள்வர்.

**மீனம்** : கெடந்த நாட்களில் உதவ நினைத்த ஒருவர், தேடி வந்து உதவுவார். செயல்களை உற்சாகமாக செய்வீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை வளரும்.

## சிரியுங்கோவன்.. ..



நேற்று மாலை வாக்கிங் போன போது மனைவி கண்ணில தூசி பட்டு நூறு ரூபாய் செலவு!

நீ கொடுத்து வைத்தவன் மச்சான், நேற்று மாலை என் மனைவி கண்ணில அழகான சாறி பட்டு இரண்டாயிரம் ரூபாய் செலவாயிட்டுதுடா!!!



ஆசிரியர் : பாலு, உன் அப்பா என்ன வேலை செய்யிறார்?

*பாலு : அதுவா டீச்சர். என் அம்மா சொல்லும் வேலைகளை செய்றார்*



முத்தம் கொடுக்கும் போது கண்ணை மூடலையே ஏன் டார்லிங்!

போன தடவை கண்ணை மூடிய போது நீங்க என் ஹேண்ட் பேக்கிலிருந்து பணம் எடுத்திட்டீங்க!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமையல் சமையல்

### சிக்கன் கூட்டு

**தேவையான பொருட்கள்**

சிக்கன் - ¼ கிலோ, வெங்காயம் - 2, இஞ்சி, பூண்டு விழுது - 1 தேகரண்டி, கரம் மசாலாத்தூள் - 1 தே.கரண்டி, மிளகுத்தூள் - 2 தே.கரண்டி, எண்ணெய் - 3 மே.கரண்டி, கொத்தமல்லித்தழை - சிறிதளவு



**செய்முறை**

சிக்கனை நன்கு சுத்தம் செய்து சிறு சிறுத் துண்டுகளாக்கி கொள்ளவும். அத்துடன் மற்ற பொருட்களையும் தயார் நிலையில் வைத்துக் கொள்ளவும். வெங்காயத்தை எட்டாக நறுக்கி அதை தனித் தனியே பிரித்து வைத்துக் கொள்ளவும். ஒரு தாச்சியில் எண்ணெய் ஊற்றி சூடு வந்ததும் இஞ்சி பூண்டு விழுதினை சேர்த்து வதக்கவும். பின்பு மசாலாத் தூள்களை சேர்த்து சிறிது நேரம் வதக்கி உடனே சிக்கன் துண்டுகளையும் சேர்த்து வதக்கவும். பின்பு தேவையான அளவு உப்பு சேர்த்து சிறிதளவு தண்ணீர் ஊற்றி மூடி போட்டு மிதமான தீயிலேயே பத்து நிமிடம் வேக விடவும். (இடையில் கிளறி கொள்ளவும்.) சிக்கன் வெந்ததும், நறுக்கி வைத்திருக்கும் வெங்காயத்தை சேர்த்து பிரட்டி இரண்டு நிமிடத்தில் மல்லித்தழை தூவி இறக்கி விடவும். இதனுடன் குடைமிளகாயையும் வெங்காயம் போல் நறுக்கி சேர்க்கலாம்.

## வெரிகோஸ் வெயின்



*கடந்தவார தொடர்ச்சி*

ஒரு கூட்டுக்குள் இருப்பதைப் போலதான் மனிதனின் பெருங்குடல் அமைந்துள்ளது. எனவே சில வேளைகளில் மலச்சிக்கல் ஏற்படும் போது, இரத்தநாளங்கள் அனைத்தும் அழுத்தப்படுகின்றன. இதனால் நாளங்கள் புடைத்தல் அல்லது வீங்குதல் போன்ற இயல்புக்கு மாறான நிலைக்கு தள்ளப்படுகின்றன.

எனவே, மலச்சிக்கல் தான் இந்த நோய்க்கான மூல காரணமாக கருதப்படுகிறது. மேலும் ஒரே இடத்தில் நீண்ட நேரம் அசைவற்று நின்றபடியே வேலை செய்வது, ஒரே இடத்தில் கால்களை தொங்க விட்ட படியே அசைவற்று உட்கார்ந்திருப்பது போன்றவற்றாலும் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு இந்நோய் வருவதற்கு வாய்ப்புகள் உண்டு. சிலருக்கு இரத்த நாளங்களில் உள்ள வால்வுகள் பலவீனமாக இருப்பதாலும் இந்த நோய் ஏற்படுகின்றன.

**வெரிகோஸ் வெயின் நோய் வருவதற்கான வாய்ப்புகள்**

- மலச்சிக்கல், அதிக எடை, கருவுற்றிருக்கும் காலத்தில் போதிய பராமரிப்பின்மை, அசை வற்றிருத்தல் போன்ற காரணங்களால் பெண்களுக்கு வர அதிக வாய்ப்புள்ளது.
- பரம்பரையில் யாருக்கேனும் இருந்தாலும் இந்நோய் வரக்கூடும். வயது முதிர்ந்தவர்களுக்கு இரத்த ஓட்ட பாதிப்பினால் வர வாய்ப்புண்டு.

தொடரும் . . .

## முகத்தின் பல சிக்கல்களுக்கு தீர்வு – ஆவிபிடித்தல்

அழகுக் குறிப்பு

முகத்திலுள்ள அழுக்குகள், இறந்த செல்களை அகற்றுவதற்கு சிறந்த வழி முகத்திற்கு ஆவி பிடிப்பதாகும்.

✓ ஆவி பிடித்து முடித்ததும், முகத்தை சுத்தமான துணியால் துடைக்கும் போது முகத்தில் உள்ள இறந்த செல்கள் எளிதில் வந்துவிடும்.

✓ கரும்புள்ளிகள் மற்றும் வெள்ளை புள்ளிகளும் விரைவில் நீங்கிவிடும். அதற்கு 5 முதல் 10 நிமிடம் ஆவி பிடித்து, பின் முகத்தை துடைத்தால் மூக்கில் காணப்படும் வெள்ளையானவை சீக்கிரம் வந்துவிடும்.

✓ ஆவி பிடிப்பதால், முகப்பருக்கள் குறையும். எப்படியெனில் ஆவி பிடிக்கும் போது முகத்தில் உள்ள எண்ணெய் சுரப்பிகளில் இருந்து சுரக்கும் சருமத்திற்கு ஏற்ற இயற்கை எண்ணெயால், சருமம் எண்ணெய் பசையோடு இருப்பதால், துளைகளில் சேரும் அழுக்குகள் அல்லது டாக்ஸின்களால் ஏற்படும் பருக்கள், துணியால் துடைக்கும் போது போய்விடும்.


✓ முதுமை தோற்றதை தடுக்கும். சருமத்தில் அழுக்குகள் நீங்காமல் தங்கிவிடுவதால் தான், முகம் மிகவும் பளிச்சென்ற இல்லாமல் முதுமை தோற்றத்தோடு காணப்படுகிறது. அப்போது ஆவி பிடித்தால், அவை அந்த அழுக்குகளை நீக்கி, பளிச்சென்று, இளமைத் தோற்றதை தரும்.


✓ முகப்பரு இருக்கும் போது முகத்திற்கு 4 - 5 நிமிடம் ஆவி பிடிக்க வேண்டும். பின் 30 நிமிடம் கழித்து, ஐஸ் கட்டிகளால் முகத்தை தேய்த்தால் முகப்பருக்கள் உடைந்துவிடும். இதனால் ஒரே நாளில் முகப்பருவை சூப்பராக குறைத்துவிடலாம்.

✓ ஆவி பிடிக்கும் போது முகத்திற்கு சரியாக இரத்த ஓட்டம் இருக்கும். மேலும் துளைகள் நன்கு எந்த ஒரு தொந்தரவும் இல்லாமல் சுவாசிக்கும். அதனால் சருமம் நன்கு அழகாக, பொலிவோடு இருக்கும்.



## டிசைன்ஸ்











## குறுக்கெழுத்து புதிர் 066

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | 20 | | | ர் | | 2 | 22 | 23 |
| 3 | | ■ | ■ | 4 | 21 | தை | | 29 |
| 5 | 24 | | ர் | ■ | | | | 30 |
| 6 | | 26 | | ■ | | 7 ல் | | |
| 8 | | | | ■ | 9 | | 10 கு | |
| | 11 | த | | 28 | | ■ | | |
| 12 | 25 | 13 | 27 | | | ■ | | |
| | 14 | | | 15 | | 16 | ம | |
| 17 | | 18 | | த | 19 | | | ■ |

### இடமிருந்து வலமாக

1. ஆரவாரம் இல்லாது செய்யும் ஆர்ப்பாட்டம்
2. பற்றை
3. அஜித்தை இவ்வாறு அழைப்பர்
4. உணர்ச்சிகளை வெளிப்படுத்த எழுதப்படுவதில் இதுவும் ஒன்று
5. இராமாயாணத்தை புதுப்பித்து எழுதியவர்
6. நாட்டியத்திற்கு அவசியமானது - குழம்பியுள்ளது
7. பக்கத்துவீடு = ………… வீடு - திரும்பியுள்ளது
8. பிச்சை
9. புராண காலத்தில் போர் தொடங்கும் போது இது ஊதப்படும்
10. யானையை பிடிக்க இது பயன்படும் 11. சொத்து
12. மண்ணினால் செய்யப்படும் பாத்திரம் - குழம்பியுள்ளது
13. எமது தேசிய உணவுகளில் ஒன்று
14. ஆண், பெண் இணைந்து கல்வி பயிலும் பாடசாலை - குழம்பியுள்ளது
15. நீர் அருந்தப் பயன்படுத்துவது - குழம்பியுள்ளது
16. பெண் 17. கவருபவர்
18. மகாபாரதத்தில் கிருஷ்ணரின் குலம் - திரும்பியுள்ளது
19. அக்னி வளர்த்து செய்யப்படுவது

### மேலிருந்து கீழாக

1. நடன வகை ஒன்று
2. நரபலி கொடுத்தேனும் இது எடுக்க முற்படுகின்றனர்
5. கொண்டாட்டம் 9. மக்களை இவ்வாறும் அழைப்பர்
10. திருமணமானவர் நெற்றியில் இடுவது
13. சிறுவர் 21. இடதின் எதிர்
22. பாலிலிருந்து தயாரிக்கப்படுது
23. பூமி - கீழிருந்து மேலாக
24. இருக்கை - கீழிருந்து மேலாக
25. உயிர்பறிப்பவர் - குழம்பியுள்ளது
26. சாதகத்தின் எதிர் - கீழிருந்து மேலாக
27. பார்ப்பதற்குப் பயன்படுவது - கீழிருந்து மேலாக
28. தேர் இழுக்கப் பயன்படுவது - கீழிருந்து மேலாக
29. ரஜினி நடித்த படமொன்று
30. அழிப்பதற்குப் பயன்படுவது - குழம்பியுள்ளது

**விடையை அனுப்ப வேண்டிய முகவரி :**

*முடிவுத்திகதி : 09.07.2015*

**மலைமுரசு. இல - 159ஏ,**
**கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.**

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

### புதிர் 065 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 மி | ரு | 2 த | ங் | 19 க | ம் | 3 ழ் | 21 க | 24 பு |
| 4 ட் | பொ | ண் | 5 டா | டி | ■ | ■ | வ | ர |
| 6 டா | ர் | லி | ங் | கா | ■ | ■ | ள | வி |
| ய் | ■ | 7 ச | து | 26 ர | ங் | 20 க | 22 ம் | ■ |
| 8 அ | தி | ஷ் | ட | 9 ம் | ஞ் | 17 ஞா | ன | வி |
| 10 ரு | த் | தி | ர | தா | ண் | ட | வ | ம் |
| 11 வி | டா | மு | 18 ய | ற் | 12 சி | ம் | 23 ம | ம் |
| 13 தை | 25 ரி | ய | ம் | ■ | ன | ■ | ம | ■ |
| 14 ப | ச | ளி | 15 தா | ன | ம் | ■ | 16 தை | ■ |

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:**

*திரு. எம். பி. அகிலன்*
*39, கல்லூரி வீதி, திருகோணமலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரமாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னணி சர்வதேச அழுத்தமா!!


அரசியல் அலசல்

20ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படாது என்று கூறிவந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிடிவாதம், கடந்த வெள்ளியன்று தகர்ந்துபோனது. நாடாளுமன்றத்தை கலைக்கும் வர்த்தமானிப் பிரகடனத்தில் கடந்த 26ஆம் திகதி அவர் ஒப்பமிட்டிருந்தார். அதற்கு முதல் நாள், நடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கூட, 20ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றாமல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தை கலைக்கமாட்டார் என்று திட்டவட்டமாக கூறியிருந்தார் அமைச்சர் ராஜித சேனாரத்ன. ஏற்கெனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இது பற்றிய வாக்குறுதிகளை பொது மேடைகளில் கொடுத்திருந்தார்.

ஆனால், கடந்த 26ஆம் திகதி மாலையில் அவரால் அந்த பிடிவாதத்தை தொடரமுடியாது போனது. எப்படியும் நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலை நடத்தியாக வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை தகர்ந்துபோனது மட்டும் அதற்கு காரணமல்ல. 20ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றும் விடயத்தில் பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படவில்லை என்பது உண்மை.

ஏற்கெனவே இதுபோலவே 19ஆவது திருத்தச்சட்டதை நிறைவேற்றும் விடயத்திலும் இழுபறிகளும் இணக்கப்-பாடின்மையும் நீடித்திருந்தன. ஆனாலும், அதையெல்லாம் வெற்றிகரமாக சமாளித்து, மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரின் சூழ்ச்சிகளை எதிர்கொண்டு, 19ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றி காட்டினார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. ஆனால், 20ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவது ஒன்றும் அவருக்கு சுலபமான விடயமாக இருக்கவில்லை. இந்த விடயத்தில் பிரதான கட்சிகளுக்கிடையில் இணக்கப்-பாட்டை ஏற்படுத்துவது மட்டுமன்றி, சிறு மற்றும் சிறுபான்மையினக் கட்சிகளை திருப்திப்படுத்துவதும் அவருக்கு முக்கியமான பிரச்சினையாக இருந்தது.

இருந்தாலும், இந்தப் பிரச்சினையை தீர்த்துவைத்து, எப்படியும் 20ஆவது திருத்தச்சட்டத்தை நாடாளு-மன்றத்தில் நிறைவேற்றிவிடலாம் என்று




நம்பினார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. இந்த நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க போன்றவர்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கை-யில்லா பிரேரணைகள் அவரது கழுத்தை நெரித்துப் பிடிக்கத் தொடங்கியது.

ஜுலை 6ஆம் திகதி நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவது உறுதியானது. ஆனால், அதற்கு முன்னர் 20ஆவது திருத்தச்சட்டத்தை விவாதிக்க முடியாத நிலை ஏற்பட்டது. 20ஆவது திருத்தச்சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டாலும், இரண்டு வாரங்கள் கழித்தே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும். அதுவரை நம்பிக்கையில்லா பிரேரணையை ஒத்திவைக்க எதிர்க்கட்சியை இணங்கவைக்கும் முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. இந்த நிலையில், எப்படியும் நாடாளுமன்றம் கலைக்கப்படுவது உறுதியானது. ஆனால், எப்போது என்பதே குழப்பமான விடயமாக இருந்து வந்தது.

நாடாளுமன்றத்தை கலைக்கும் முடிவை எடுப்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடிந்த வரைக்கும் தாமதித்து பார்த்தார். எனினும், அவரால் ஒரு கட்டத்துக்கு மேல் தாக்குப்பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டது. அது உள்நாட்டு அழுத்தம் அல்ல. சர்வதேச அழுத்தம். அந்த அழுத்தமே நாடாளுமன்றக் கலைப்பு மற்றும் தேர்தல் திகதியை தீர்மானிப்பதில் தீர்க்கமான பங்கை வகித்தது.

இலங்கையில் அண்மைக் காலமாக சனிக்கிழமைகளில் தேர்தல் நடத்தும் ஒரு பாரம்பரியம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதனை மீறி, திங்கட்கிழமை தேர்தலை நடத்தும் முடிவை எடுத்தமைக்கும் க.பொ.த. உயர்தரப் பரீட்சை காலத்தில் தேர்தலை நடத்த முடிவு எடுத்தமைக்கும் இந்த சர்வதேச அழுத்தமே காரணம். இந்த அழுத்தம் இல்லையென்றால், நிச்சயமாக நாடாளுமன்ற தேர்தல் ஒரு சனிக்கிழமையிலேயே நடத்தப்பட்டி-ருக்கும். அதனையே தேர்தல்கள் ஆணையாளர் விரும்பியிருந்தார். அது குறித்து அரசாங்கத்துக்கும் அறிவித்திருந்தார்.

முன்னர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனக்கு ராசியான நாள் பார்த்து தேர்தல் நடத்தியிருந்தார். ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவ்வாறு ராசி பார்த்து தேர்தலை நடத்தும் ஒருவர் அல்ல. இருந்தாலும், அவர் திங்கட்கிழமையை தெரிவுசெய்ய இந்த சர்வதேச அழுத்தமே காரணம். நாடாளுமன்ற தேர்தலை ஓகஸ்ட் மாத இறுதியில் நடத்தவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எண்ணியிருந்தார்.

ஓகஸ்ட் இறுதி வாரத்தில் அல்லது செப்டெம்பர் முதல் வாரத்தில் தேர்தல் நடத்தினால், அது க.பொ.த உயர்தரப் பரீட்சையை பாதிக்காது என்றும் கருதப்பட்டது. நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை ஜுலை 6ஆம் திகதி விவாதிக்கப்படும் என்று முடிவான நிலையில், அதற்கு ஓரிரு நாட்கள் முன்னதாக நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டது.



எனினும், ஜுன் 26ஆம் திகதி நள்ளிரவே ஜனாதிபதி நாடாளு-மன்றத்தை கலைத்துவிட்டார். அவர் திட்டமிட்டதை விட சுமார் 10 நாட்களுக்கு முன்னரே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு சர்வதேச அழுத்தமே காரணம். அதற்கு ஜெனீவாவிலிருந்து கிடைத்த ஒரு தகவலே காரணம். போர்க்குற்றச் சாட்டுகள் தொடர்பாக ஐ.நா. நடத்திய விசாரணைகளின் அறிக்கை ஓகஸ்ட் 21ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பிவைக்கப்படும் என்பதே அந்த செய்தி. இந்த அறிக்கை வெளியாக முன்னரே தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருந்தது. காரணம், இந்த அறிக்கை வெளியானால், அது மஹிந்த ராஜபக்ச தரப்புக்கு சாதகமாகிவிடும் என்று கருதப்பட்டது. ஓகஸ்ட் 21ஆம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும் விசாரணை அறிக்கையின் பிரதி எந்த நேரத்திலும் வெளியில் கசிந்து-விடக்கூடும். எனவே, அதனை வைத்து மஹிந்த ராஜபக்ச தரப்பு ஆதாயம் அடைவதை தடுக்கவேண்டுமானால், ஓகஸ்ட் 21ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும்.

அதேவேளை, நாடாளுமன்ற தேர்தலை நடத்துவதற்கும் சில விதிமுறைகள் உள்ளன. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டு 52 தொடக்கம் 65 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்பட-வேண்டும். ஓகஸ்ட் 17ஆம் திகதியே தேர்தல் திகதியாக அறிவிக்கப்-பட்டுள்ளது. அன்று தான், தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டு 52ஆவது நாளாகும்.

இலங்கையில் இதுவரை நடந்த நாடாளுமன்ற தேர்தல்களிலேயே ஆகக்குறைந்த கால அவகாசத்துக்குள் நடத்தப்படும் தேர்தல் இதுவே. தேர்தல் நடத்தப்பட்டு நான்கு நாட்கள் கழித்து ஐ.நா. அறிக்கை ஜனாதிபதியின் கையில் கிடைக்கப்போகிறது. அதாவது, புதிய அரசாங்கம் பொறுப்பேற்கும் சூழலில், இந்த அறிக்கை கிடைக்கும். எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30ஆவது கூட்டத்தொடரிலேயே இந்த ஐ.நா. விசாரணை அறிக்கை அதிகாரபூர்வமாக வெளியிடப்படும்.

இந்தக் கூட்டத்தொடர் ஆரம்ப-மாவதற்கு முன்னதாக செப்டெம்பர் மாதம் புதிய அரசாங்கம் பதவியி-லிருக்கும் என்று ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனுக்கும், அமெரிக்க இராஜாங்க செயலர் ஜோன் கெரிக்கும் வாக்குறுதி கொடுத்திருந்தார், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. ஐ.நா. விசாரணை அறிக்கை தொடர்பான தெளிவான பதிலை புதிய அரசாங்கம் அளிக்கவேண்டும் என்பதை சர்வதேச சமூகம் எதிர்பார்க்கிறது. அதற்காகவே செப்டெம்பரில் புதிய அரசாங்கம் பதவியிலிருக்க வேண்டும் என்று ஐ.நா. வும் அமெரிக்காவும் எதிர்பார்ப்பை வெளியிட்டிருந்தன.

அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலேயே நாடாளுமன்றத்தை கலைத்திருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. அதேவேளை, ஜெனீவா கூட்டத்தொடர் செப்டெம்பர் 14ஆம் திகதியே ஆரம்பமாகவுள்ள நிலையில், மைத்திரிபால சிறிசேன நினைத்தி-ருந்தால், கொஞ்சம் தாமதமாகவேனும் நாடாளுமன்றத்தை கலைத்தி-ருக்கலாம்.

ஆனால், ஓகஸ்ட் 21ஆம் திகதி ஐ.நா. விசாரணை அறிக்கையின் ஒரு முன்னோட்டப் பிரதி கையளிக்கப்படும் என்ற தகவலே அவரை திக்குமுக்காட வைத்துவிட்டது. திடீரென நாடாளு-மன்றத்தை கலைத்து, தேர்தலுக்கு செல்லவேண்டிய நிலையை அவருக்கு ஏற்படுத்தியது. ஓகஸ்ட் 21ஆம் திகதி ஐ.நா. அறிக்கை வெளியாகும்போது, அதனை வெளிவராமல் கட்டுப்படுத்துவது கடினமாகும்.

ஏற்கெனவே அரசாங்கத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட ஐ.நா. வின் சில அறிக்கைகள் முன்கூட்டியே ஊடகங்களில் கசிந்திருந்தன. எனவே, ஓகஸ்ட் 21ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்ற தேர்தல் என்ற கண்டத்தை கடந்துவிடும் முடிவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுக்க நேரிட்டது. அதன் விளைவே இந்த நாடாளுமன்ற தேர்தல்.

இந்த தேர்தல், எத்தகைய ஆச்சரியமான முடிவுகளை தருகிறதோ, இல்லையோ அதற்கு பின்னர் வெளிவரப்போகும் ஐ.நா. அறிக்கை ஆச்சரியமான அதிர்ச்சிகரமான ஒன்றாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதனை ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன் தான், தெரிவித்திருக்கிறார்.

– –கே.சஞ்சயன்– –

- www.tamilmirror.com -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. 3, 4, 5, 4, 6, x, 6, 8 என்னும் தரக் கூட்டத்தின் ஆகாரம் 4 எனின், x இன் பெறுமானத்தைக் காண்க.

02. சுருக்குக. 0.04 x 6

03. முதலுறுப்பு 3 ஆகவும் நான்காம் உறுப்பு 24 ஆகவும் உள்ள பெருக்கல் விருத்தியின் பொது விகிதத்தைக் காண்க.

04. $\frac{1}{a}+\frac{1}{b}=\frac{5}{12}$ ஆக இருக்கத்தக்கதாக a, b ஆகிய இரு நேர் நிறைவெண்களைக் காண்க.

05. காரணிகளைக் காண்க $32-2a^2$

06. தீர்க்குக $2^x=1/64$

07. (-3, 0) (0, -2) என்னும் புள்ளிகளினூடாகச் செல்லும் நேர்கோட்டின் வெட்டுத்துண்டு யாது?

**பகுதி 02**

01. பாடசாலை உடற்பயிற்சிக் காட்சி ஒன்றில் மாணவர்கள் முதல் நிரையில் 10, இரண்டாம் நிரையில் 13, மூன்றாம் நிரையில் 16 என்றவாறு நிற்கின்றனர். இக்கோலத்திற்கு ஏற்ப
1. அதன் ஒன்பதாம் நிரையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?
2. எத்தனையாவது நிரையில் 52 மாணர்கள் உள்ளனர்?
3. உடற்பயிற்சிக் காட்சியில் 18 நிரைகள் இருப்பின் காட்சியில் பங்குபற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
4. மேலதிகமாக 131 மாணவர்கள் பங்குபற்றினால் மேலதிகமாக காட்சியில் 3 நிரைகளைச் சேர்க்கத்தக்கதாக இருக்கும் என அதிபர் கூறுகின்றார். இக்கூற்று உண்மையன்று எனக் காட்டுக.

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### தமிழ் இலக்கணம் எழுத்தியல்

**வினாவெழுத்துக்கள்.**

**எடுத்துக்காட்டு :**

எ - எவன் ஏது எவர் முதலியன.
ஆ ஓ - தந்தையோ பேசுகிறார் சென்றனரோ மக்கள் முதலியன.
ஏ - ஏன் ஏது பாம்பே } முதலியன.
யா - யாது யாவை யாவர் யாங்ஙனம் முதலியன.

தற்காலத்தில் ஏகாரம் சொல்லின் இறுதியில் வினாப்பொருளில் வருவது அருகிக் காணப்படுகிறது. தற்காலத்தில் ஆ மொழி முதலிலும் வினாப்பொருளில் வரும்: உதாரணம் - ஆர்? வினாவெழுத்துக்களும் அகவினா புறவினா என இரு வகைப்படும்.

எடுத்துக்காட்டு - என்ன? - அகவினா
எப்பொருள்? - புறவினா

**இனவெழுத்துக்கள்.**

உயிரெழுத்துக்களுள் குறில் ஐந்துக்கும் ஒத்த நெடில் ஐந்தும் ஐகாரத்திற்கு இகரமும் ஔகாரத்துக்கு உகரமும் இனவெழுத்துக்கள் ஆகும்.

அ - ஆ, இ - ஈ, உ - ஊ, எ - ஏ, ஒ - ஓ, ஔ - உ



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : வரலாறு

01. இலங்கையில் வடமேற்குக் கடற்கரையில் தரையிறங்கிய ஆரியர்கள் அமைத்த குடியிருப்புக்கள் மாத்திரம் இடம்பெறும் விடை யாது?
1. தம்பபண்ணி, அனுராதகாம, மஹாகாம, உருவெலகாம
2. அனுராதகாம, மஹாகாம, தீககாம, உருவெலகாம
3. தம்பபண்ணி, அனுராதகாம, உபதிஸ்ஸகாம, உருவெலகாம
4. அனுராதகாம, தீககாம, உருவெலகாம, உபதிஸ்ஸகாம

02. இலங்கை வரலாற்றினடிப்படையில் ஆட்சி செய்த கடைசி சிங்கள மன்னன்
1. 2 ஆம் இராஜசிங்கன் 2. 1 ஆம் இராஜசிங்கன்
3. வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் 4. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

03. அலைச் செயற்பாட்டிலிருந்து குளக்கட்டின் அரிப்பைத் தடுக்கும் குளத்தின் பகுதி எது?
1. சுருங்கை 2. கலிங்கல் 3. அலைதாங்கி 4. கலிங்கற்தொட்டி

04. எந்த எழுத்தாளர் பிரான்ஸிய புரட்சியை முன்னெடுத்தார்?
1. தாந்தே 2. வோல்டயர் 3. இராஸ்மஸ் 4. கரிபால்டி

05. பின்வரும் கண்டு பிடிப்பாளர்களும் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான தொகுதியில் பொருத்தமற்ற கூற்று
1. ஆகாய விமானம் - றைட்ச்கோதரர்கள்
2. பாதுகாப்பு விளக்கு - ஜோர்ஜ் ஸ்ரீவன்சன்
3. நீராவி கப்பல் - றொபர்ட் புல்டன்
4. மோட்டார் வாகனம் - டெம்லர்

06. 1818 ஆம் ஆண்டு கிளர்ச்சியை முன்னெடுத்த தலைவர் அல்லாதவர் பின்வருவோரில் யார்?
1. ஹெப்பட்டிப்பொல 2. மடுகல்ல 3. வீரபுரன் அப்பு 4. 2ம் பிலிமத்தலாவ

07. பின்வருனற்றில் எந்த யாப்பு இனவாதி பிரதி நிதித்துவம் அறிமுகம் கட்டாய இராஜ காரிய முறை ஒழிப்பு, அரசு வர்த்த ஏகபோக உரிமை நீக்கல் என்பற்றுடன் தொடர்புடையது?
1. மனிங் 2. டொனமூர் 3. சோல்பரி 4. கோல்புறூக் கமரன்

## Grammar

**Complete answers to quesions.**

Complete answers to questions.

01. Amy is in hospital, isn't she?
Yes, she has been in hospital since Monday.

02. Do you see Ann very often?
No, I ...................... her for three months.

03. Are you waiting for me?
Yes, she .................... married for ten years.

04. You know Linda, don't you?
Yes, we .................. each other for ages.

05. Do you still play tennis?
No, I .................... tennis for years.

06. Is Jim watching TV?
Yes, he ................. TV all evening.

07. Do you watch TV a lot?
No, I ............................... TV for a long time.

08. Have you got a headache?
Yes, I ....................... a headache all morning.

09. George is never ill, is he?
No, he ...................... ill since I've known him.

10. Are you feeling ill?
Yes. I ................. ill since I got up.

11. Sue lives in London, doesn't she?
Yes, she ......................... in London for the last few years.

## பாடம் : விஞ்ஞானம்

01. $NaHCO_3$, $Ca(OH)_2$, $NH_3$ என்னும் மூன்று சேர்வைகளுக்கும் பொதுவான இயல்பு எது?
1. திண்ம நிலையிலிருத்தல் 2. அயன் சேர்வைகளாக இருத்தல்
3. மூலமாக இருத்தல் 4. தங்கீட்டு வழுச் சேர்வைகளாக இருத்தல்

02. தைரொயிட் சுரப்பியில் காணப்படும் மேலணி இழையம் எது?
1. கம்பமேலணி 2. கனமேலணி 3. படைகொண்ட மேலணி 4. பிசிர் மேலணி

03. செக்கனுக்கு 5m என்னும் கதியை மணிக்கு கிலோ மீற்றரில் தருவது பின்வருவனவற்றுள் எது?
1. 5x1000x3600 2. 5x1000/3600
3. 5x3600/1000 4. 5/1000x3600

04. துலக்கப்பட்ட சீமெந்துத் தரையில் உள்ள ஓர் அலுமாரியை 500N கிடை விசையினால் மட்டுமட்டாகத் தள்ள முடியும். அலுமாரி சீமெந்துத் தரையில் வைக்கப்பட்டு அதனைத் தள்ளுவதற்கு 500N கிடை விசை பிரயோகிக்கப்பட்டால் அதன் மீது தாக்கும் உராய்வு விசையானது
1. 500N க்குக் கூடியது 2. 500N க்குச் சமனானதாகும்
3. 500N க்குக் குறைவானதாகும் 4. தரவுக்கமைய தீர்மானிக்கமுடியாது

05. காலநிலை மாற்றக் கோலங்கள் மாறுதல் தற்கால உலகம் எதிர்கொள்ளும் பிரதான சவாலாகும். இதற்கு அதிகளவில் பங்களிப்பு செய்யும் சூழற் பிரச்சினை யாது?
1. ஓசோன் படை(விதானம்) வறிதாதல் 2. அமில மழை உண்டாதல்
3. பூகோள வெப்பம் அதிகரித்தல் 4. நற்போசணையாக்கம்

06. மின்னல் ஏற்படும் போது குறைந்த ஆபத்துள்ள சந்தர்ப்பம் எது?
1. மைதானத்திற்கு அருகிலுள்ள மரத்தின் கீழ் நிற்றல்.
2. வயலில் வேலை செய்துகொண்டிருத்தல்
3. மோட்டார் காரினுள்ளே இருத்தல்
4. வீட்டினுள்ளே தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருத்தல்.

07. பகுதிகளாகப் பிரிக்கப்படாத மூளை, உடல், கல்சியம் காபனேற்றிலான ஓடு ஆகியவற்றைக் கொண்ட ஓர் அங்கியில் காணத்தக்க வேறோர் இயல்பு எது?
1. மூட்டுள்ள கால்கள் இருத்தல் 2. தரையில் மாத்திரம் வாழ்தல்
3. உடலின் இரு முனைகளிலும் உறிஞ்சிகள் இருத்தல்
4. தசையுள்ள பாதம் இருத்தல்

08. நீர், காற்று, விலங்குகள் ஆகியவற்றின் மூலம் பரம்பலடையும் வித்துக்கள் முறையே
1. வாதுமை, முருங்கை, மரமுந்திரிகை 2. அல்லி, ஆடையொட்டி, பருத்தி
3. தென்னை, இறப்பர், மாமரம் 4. எருக்கலை, ஒக்கிட், ஓட்டுப்புல்

09. சுற்றாடலில் உள்ள இறந்த சேதனப் பொருள்களைப் பிரிகையுறச் செய்யும் அங்கிகளுக்கு வழங்கும் பெயர்?
1. தாவரவுண்ணிகள் 2. ஒட்டுண்ணிகள் 3. உற்பத்தியாக்கிகள் 4. பிரிகையாக்கிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 27

01. பரீட்சைகள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
 i. 1911 ii. 1940 iii. 1953 iv. 1919

02. இலங்கையில் மிக உயரமான நீர்வீழ்ச்சி
 i. பம்பரகந்த ii. துன்கிந்த ii. தியலும் iv. லக்ஸபான

03. சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்படுவது
 i. ஒக்டோபர் - 6 ii. ஒக்டோபர் - 1
 iii. ஒக்டோபர் - 5 iv. ஒக்டோபர் - 3

04. பண்டுகாபயன் மன்னனால் கட்டியகுளம்
 i. அபயவாவி ii. கலாவாவி iii. திஸ்ஸவாவி
 iv. மின்னேரியா குளம்

05. சிறிய ஒலிகளையும் மிகத்துல்லியமாகக் கேட்கும் பிராணி
 i. யானை ii. பருந்து iii. ஓணான்
 iv. முயல்

06. நாம் உணவாக பயன்படுத்தும்வித்துவகை
 i. நெல் ii. வெண்டி iii. வெள்ளரி iv. புடோல்

**பகுதி – 02**

01. **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடைதருக.**

நான் பிறந்த சூழல் மிகவும் அழகான இயற்கை காட்சிகளை கொண்டது. பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற மலைத்தொடர்கள், இன்னிசைக்கீதம் இசைத்தபடி பாய்ந்து வரும் அருவிகள், நன்கு செழித்து வளர்ந்திருக்கும் மரங்கள், அவற்றிலே பழுத்து மணம் பரப்பும் கனிகள் அக்காட்சிகளைப் பார்த்து கனிகளை உண்டு நான் உல்லாசமாகப் பறந்து கொண்டிருப்பேன்.


கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. தன்மை ஒருமைப்பெயர்ச்சொல் ஒன்று தருக?
 ..........................................................
2. இன்னிசைக்கீதம் இசைத்தபடி பாய்ந்து செல்பவை எவை?
 ..........................................................
3. அடைமொழிச் சொல் ஒன்று தருக?
 ..........................................................
4. இங்கு இடம் பெறும் உவமானம் எது?
 ..........................................................
5. பந்தியில் தன்னைப் பற்றிக்கூறும் பிராணி எது?
 ..........................................................

02. பின்வரும் ஓவ்வொரு வாக்கியமும் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக

1. எல்லா வீடுகளும் அழகானது (......)
2. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (.......)
3. தம்பியும் நாயும் விளையாடிக் கொண்டிருந்தனர் (......)
4. வானில் நட்சத்திரங்கள் ஒளிர்கின்றது (.......)

03. Aயிலிருந்து D வரைக்குமான தூரம் 176 Km ஆகும். Dயிலிருந்து B வரைக்குமான தூரம் 152 Km ஆகும். எனின் Aயிலிருந்து B வரையிலான தூரம்?




..........................................................

சென்றவார விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 02. 3 | 03. 2 | 04. 2 |
| 05. 1 | | | |
| | பகுதி 02 | | |
| 1. 1L 50ml | 2. 106 | 3. 500கி - ரூ24 | |
| 4. 1/16 | 5. I. இளநீர் | ii. பன்னிரெண்டு | 5. ரூ475 |



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

---

## சிறுவர் முரசு



## குட்டிக் கதை



### சிந்தித்து செயல்படல்

ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தில் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது.

சட்டென்று சுதாரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். ஏற்கெனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு "யாராவது காப்பாற்றுங்கள்" என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான்.

உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட்டது. தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. "பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே. அறிவில்லையா உமக்கு" என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாக பற்றிக் கொண்டு "நான் கீழே வந்தால்..." என்று எச்சரித்தான்.



பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான். "ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவிதானே கேட்டேன்?" என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே "தம்பி.. நான் உனக்கு உதவிதான் செய்தேன்" என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான்.

பெரியவர் விளக்கினார். "நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்" என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்

**- எல்லா சந்தர்ப்பத்திலும் யோசித்து செயல்படல் வேண்டும் -**

### சிந்திக்க .. ..

உரிமை இல்லாத உறவும்,
உண்மை இல்லாத அன்பும்,
நேர்மை இல்லாத நட்பும்,
நம்பிக்கை இல்லாத வாழ்க்கையும்,
என்றுமே நிரந்தரமற்றது.

மெ.தனுஷா, தரம் - 09



### சின்ன சின்ன ஆசை

*பேசு தம்பி பேசு,*
*பிழைவிடாமல் பேசு!*
*மாசு மறுவில்லா*
*மறத்தமிழைப் பேசு!*

*நல்ல தமிழ் தேடி*
*நலம் பெறவே கல்கல்!*
*வெல்லும் வரை பேசு,*
*வீட்டுமொழி பேசு!*

*ஆத்திசூடி - அவ்வை,*
*அதிலிருந்து பாரதி*
*ஆத்திசூடி வரையில்*
*அமைதியாகப் பார்பார்!*

*பேச்சு மேடையானால்*
*பெருமுழக்கம் செய்செய்!*
*மூச்சிருக்கு மட்டும்*
*முத்தமிழ் முழக்கு!*

தாமரைத்தீவான்
ஆச்சந்திவு- கிண்ணியா

### பொது அறிவு - 29

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. கதக் நடனம் எங்கு முதன்மையான நடனமாக கருதப்பட்டது?
 வட இந்தியா

02. ஆசியாவின் மிக நீண்ட மலைத்தொடர்கள் எங்குள்ளது?
 இந்தியாவில், இமய மலைத்தொடர்

03. இரத்தத்தில் சர்க்கரையின் அளவு எதனால் அதிகரிக்கப்படுகிறது?
 குளுக்காஹான்

04. டெசிபல் என்பது எதை அளக்க உதவும் அலகு?
 ஒலியின் அளவு

05. சதுப்பு நிலக் காடுகள் காணப்படுவது?
 கடற்கரை மற்றும் டெல்டாப் பகுதிகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொம்புமுறி கொண்டாட்டம்

தமிழர் பாரம்பரிய விளையாட்டான கொம்புமுறிக்கொம்பு விளையாட்டுப் பெருவிழா மூதூர் கிழக்கின் பள்ளிக்குடியிருப்பு கொம்பு முறிச்சந்தி ஆலயத்தில் 25.06.2015 வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆரம்பமானது. இதன் போது கொம்புமுறிக்கொம்பு விளையாட்டுப் பெருவிழாவும் கிராமியச் சிறுதெய்வ வழிபாடுகளும் என்ற நூலினை எழுதிய கலாபூசனம் த.சிதம்பரப்பிள்ளை அவர்களின் நூல் வெளியீட்டு விழாவும் அன்றையதினம் ஆலய முன்றலில் பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக்கல்லூரி அதிபர் ந.கிட்ணதாஸ் தலைமையில் இடம்பெற்ற போது கொம்புமுறிக்கொம்புக்கான ஆரம்ப பூசை இடம்பெற்றதுடன் நூல் வெளியீடும் இடம்பெற்றது. அத்துடன் நூலாசிரியர் பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டார். ஐந்து வருடங்களுக்கொருமுறை இடம்பெறும் இந்நிகழ்வு மூதூர் வாழ் மக்களால் பெரிதும் மகிழ்ச்சிகரமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்நிகழ்வின் போது கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.







## இரத்ததான முகாம்

*- சேனையூர் நிரூபர் -*

உலக இரத்ததான தினத்தை முன்னிட்டு திருகோணமலை பீப்பிள்ஸ் லீசிங், பைனாஸ் நிறுவனத்தினர் பீப்பிள்ஸ் லீசிங் மாவட்ட தலைமை காரியாலயத்தில் 01.07.2015 புதன்கிழமை இரத்ததான முகாமை ஏற்பாடு செய்து இருந்தனர்.


இவ் இரத்ததான நிகழ்வு பீப்பிள்ஸ் லீசிங் நிறுவனத்தின் மாவட்ட முகாமையாளர் எம்.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், நிறுவனத்தின் ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், நலன்விரும்பிகள் என பலர் கலந்து கொண்டனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலை இரத்ததான பிரிவினர் இந்நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். இந்நிகழ்வுடன் கண், காது பரிசோதனைகளும் இந் நிறுவனத்தினால் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## இப்தார் நிகழ்வு

கடந்த மாதம் 26.06.2015 (வெள்ளிக்கிழமை) ஏறாவூர் ஜாமியு அக்பர் ஜும்ஆப் பள்ளிவாயலில் (2500) இரண்டாயிரத்தி ஐநூறு பேர் கலந்து கொண்ட இப்தார் நிகழ்வு முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமதின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு ஏறாவூரின் சகல பாகங்களிலும் இருந்தும் நோன்பாளிகள் கலந்து கொண்டு இந்நிகழ்வை சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.



## மகா கும்பாபிசேகம்

கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு ஆரையம்பதி ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த கும்பாபிசேக பூர்த்தி தின மகா சங்காபிசேகம் நேற்று காலை சிறப்பான முறையில் நடைபெற்றது.

மிகவும் பண்டைய முருகன் ஆலயங்களுல் ஒன்றாக கருதப்படும் ஆரையம்பதி ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தின் மூலமூர்த்தியாக வேல்கொண்டு வழிபடப்பட்டுவருகின்றது. கிழக்கு மாகாணத்தில் ஆகமம் முறைகொண்ட ஆலயங்களுல் ஒன்றாக இருந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வீடு வழங்கி உதவி

அரசாங்கம் வழங்கும் உதவிகளுடன் மக்களும் பங்களிப்பினை வழங்கும்போதே அவை பூரண வெற்றியை அடையும் என தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளர் கே.ஜெகநாதன் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தேசிய வீடமைப்பு வாரத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றுவருகின்றன. இதன்கீழ் கடந்த ஞாயிற்றுக்கிழமை உரிமை தினமாக பிரகடனப்படுத்தப்பட்ட இன்றையா நாளில் பிரதேச செயலகத்துக்கு ஒரு வீடு அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.



## மகாஜன கல்லூரியின் 140து ஆண்டு விழா

மட்டக்களப்பு மகாஜன கல்லூரியின் 140ஆவது ஆண்டு நிறைவு விழா, கடந்த செவ்வாய்க்கிழமை வெகு சிறப்பாக இடம்பெற்றது. ஆரம்ப நிகழ்வாக கல்லூரி கொடியேற்றப்பட்டு தொடர்ந்து நினைவு ஆண்டாக தாமரை தடாகத்தில் தாமரை கன்றுகள் நாட்டப்பட்டது. அதனை தொடர்ந்து ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து மட்டக்களப்பு நகரை சுற்றி பவணி மேற்கொண்டனர். மட்டக்களப்பு நகர் மத்தியில் அமைந்துள்ள மகாஜன மகளிர் கல்லூரி 1875ஆம் ஆண்டு மெதடிஸ்த மிசன் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 2004ஆம் ஆண்டு இப்பாடசாலை பெண்கள் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டு தற்போது பெண்கள் கல்லூரியாக திகழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளகப்....

வெகுசன அமைப்புக்கள் சேர்ந்தே கூட்டாகக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன.

மார்ச் மாதம் 28வது கூட்டத்தொடரில் தொடக்கவுரை ஆற்றிய போதும், கடந்த மாதம் 29வது கூட்டத்தொடரில் தொடக்கவுரை ஆற்றிய போதும் ஐ. நா. மனித உரிமை ஆணையாளர் உள்ளகப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதாயின் அது பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்தாலோசித்தே உருவாக்கப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கியிருந்தார்.

அவ்வாறான ஆலோசனை செயன்முறை ஒன்று நடைபெற்று வருவதாக இலங்கை வெளிநாட்டமைச்சகம் அண்மையில் தெரிவித்துள்ள நிலையிலேயே இக்கடிதம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

மேலும் ஐ. நாவின் வதிவிடப் பிரதிநிதி ஜூன் 4ம் திகதி கொழும்பில் இடம்பெற்ற மீள்குடியேற்றம் சம்பந்தமான முழுமையான கொள்கை வரையறை மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தை உருவாக்கல்" எனும் தலைப்பில் இடம்பெற்ற நிதி வழங்காளர் மாநாட்டில் உள்ளகப் பொறிமுறை ஒன்றிற்கு ஐ. நா நிதி வழங்கத் தயார் என்று கூறியிருந்தமையை இக்கடிதத்தில் இவ்வமைப்புக்கள் கண்டித்துள்ளன.

செப்டெம்பரில் ஜெனீவா அறிக்கை வர முன்னரே இப்படியான அறிவிப்புக்கள் தவறானவை என்றும் அவை ஐ. நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையின் பெறுமதியைக் குறைக்கும் தன்மையானவை என்றும் இவ்வமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வறிவிப்பு தொடர்பில் ஐ. நா. மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் கலந்தாலோசிக்-கப்பட்டதா என்று கேள்வியையும் கடிதம் எழுப்புகின்றது.

## மூதூரில் இருந்து தௌபீக்

மூதூர் முக்கியஸ்தர்களின் ஒன்றுகூடலின் போது எதிர்வரும் பொதுத் தேர்தலில் மூதூரிலிருந்து முன்னாள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திடீர் தௌபீக்கை களமிறக்குவதென ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. மூதூர் ஷேப் ரெஸ்ட் மண்டபத்தில் 01.07.2015 அன்றே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



## நாடாளுமன்றின்...

போன்ற இடங்களில் தற்காலிக தகரக் கொட்டில்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் புதிய சனாதிபதியின் நல்லாட்சிக் காலத்தில் மீளக்குடியமர்த்தப் படுவார்கள் என வழங்கப்பட்ட உறுதி மொழிகள் தற்போது வரை நிறைவேற்றப் படவில்லை.

இந்த நிலையில் தமது மீள் குடியேற்றத்தை உடனடியாக செய்து முடிக்குமாறு கோரியே இக்கவனயீர்ப்புப் போராட்டம் நிகழவுள்ளது.

சம்பூர் மக்கள் வாழும் இடைத்தங்கள் முகாம்களின் தலைவர்கள் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள "சம்பூர் அபிவிருத்தி சிவில் அமைப்பு" இந்நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிகின்றது.

## வேட்பாளரா...

முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. பெண் வேட்பாளர் அடையாளப்படுத்தப்பட்டு விட்டதாகவும் அவரிடம் தேர்தலில் நிற்பதற்கான தூது விடப்பட்டிருப் பதாகவும் தெரிகின்ற நிலையில் எஞ்சிய இரண்டு இடங்களை நிரப்புவதற்குப் பலமான போட்டி காணப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளியான ரூபன் என்பவரால் விடுக்கப்பட்ட வேட்பாளர் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிகின்றது. இந்நிலையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் அவர்களையும் வேட்பாளர் பட்டியலில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை விண்ணபத்தில் பொதுமக்களின் கையெழுத்தை அணியொன்று நகரப் பகுதிகளில் திரட்டி வருகின்றது.

## வழக்குத்...

தமிழ் பரீட்சாத்திகள் புறக்கணிக்கப்பட்டிருந்த நிலையில் 97 புள்ளிகள் வரை எடுத்த முஸ்லீம் பரீட்சாத்திகள் அனைவரும் நேர் முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவற்றில் தகுதியானவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையினை கருத்தில் கொண்டு அதற்கு சமனானதும் அதிகமானதுமான புள்ளிகளைப் பெற்ற தமிழ் பரீட்சாத்திகளை நேர் முக பரீட்சைக்கு அழைத்து தகுதியானவர்கள் அனைவருக்கும் நியமனங்களை வழங்க ஆவண செய்யுமாறு இடருக்குள்ளான தமிழப் பரீட்சார்த்திகள் கோரியுள்ளனர்.

தமக்கும் நியாயமான தீர்வு கிட்டாவிடில் மீண்டும் சட்டத்தை நாடி தீர்வினை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தமிழ்த் தேசியத்....

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் நிலை தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார். குறித்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்தேசிய மக்கள் முன்னணி அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் வடகிழக்கு மாகாணங்களில் தேர்தலை சந்திக்கவுள்ளது. எம்மை பொறுத்தமட்டில் நடைபெறவிருக்கும் தேர்தல் ஒரு திருப்புமுனையான தேர்தல்.

இந்நிலையில் மக்கள் தெளிவான தீர்மானத்தை எடுக்க வேண்டும். நாம் கடந்த ஐந்து வருடங்களாக தொடர்ச்சியாக கூறிக் கொண்டிருக்கும் இரு தேசங்கள் ஒரு நாடு என்ற கொள்கையின் அடிப்படையில் தேர்தலை சந்திக்கவுள்ளோம்.

இந்நிலையில் தமிழ் மக்கள் தமிழ்தேசியத்தின் வளர்ச்சிக்கா? அழிவுக்கா? வாக்களிக்கப்போகி றீர்கள் என்பதை தீர்மானிக்கவேண்டும். தமிழ் மக்கள் கடந்த 60 வருடங்கள் ஜனநாயக வழி மற்றும் ஆயுத வழியில் உரிமைகளுக்காக போராடியிருக்கிறோம். இந்த வழிகளில் நாங்கள் காடுத்த உழைப்புக்கும், தியாகங்களுக்குமான விலை என்பது,தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் ஒரு தனித்துவமான தேசமாக வாழ்வது மட்டுமே. போருக்குப் பின்னரும் காணாமல்போனவர்கள் விடயம் மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் விடய ம், தமிழ் மக்களின் மீள்குடியேற்றம், காணி பறிப்பு, இராணுவமயமாக்கல், திட்டமிட்ட குடியேற் றங்கள், பொருளாதாரரீதியில் எம்மை சுரண்டல்,உள்ளிட்ட கட்டமைப்புசார் இன அழிப்புக்கு எதிரான குரலாக வடகிழக்கு மாகாணங்களில் தமிழ்தேசிய மக்கள் முன்னணி ஒலித்திருக்கின்றது.

இதற்கும்மேல் போர் நடைபெற்ற காலங்களி ல் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு மற்றும் போர்க்குற்றங்களுக்கு எதிராக சர்வதேச மட்ட த்திலும் இனத்திற்கான எம் கடமையினை நாங்கள் ஆற்றியிருக்கிறோம். தொடர்ந்தும் ஆற்ற இருக்கிறோம். இந்நிலையில் தமிழ்தேசியத்தின் உயர்ச்சிக்கா? அழிவுக்கா? தமிழர்கள் வாக்களிக்கப்போகிறார்கள் என்பதை தீர்மானிக்கவேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்றார்.

## மஹிந்தவின்...

மீண்டும் அரசியலுக்குள் நுழைந்திருப்பதால் தமிழர்களுக்கு கிடைக்கலாம் என எதிர்பார்க்கபடபடும் ஆகக் குறைந் பட்ச தீர்வுகள் கூட எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தால் வழங்க முடியாத நிலை ஏற்படும் என்று அரசியல் அவதானியொருவர் தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

---

இலகுவில் ஏயப்பதற்காக ஒரு சில சலுகைகளைச் செய்து விட்டு உள்ளதையும், உரியதையும் தங்களது சமூகத்திற்கு கொடுப்பது இனச் சமத்துவத்தினை சீர்குலைக்கும் செயலாகும் எனவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாகாணக் கல்வி அமை..

இவ்வாறு நிகழ்ந்துள்ளது. திருகோணமலை வலயக்கல்விப் பணிமனையினால் நடாத்தப்படும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் 'அவர்களின் அதிதி நிலைக்கேற்ப கொடிகளை ஏற்ற பட்டியலிடப்பட்டிருந்தனர். அதன் படி தேசியக் கொடியை கிழக்கு மாகாண கல்வி அமைச்சரும் மாகாணக் கொடியை மாகாணக் கல்வித் திணைக்கள பிரதி பணிப்பாளர் மனோகரனும் வலயக் கொடியை வலயக்கல்விப் பணிப்பாளர் விஜேந்திரனும் ஏற்றுவதாக அறிவிக்கப்பட்டது. எனினும் கல்வி அமைச்சர் திடீரென மாகாணக் கொடியை ஏற்றியதையடுத்து வலயக்கல்விப் பணிப்பாளர் தேசியக் கொடியை ஏற்றியுள்ளார். அதனையடுத்து மாகாணக்கல்விப்

## முஸ்லிம்களுக்கு....

அம்பாறையில் தமிழ் மக்களுக்கு தான் ஒரு அரசனாக விளங்குவேன் என தெரிவித்த அவர் முஸ்லீம்களுக்கு உதவ பல முஸ்லீம் அமைச்சர்கள் உள்ளனர். ஆனால் அம்பாறையில் தமிழ் மக்கள் அரசியல் அநாதைகளாகவே உள்ளனர். எனவே நான் தமிழர்களுக்கு உதவுவேன் என அவர் தெரிவித்துள்ளார். கிழக்கின் தமிழ் அமைச்சர்களால் இது வரை தமிழ் மக்களுக்கு கிடைத்ததென்ன? ஒரு நன்மை...ஒரு உதவி? ஒன்றுமேயில்லை. இது வரை இவர்களால் எதுவுமே செய்ய முடியாது போய் விட்டது. தேர்தல் வந்து விட்டது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இனி வருவார்கள். அவர்கள் ஏன் முஸ்லீம்களிடம் அடி பணிந்து அரசியல் செய்கிறார்கள். இது தான் எனது கவலை! எம்மிடம் கைகோருங்கள் என தயாகமகே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கிழக்கின் நியமனங்...

முடிகின்றது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் கிழக்கு மாகாண சபை மூலம் அவசர அவசரமாக வழங்கப்படும் இன் நியமனங்களில் அனேகமான தகுதி மிக்க அப்பாவி தமிழ் இளைஞர்கள், யுவதிகள் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே தேர்தலுக்கான தயார்படுத்தல் காலங்களில் மேற்படி செயற்பாடு பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கையானது தேர்தலுக்கான அரசியல் தொழில் இலஞ்சமாகவே கருதுகின்றேன்.

தேர்தல் கால தொழில் இலஞ்சமாகவும் தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விதமாகவும் வழங்கப்பட்டு வரும் இவ்வாறான அரச நியமனங்கள் தேர்தல் சட்ட திட்டங்களுக்கு முரணானது.

கிழக்கு மாகாண சபை வேலைவாய்ப்பிலும், நிதி ஒதுக்கீட்டிலும் தமிழர்களை மாற்றான் தாய் மனப்பான்மையுடன் பார்ப்பதும் கிழக்கு மகாண சபை ஆட்சிக்கு முட்டுக் கொடுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சர்களையும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....

மக்கள் முரசு

பிறக்கும் போதே பணக்கார மகனாக பிறக்கிற குழந்தையின் திமிர் போலத்தான், சுதந்திரத்திற்காக போராடி வெல்கின்ற போதுகூட முதலாளியாகத் தான் உருவாகியது அமெரிக்கா. ஜூலை 04 - 1776 சுதந்திரப் போர் பிரகடனத்துக்குப் பிறகு அமெரிக்க சுதந்திரப் போர் ஜோர்ஜ் வொஷிங்டன் தலைமையில் வழிநடத்தப் பட்டது. 1783 இல் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னராவது போர்களுக்கு ஓய்வு கொடுத்ததா என்றால் அதுதான் இல்லை.

1776 - 1800 வரையான காலப்பகுதிக்குள் அதாவது 24 வருடங்களுக்குள் எந்த இடைவெளியும் இல்லாமல் 5 யுத்தங்களை அமெரிக்க அரசு செய்திருக்கிறது. அதற்குள்ளும் என்ன சுவாரசியம் என்றால் 1795 வரை அந்த மண்ணின் பழங்குடியினர் (Cherokee) (நாம் அறிந்த வகையில் (red indian) உடன் போர் செய்து கொண்டே இருந்திருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இது எந்த வகையில் நியாயம்? எங்கிருந்தோ வந்த அவர்கள், தமது தாய் நாட்டிற்கெதிராக போராடுவது மட்டுமன்றி, அந்த மண்ணின் மைந்தர்களையும் அழிக்க யுத்தம் செய்து கொண்டிருந்திருக்கிறார்கள். அதில் நடைபெற்ற கறை படிந்த சம்பவங்களுக்காக அமெரிக்கர்களே இன்று வெட்கப்படுகிறார்கள்.

அதையும் விட அமெரிக்க சுதந்திரப் போருக்கு உதவி செய்து, நேரடியாகவும் பங்கு பற்றி அவர்களின் வெற்றிக்கு வழி வகுத்த பிரான்ஸ் நாட்டுடனும் கடலில் வைத்து 1798-1800 வரை பயங்கர யுத்தம் செய்திருக்கிறார்கள்.

அமெரிக்க மரைன் (us marine corps) என்றால் உலகத்தில் அறியாதவர் இல்லை. (எல்லாம் ஹொலிவூட் செய்கிற விளம்பரம்) இவர்கள் இப்பொழுது எல்லாம் கடலில் இருக்கிறார்களோ இல்லையோ கடல் தரை வான் என எல்லா இடங்களிலும் நீந்தக் கூடியவர்கள் என்றும் சொல்லலாம். இவர்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக அடிப்படையாக அன்றே அதாவது சுதந்திர போராட்ட காலத்திலேயே பெரிய கப்பல் கட்டும் தொழிற்சாலைகளை நிறுவி போர்க்கப்பல்களை கட்டத் தொடங்கி விட்டார்கள். American Seadogs என்று கடற்படையை அன்றே நிறுவி விட்டார்கள். US Seal, US Marine corps போன்ற அமெரிக்க படையணிகள் எல்லாவற்றிற்கும் அவர் தான் பெரியப்பா. இப்படியான படையணிகளில் இணைந்து கொள்ள சிறு வயது முதலே இன்றைய அமெரிக்க குழந்தைகள் ஆர்வம் காட்டுகிறார்கள்.

சரி நாம் சுதந்திரப் போரின் சில பக்கங்களை தொட்டுச் செல்லலாம். ஏற்கனவே சொல்லப்பட்ட அந்த 13 கொலநிகளும் மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒவ்வொரு கொலனியும் இன்றைய இலங்கை அளவென்று தான் சொல்லவேண்டும்.

ஒன்றாகச் சேர்த்தால் தமிழ்நாட்டின் அளவு கூட வராது. அத்தனை 13 கொலநிகளும் ஆரம்பத்தில் இன்றைய அமெரிக்க கிழக்கு கடற்கரை அதாவது அட்லாண்டிக் கடற்கரை ஓரமாகத்தான் அமைந்து இருந்தன. ஆச்சரியமாக இருக்குதல்லவா? 240 வருடங்களில் அமெரிக்க தேசமே எப்படி மாறிப் போயிருக்கிறதல்லவா? வியப்பாக இருக்கிற-தல்லவா?

இவை எல்லாம் சும்மா எழுந்தமானமாக நடை பெற்றவையா? இல்லை. சனத்தொகை அவ்வளவாக இல்லாத அந்த காலத்திலும் பிரிட்டன் என்கிற ஒரு வல்லரசுக் கெதிராக எப்படி அவர்களால் கடல் தரை இரண்டிலும் போரிட்டு வென்றிருக்க முடியும்?. அவர்களின் சுதந்திர வேட்கை, மட்டுமல்ல தியாக உணர்வு இல்லாமல் அந்த சுதந்திரத்தை பெற்றுக் கொண்டிருக்க முடியுமா? அதுவும் அந்த காலங்களில் பெண்கள் போர் என்பதில் இருந்து விலக்கப்பட்டு வீடுகளில் அடைந்திருந்த காலமல்லவா? போர் என்றால் ஆண்களுக்கு மட்டும் என்று இருந்த காலம் அல்லவா? எப்படி அந்த மக்களால் முடிந்தது? கிட்டத்தட்ட 13 வெவ்வேறு இனக் குழுமங்களுக்கு சமனான, வெவ்வேறு தலைமைகள், பொருளாதார பின்னணிகள், பேச்சு வழக்குகள் இப்படிப் பல பாகுபாடுகளைக் கொண்ட அந்த 13 கொலநிகளும் ஒன்றாய் துணிவாய், ஒற்றுமையாய் நிமிர்ந்து கொண்டதுதான் காரணமாக இருக்கலாம்.

இந்த இடத்தில் வொஷிங்டன் அவர்களின் போர்த்திறமையையும், நுண்ணறிவையும் பற்றி அமெரிக்கர்கள் பக்கம் பக்கமாக எழுதி ஆவணப்படுத்தி இருக்கிறார்கள். ஆணவம் இல்லாத, சக போர்வீரருடன் நடந்து கொள்கிற தன்மை, திட்டமிடும் இயல்பு, சிறந்த நிர்வாகி, இன்றைய அமெரிக்காவின் அத்திவாரம், இராணுவ அறிவில் மேதாவி, படைத்தளபதி மற்றும் புவியியலில் மிகவும் தேர்ச்சி பெற்ற ஒருவர் என்று அவரைப் பற்றி சொல்லிக் கொண்டே போகிறார்கள். அந்த நேரத்தில் அவரை அமெரிக்க கொலனிகள் பயன்படுத்திக் கொண்டன. எங்களுக்கும் சமீப காலத்தில் அப்படி ஒருவரைத் தெரிந்திருக்கலாம். ஆனால் நாம் பயன்படுத்த தவறிவிட்டோம் என்றும் சொல்லலாம்.

இவற்றை எல்லாம் யோசிக்க எமது மனம் சற்று கனக்கிறதல்லவா? எமது தமிழரின் சுதந்திரப் போர் வரலாற்றுத் தடத்தில் எங்கோ பிழை நிகழ்ந்ததாக ஒரு உணர்வு இருக்கிறதல்லவா? அந்த பிழையை சரி செய்ய காலம் கடந்து போய்விட்டதா? இன்றும் யாரோ வீசும் எலும்புத் துண்டுகளுக்காக, விலை போய்க்கொண்டு தான் இருக்கிறோம். பிரதேசவாதம், சாதிய வாதம், மதவாதம் பேசிக்கொண்டுதான் இருக்கிறோம். எமக்கு என்ன அருகதை இருக்கிறது? அமெரிக்கா பற்றி கதைக்க? என்று சிந்திக்க வைக்கிறது அவர்களது வரலாறுகள்.

அமெரிக்கரிடம் உங்களது சுதந்திர தினம் எப்பொழுது என்று கேட்டால் 1783 சுதந்திரம் அடைந்த ஆண்டை சொல்லமாட்டார்கள். சுதந்திர பிரகடனம் செய்துகொண்ட 1776 ஜூலை 4ம் திகதியைத்தான் சொல்வார்கள். நம்பிக்கையை வளர்க்க இப்படி செய்திருக்கலாம். உங்கள் நாட்டின் சுதந்திர தினம் எப்பொழுது என்று கேட்டால், நீங்கள் என்ன சொல்வீர்கள். ? சிந்தித்துக் கொண்டே இருங்கள்.

அமெரிக்காவின் 1800-1900 வரையான போரூற்றாண்டிற்காக மன்னிக்கவும் நூற்றாண்டிற்காக காத்திருங்கள்....




வருகை - 04

வித்தியா சாகரன்

முகப்பக்கத்திலிருந்து---

# அலுவலக காதல்



மனதிற்குள் எழும் ஒரு விதமான உணர்வே காதல் எனப்படுகிறது. பள்ளிக்காதல், பருவக்காதல், கல்லூரிக்காதல் என பலதரப்பட்ட காதல் இருந்தாலும் ஒரே அலுவலகத்தில் ஏற்படும் காதல் சற்று பிரச்சனையான ஒன்றுதான்.

வேலை பார்க்கும் இடத்திலே காதல் வசப்படுவது, வேலையில் இருக்கும் அவர்களது கவனத்தை குறைத்துவிடுகிறது. திறமையானவர்கள்கூட காதல்வசப் படும்போது, திறமையை பணியில் காட்டாமல் காதலில் காட்டிவிடுகிறார்கள். அதனால் தவறுகள் நிகழும்போது, அலுவலகத்தில் பிரச்சனைகள் தோன்றும். காதலனும், காதலியும் ஒரே இடத்தில் வேலை பார்க்கும்போது ஒருவர் மீதுதான் இன்னொருவர் கவனம் இருக்குமே தவிர, வேலையின் மீது முழு கவனமும் செல்லாது.

ஒரு ஜோடி காதலிப்பது தெரிந்துவிட்டால், இருவரில் யார் இயல்பாக தவறு செய்தாலும், அதற்கு காதல் சாயம் பூசிவிடுவார்கள். அதனால் தவறு பெரிதாக்கப்பட்டு, வேலையையே இழக்கும் சூழ்நிலை உருவாகிவிடும்.

தன் கீழ் பணிபுரியும் ஒருத்தி மீது காதல்வசப்பட்டுவிட்டால் அவளுக்கு சாதகமாக நடந்துகொள்ளத் தொடங்குவார். அவளுக்கு நிறைய சலுகைகளை வழங்குவார். அவள் செய்யும் தவறுகளையும் மறைத்துவிடுவார்.

காதலிக்கும்போது காதலி, காதலனை நோக்கியும்: காதலன், காதலியை நோக்கியும் ஈர்க்கப்படுகிறார்கள். இதனால், அதுவரை அவர்கள் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்றிருந்த நண்பர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். அந்த நண்பர்களின் உதவி அலுவலக பணிக்கு தேவை என்கிற நிலையில் அலுவலக பணிகளில் பின்னடைவு ஏற்பட்டுவிடும். அவ்வாறு காதல் வயப்பட்டாலும், அந்த காதலை பொறுமையாக வெளிப்படுத்தி, அலுவலகத்தில் நாகரீகமாக நடந்துகொண்டு, அலுவலகப்பணிகளையும் சரியான முறையில் கையாண்டால் எவ்வித பிரச்சனைகளையும் நீங்கள் சந்திக்க வேண்டியதில்லை.

தொகுப்பு : தன்யா




# இப்படியும் நடக்கலாம்

## கா.துறை அதிகாரி பலாத்காரத்தில்

ரோம் நகரில் வசித்து வந்த 16 வயது சிறுமி ஒருவர் தனது நண்பன் ஒருவருடன் இசை நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு பேருந்திற்காக காத்துக்கொண்டு நின்றுள்ளனர். அப்போது, காவல்துறை சீருடையில் அங்கு வந்த நபர் ஒருவர், தன்னுடன் காவல் நிலையம் வர வேண்டும் என கூறி அழைத்துக்கொண்டு சென்ற அந்த நபர் திறந்தவெளி பூங்காவிற்கு சென்று சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்துள்ளான்.

தகவலை பெற்று விரைந்த காவல்துறையினர், அவனை கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

## கொடூர தாய்

பிரான்ஸ் நாட்டில் அடுத்தடுத்து பிறந்த 8 குழந்தைகளையும் கொன்று, மறைத்து வைத்த கொடூரமான தாயாருக்கு அந்நாட்டு நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது. தந்தையுடன் வசித்து வந்த அவருக்கு 8 குழந்தைகள் பிறந்துள்ளது. தனது தந்தையுடன் தகாத உறவு இருந்தது என்றும் அதன் விளைவாக பீறந்ததால் தான் கொன்றதாக கூறியுள்ளார். ஆனால் மரபணு பரிசோதனையில், அப்பெண்ணின் கணவர் மூலம் தான் பிறந்தன என்பது நிரூபிக்கப்பட்டது.

## டயானா போலவே கேட்டும்



இங்கிலாந்தை சேர்ந்த இணையதளம் ஒன்று செய்தியை வெளியிட்டிருந்தது. அதில், பிரித்தானிய அரச குடும்பத்தின் பாரம்பரியமிக்க சம்பிரதாயங்களை மீறி இளவரசி கேட் மிடில்டன், இரண்டாம் எலிசபெத்தை ஓரங்கட்டும் வகையில், அரச அதிகாரங்களை தனது தாயாரான கரோல் மிடில்டன்னிற்கு வழங்கி வருவதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இளவரசி டயானா தன்னை ஒருபோதும் இளவரசியாக இல்லாமல், சாதாரணமாக பொது இடங்களில் வலம் வந்ததால் தான் விவாகரத்து பெற நேரிட்டது. அதேபோல், தற்போது இளவரசி கேட் மிடில்டன்னும் செயல்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

- உலக பணக்காரர்களில் ஒருவரான சவுதி இளவரசர் அல்வலீத்தின் சொத்து மதிப்புகள் 28.8 மில்லியன் யூரோ ஆகும். இவர் தனது சொத்துக்கள் அனைத்தையும், சமூக மேம்பாடு, பெண்கள் முன்னேற்றம், பேரிடர் நிவாரணம், இளைஞர்கள் மேம்பாடு போன்றவற்றிற்கு செலவிடப்போவதாக அறிவித்துள்ளார். எனது இறப்பிற்கு பின்னர் எனது மகன் மற்றும் மகள் ரீம் ஆகியோர் இந்த அறக்கட்டளையை பார்த்துக்கொள்வார்கள் என கூறியுள்ளார்.

- ஆப்பிள் நிறுவனத்தின் ஐபோன் தனது வாடிக்கையாளர்களுக்கு உதவும் வகையில் சிரி என்ற அப்ளிகேஷனை வடிவமைத்தது. இதன் மூலம் அறிவுப்பூர்வமாக கேட்கும் கேள்விகளுக்கு அது பதிலளிக்கும். இந்நிலையில் வாடிக்கையாளர் ஒருவர் இந்த சிரி அப்ளிக்கேஷனிடம் பூஜ்ஜியத்தை பூஜ்ஜியத்தால் வகுத்தால் என்ன கிடைக்கும் என்று கேட்டுள்ளார். அதற்கு சிரியும் வேடிக்கையாக இறுதியில் உங்களுக்கு நண்பர்களே இல்லை என்று கூறியுள்ளது. இதனால் கேள்வி கேட்ட நபர் அவமானத்தில் சோகத்தில் மூழ்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

## விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

TNPF

தம்பலகாம் தமிழ் தேசிய முன்னணியின் செயற்பாட்டாளரான குகன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இளந்தென்றல், கலைமகள், சுதன், இளம்புயல் ஆகிய விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் அக்கட்சியின் மாவட்ட அனமப்பாளர் இராஜகோண் ஹரிகரன் அவர்களால் விஜயகுமார், சரன்ராஜ், நவேந்திரன் ஆகிய கழக உறுப்பினர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.



# விளையாட்டு முரசு

## கால் பந்தாட்ட போட்டி

விளையாட்டு விபரீதமாக மாறி வீரர்களுக்கிடையில் விரிசல்களை ஏற்படுத்திவிடக்கூடாது என வடமாகாண சபை ஆளுங்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார். புங்குடுதீவு நசரேத் சனசமூக நிலையமும் நசரேத் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி, கடந்த செவ்வாய்க்-கிழமை புங்குடுதீவு நசரேத் மைதானத்தில் நடைபெற்ற போது, அதில் கலந்துகொண்டு உரையாற்றுகை-யிலேயே அவர் இவ்வாறு கூறினார். இறுதிப் போட்டியில் புங்குடுதீவு சண்ஸ்டார் அணியும் தம்பாட்டி காந்திஜி அணியும் மோதியதுடன் தம்பாட்டி காந்திஜி அணி வெற்றிபெற்றது.



## மட்டக்களப்பு அணியினர் - சாம்பியன்

கிழக்கு மாகாண மட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்று, அம்பாறை திருக்கோவில் கல்வி வலயத்தில் உள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய மாணவன் நா.லவகேஸ்வரன் சாதனை படைத்துள்ளார். இம் மாணவனின் சாதனையை கௌரவிக்கும் நிகழ்வு, கடந்த 23ஆம் திகதி பாடசாலையில் இடம்பெற்றது.

இதன்போது பாடசாலை அதிபர் எஸ்.இரவீந்திரன், முகாமைத்துவ பிரதி அதிபர் திருமதி கே.தங்கவடிவேல், கல்வி அபிவிருத்திக்கான பிரதி அதிபர் கே.தயாரூபன், உடற்கல்வி ஆசிரியர் திருமதி.ரதி குலராஜா ஆகியோர் கலந்து கொண்டு லவகேஸ்வரனை பாராட்டினர்.



## 60 அணிகள் கலந்து கொண்ட சுற்றுத் தொடர்



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தால் அகில இலங்கை கால்பந்தாட்ட லீக் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடைபெற்ற தென்கொரியா - இலங்கை நட்புறவுக் கிண்ணத்துக்கான இறுதிப்போட்டி கடந்த சனிக்-கிழமை யாழ்ப்பாணப் பல்கலை-க்கழக மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில், இறுதிநேரத்தில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய யாழ்ப்பாண லீக் அணி, சம்பியன் பட்டத்தை வெற்றிகொண்டது. இறுதிப்போட்டி லீக் அணியும் கண்டி கால் பந்தாட்ட லீக் அணியும் யாழ்ப்பாண லீக் அணியும் மோதின. பரிசில்களையும் கேடயங்களையும் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் அனுர டி சில்வா, செயலாளர் பாலேந்திரா அந்தனி ஆகியோர் வழங்கினர். இந்தச் சுற்றுப்-போட்டியில் மொத்தம் 60 லீக் அணிகள் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் அமெரிக்கா நுழைந்தது

ஏழாவது பெண்கள் உலக கிண்ணக் கால்பந்து போட்டி கனடாவில் நடந்து வருகிறது. இதில் மான்ட்ரியலில் நடந்த முதலாவது அரை இறுதிப்போட்டியில் தலா இரண்டு முறை சம்பியனான அமெரிக்கா–ஜெர்மனி அணிகள் சந்தித்தன.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் அமெரிக்க அணி 2–0 என்ற கோல் கணக்கில் ஜெர்மனியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. முதல் பாதியில் கோல் எதுவும் விழவில்லை. மொத்தத்தில் அமெரிக்க அணி 4ஆவது முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்திருக்கிறது.



## பகல் – இரவு ஆட்டம் ஆரம்பம்

டெஸ்ட் போட்டி பகல்-இரவு ஆட்டமாக நடைபெறவுள்ள நிலையில், அதற்கான பிங்க் நிற பந்தை இந்திய அணித்தலைவர் டோனி பரிசோதித்துள்ளார். டெஸ்ட் போட்டிகள் முழுவதும் பகல் நேரங்களிலே நடத்தப்பட்டன. ஆனால் பகல் நேரங்களில் அதிகமாக வெயில் தாக்கத்தால் வீரர்கள் விரைவில் களைத்து விடுகின்றனர்.

இந்நிலையில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் டெஸ்ட் போட்டியை பகல்- இரவு ஆட்டமாக மாற்ற முடிவு செய்தது.

அதன் படி, இந்த வருடம் நவம்பர் மாதம் நியூசிலாந்து அணியின் அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் பகல்- இரவு டெஸ்ட் போட்டி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டி அடிலெய்டில் நடக்கிறது.

## றொனால்டோ அளித்த வாழ்க்கை

சுனாமியில் உறவுகளை இழந்து அனாதையாக நின்ற சிறுவனை கால்பந்து வீரனாக்கி அழகு பார்த்துள்ளார் போர்த்துக்கல் அணியின் வீரர் றொனால்டோ. இந்தோனேஷியாவின் ஏக் கடற்கரை பகுதியில் 21 நாட்களுக்கு பிறகு மட்டுனிஸ் என்ற 3 வயது சிறுவன் அதிஷ்டவசமாக உயிருடன் மீட்கப்பட்டான். இச்சிறுவன் அளித்த பேட்டியில், தனது குடும்பத்தினரை சந்திப்பதும் கால்பந்து வீரராவதும் தான் தனது கனவு என்று கூறினான்.

தற்போது 17 வயது இளைஞனான மட்டுனிஸ், போர்த்துக்கல் நாட்டின் புகழ்பெற்ற ஸ்போர்ட்டிங் லிஸ்பன் அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளான்.

## இலங்கை அணிக்கு அபராதம்

பாகிஸ்தானுக்கு எதிராக பந்துவீசுவதற்கு அதிக நேரம் எடுத்துக் கொண்டதற்காக இலங்கை அணிக்கு ஐ.சி.சி. அபராதம் விதித்துள்ளது. 2-ஆவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆனால் இப்போட்டியில் இலங்கை அணி, பந்துவீசுவதற்கு கூடுதலாக ஒரு மணி நேரம் எடுத்துக் கொண்டது.

இதையடுத்து அந்த அணியின் தலைவர் அஞ்சலோ மெத்தியூஸுக்கு போட்டி ஊதியத்திலிருந்து 20 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அணியின் மற்ற வீரர்களுக்கு தலா 10 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

International Cricket Council

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கின் நியமனங்கள் சட்டவிரோதமானவை

## - சந்திரகாந்தன் தேர்தல் ஆணையருக்குக் கடிதம் -



நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் கிழக்கு மாகாண சபையின் ஊடாக இரவோடு இரவாகவும், விடுமுறை தினங்களிலும் அரச நியமனங்கள் வழங்கப்பட்டு வருவதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

உள்ளூராட்சி திணைக்களங்களுக்கும் நியமனங்கள் வழங்கப்படுவதுடன் சுகாதார அமைச்சின் சிற்றூழியர்களுக்கு நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இவற்றை தடுத்து நிறுத்துமாறும் தேர்தல்கள் ஆணையாளருக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் (ரி.எம்.வி.பி.)பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தனால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் கிழக்கு மாகாண சபையின் ஊடாக உள்ளூராட்சி திணைக்களம், சுகாதார அமைச்சு ஆகியவற்றிற்கு சனி, ஞாயிறு விடுமுறை தினங்களிலும் இரவு வேளைகளிலும் அவசர அவசரமாக அரச நியமனம், சிற்றூழியர் நியமனங்கள், வைத்தியசாலை சிற்றூழியர் நியமனங்கள் வழங்கப்பப்படுவதனை அறிய

21

## 256,852 பேர் வாக்களிக்கத் தகுதி

திருகோணமலை மாவட்டத்தில் இருநூற்று ஐம்பத்தாறாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தியிரண்டு பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக மாவட்ட உதவித் தேர்தல்கள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான சகல பூர்வாங்க அலுவலக வேலைகள் யாவும் முடிவுற்றுள்ளன. தேர்தலுக்கு தயார் நிலையில் இருப்பதாக மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் திரு.எஸ்டபிள்யூ. வெல்கம தெரிவித்தார்.

2014ஆம ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரம் 256852 வாக்காளர்கள் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளனர் எனத் தெரிவித்துள்ள அவர் இதன் பிரகாரம் சேருவல தேர்தல் தொகுதியில் 74,070 வாக்காளர்கள், திருகோணமலை தேர்தல் தொகுதியில் 86,978 வாக்காளர்கள், மற்றும் மூதூர் தேரதல் தொகுதியில் 95,804 வாக்காளர்கள் பரம்பியிருப்பதாகத் தெரிவித்தார். மிகையூதிய (போனஸ்) ஆசனத்துடன் நான்கு பாராளு மன்ற பிரதிநிதித்துவங்களுக்காக பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக்குழு சார்பாக ஏழு வேட்பாளர்கள் போட்டியிடுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மஹிந்தவின் வருகை- தமிழ் தலைமை அமைதி

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் ஒரு வேட்பாளராக முன்னாள் சனாதிபதி மஹிந்த ராசபக்ச களமிறங்கும் அனுமதியை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வழங்கியதை அடுத்து தமிழ் அரசியல் நிலமைகளில பெரும் குழப்பம் உருவாகியுள்ளது.

நல்லாட்சியின் பெயரால் புதிய சனாதிபதியை எந்த விதமான நிபந்தனைகளையும் அல்லது கோரிக்கைகளையும் முன்வைக்காமல் தமது ஆதரவைத் தெரிவித்து ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் ஆதரவைம் அதற்காக வழிப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று வழங்கப்பட்ட மஹிந்தவின் அனுமதியை அடுத்து அமைதி காக்கத் தொடங்கியுள்ளது.

தமிழர் பிரச்சனை தொடர்பாக கடும்போக்கைக் கடைத்த பிடித்துவந்த முன்னாள் சனாதிபதி

21

## "வேட்பாளராக்குங்கள்" - நகரில் கையெழுத்து வேட்டை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் பட்டியலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன் மற்றும் துரைரெட்ணசிங்கம் ஆகியோரை வேட்பாளராகத் தெரிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையுடன் அணியொன்று மக்களின் கையெழுத்துக்களைத் திரட்டி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை மாவட்ட வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுவிட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சிலரால் தகவல்கள் கசிய விடப்பட்டுள்ள போதும் தற்போது வரை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியல் முடிவுறுத்தப்படவில்லை என்ற நம்பகச் செய்தி கிடைத்துள்ளது.

இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, மற்றும் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகியவற்றுக்கு ஒவ்வொரு வேட்பாளர் இடங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் எஞ்சிய நான்கு ஆசனங்களுக்குரிய தமது வேட்பாளரை இனம் காண்பதில் இழுபறிநிலையைத் தமிழரசுக் கட்சி எதிர்கொள்வதாகத் தெரிகின்றது.

ஏற்கனவே தமிழரசுக் கட்சியின் சார்பில் முதன்மை வேட்பாளராகச் சம்பந்தன் களமிறங்கவுள்ள நிலையில் மற்றைய மூன்று ஆசனங்களில் ஒரு ஆசனத்தை பெண் வேட்பாளருக்கு வழங்கும்

21

முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.

159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738

## வழக்குத் தொடர்ந்த ஐவருக்கு மட்டும் நியமனம்

மாகாண முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு மூன்று பரீட்சைக்குத் தோற்றி அதி கூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தும் நியமனங்கள் வழங்கப்படாது தடுக்கப்பட்டிருந்த தமிழ் விண்ணப்பதாரிகளில் ஐவருக்கு மட்டும் நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

இவ்வாறு நியமனம் வழங்கப்படாமையானது தமது உரிமையை மீறுவதாக வழக்குத் தொடர்ந்த ஐவருக்கு மட்டுமே இந்நியமனம் வழங்க்கபட்டுள்ள நிலையில் ஏனைய தமிழ் பரீட்சார்த்திகளுக்கு நியமனம் வழங்கப்படவில்லை எத் தெரிகின்றது

தொழினுட்பம் அல்லாத மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் மூன்றாம் நிலைப் பதவிகளுக்கு மாவட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2013.09.23 இல் இடம் பெற்றிருந்தது.

இப்பரீட்சைக்கான ஆட் சேர்ப்பு பத்திரிகை விளம்பரத்தில் (2013 ஜுலை 03 ம் திகதி வெளியிட்ட தினகரன் பத்திரிகை ) ஆட் சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகளில் 2.2 மற்றும் 5.2 ஆகிய பந்திகளில் இவ் ஆட்சேர்ப்பானது இன விகிதாச்சாரத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மொழி மூலமான பரீட்சையில் தமிழ் பரீட்சாத்திகள் ஒருவருக்கு கூட நியமனம் வழங்கப்படாதிருந்தது.

தமிழ் பரீட்சாத்திகளில் 07 பேர் மேல் முறையீட்டு நீதி மன்றத்தில் முறையிட்டதை அடுத்து 06 பேருக்கு நேர்முகப்பரீட்சை வைத்து கல்வி தகைமை அடிப்படையில் 05 பேருக்கு நியமனம் 25.06.2015 அன்று வழங்கப்பட்டிருக்கின்றது.

21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 04.07.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.